(ஆ) ஆட்டோ ரிக்ஷா டிரைவர் இழைக்கும் குற்றங்களை அகற்றிட, போக்குவரத்துத் துறையைச் சார்ந்த துணைப் போக்குவரத்து ஆணையர் தலைமையில் போக்குவரத்துத் துறையின் பறக்கும் படையின் பிரிவு ஒன்று மற்றும் இதர துணைப் போக்குவரத்து ஆணையர்கள் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் ஆகியவர்களின் கண்காணிப்பில் தீவிர தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தணிக்கை அலுவலர்கள், புகை வண்டி நிலையங்கள், திருவள்ளுவர் மற்றும் பிராட்வே பேருந்து நிலையங்களில் தொலை தூரத்திலிருந்து வரும் மக்கள் சென்னை வந்தடையும் நேரங்களில் குறிப்பாக இத்தணிக்கையினை மேற்கொண்டு குற்றமிழைக்கும் ஓட்டுநர்கள்மீது நடவடிக்கை எடுக்கின்றார்கள். ஆட்டோரிக்ஷாக்களில் மீட்டரை புதிய கட்டணப்படி திருத்தாமல் வைத்திருத்தல், அதிகக் கட்டணம் வசூலித்தல், மீட்டர் சீல் உடைத்து ஆட்டோரிக்ஷாவைப் பயன் படுத்தியவை போன்ற குற்றங்களுக்காக ஆட்டோ ரிக்ஷா அனுமதி ரத்து செய்யப்படுகின்றது.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் மக்களுக்கு உபத்திரவம் கொடுக்காமல் அவர்களுடைய பிரயாணத் தேவையை முடித்து வைக்கிற மாதிரி ஒத்துழைப்பு கொடுக்கும்படியான மனோபாவத்தோடு பெரும்

[1989 மே 4]

பான்மையான ஆட்டோ ரிக்ஷா ஊழியர்கள் செயல்படாத பெரும் குறை இருந்து வருகிறது. இதைப்பற்றி நாம் தொடர்ந்து பேசியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித்தலைவர் போலீஸ் சூப்பரின்டென்டென்ட் போன்ற அதிகாரிகளை வைத்துக்கொண்டு, ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர் சங்கத்தினுடைய பிரதிநிதிகளை வைத்துக்கொண்டு, பேசி மீட்டர் போட்டுத் தான் ஓட்ட வேண்டும் என்று முடிவு எடுத்தும்கூட, அந்த முடிவுகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் பறக்கும் படை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தப் பறக்கும்படை சில இடங்களில்தான் பறந்துகொண்டிருக்க முடியும். பருந்து மாதிரி பூரா இடத் திற்கும் சுற்றிப் பறந்து கொண்டு இருக்க முடியாது. எனவே இந்த நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களையும், போலீஸ் அதிகாரிகளில், முக்கியமான பெரிய அதிகாரிகளையும் கூப்பிட்டு வைத்து, கட்டாயமாக இவைகள் அமல் நடத்தப்பட வேண்டும் என்று ஒரு முடிவு எடுப்பதற்கு ஏற்பாடு செய் வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின்படி தாராளமாக பேசலாம். சமீபத்தில் கோவை யில் நடைபெற்ற நிகழ்ச்சிகூட அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஏன் என்றால், இதுவரை, சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை, ஆட்டோ ரிக்ஷாவிலே மீட்டர் பொருத்தப்பட்டு இருந்தாலும் கூட அதைப் போடு வதில்லை. எங்களுக்குக் கூட பல நேரங்களிலே ரயில்வே ஸ்டேசனிலிருந்து இறங்கி குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், முக்கியமான நபர்களைக் கண்டால் ஆட்டோ ரிக்ஷா டிரைவர்களே வண்டியை நிறுதிவிட்டு, எங்கோ போடுகிறார்கள். ஏதோ எங்கள்ய்வி மீது அனுதாபப்பட்டு வருகின்ற டிரைவர்களை வைத்துத் தான் நாங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரு கிற நிலைமை கூட கடந்த காலத்திலே இருந்து வந்தது. அதை அனுசரித்துத்தான் இரண்டு மாதங்களுக்கு முன்னால்

1989 மே 4]

கோவையிலே காவல்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், இவர்களை எல்லாம் அழைத்து வைத்து கட்டாயமாக மீட்டர் போடவேண்டும், இல்லை என்றால் வேகமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அப்போது சில திட்டங்கள் கூட அங்கேத கொண்டு வரப்பட்டன. அதாவது ரயில்வே ஸ்டேசன், பஸ் ஸ்டாண்டு மற்றும் சினிமாத் தியேட்டர் போன்ற இடங்களில் வரிசையாக ஆட்டோக்கள் நிறுத்தப்படவேண்டும், காவல் துறை அதிகாரிகள் அங்கே இருக்கவேண்டும், ஒவ்வொரு ஆட்டோவிலும் பயணிகள் ஏறி உட்கார்ந்தவுடன், அந்த ஆட்டோவினுடைய நம்பரைக் குறித்துக்கொண்டு, ஏறி உட்காரக்கூடிய பயணிகள் எங்கே செல்கிறார்கள் என்பதை அவர்கள் டயரியில் குறித்துக் கொள்ளவேண்டும், அதே மாதிரி ஒரு போஸ்ட் கார்டு பயணிகளிடத்திலே கொடுக்கப்பட்டு, அந்த போஸ்ட் கார்டில் 4, 5 குறைகள் — மீட்டர் போடாமல் ஓட்டுவது, அதிகமாகக் கட்டணம் கேட்பது, பல இடங்களைச் சுற்றி, குறிப்பிட்ட இடங்களுக்குப் போய்ச் சேர்ப்பது போன்ற இப்படிப்பட்டவை அச்சிடப்பட்டு இருக்கும். போய்ச் சேர்ந்து அதிலே குறைகள் ஏதாவது இருக்குமானால் அந்தக் குறைகளின் பெயரால் அவர்கள் மார்க் செய்து போலீஸ் அதிகாரிகளுக்கு தபாலில் போட்டால் போதும். தபால் செலவு கூட இல்லை. அது கூட போஸ்ட் கார்டில் பிரிண்ட் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களில் 7,500 கார்டுகள் அங்கே இருக்கக்கூடிய பயணிகளிடத்திலே கொடுக்கப்பட்டன. ஆனால் குறைகள் என்று சொல்லி அங்கே வந்து சேர்ந்தவை 73 கார்டுகள் தான். குறைகள் இல்லாமல் இருக்கின்றனவா என்றால், இன்னமும் குறைகள் இருக்கின்றன. ஆகவே பொதுமக்களும் இத்தகைய முயற்சிக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று இந்தக் கேள்வியினுடைய பதிலின் மூலம் பொதுமக்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கும்படியான விவரங்கள் நல்ல விவரங்கள் தான். நடைமுறைக்கு வந்தால் மிகவும் பயன்படும். பயணி

கள் குறைகள் இல்லாததினால் எழுதிப் போடவில்லை என்பது அல்ல. உண்மை என்னவென்றால், அந்தப் பயணிகள் பயப்படுகிறார்கள். அவர்கள் எழுதிப் போட்டால், அவர்கள் குடியிருக்கும் வீடுகளிலே இரவிலேயே தாக்குதல் நடக்குமோ என்ற பயம்கூட அந்தப் பயணிகளுக்கு இருக்கிறது. அவ்வளவு கடுமையான விஷயம். சென்னையில் அமைச்சரவர்களின் அனுபவம் பற்றிச் சொன்னார். அதே அனுபவம் இங்கே வந்து சேர்ந்தாலும்கூட, நாங்கள் வந்து வண்டியிலிருந்து இறங்கினால், ஆட்டோ ரிக்ஷாக்களுக்காக நாங்கள் போவதில்லை. எப்படியாவது அந்த 2-ம் நம்பர் பஸ்ஸை பிடித்து கலைவாணர் அரங்கம் வந்து சேர்ந்து விடுகிறோம். அதுதான் வழி. இந்த நிலைமையை மாற்றுவதற்கு இன்னொரு காரியத்தை அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு ஒரு முடிவு எடுத்தால் நல்லது. ஆட்டோரிக்ஷா மீட்டர்களை ரிப்பேர் செய்வதற்கு வேண்டிய அதிகப்படியான ஏற்பாடுகள் இல்லை என்று சொல்கிறார்கள். கோவை மாநகரத்தில் அதுதான் பெரிய குறையாக வந்திருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? பல இடங்களில் எவ்வளவோ படித்த டெக்னியன்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்து சின்ன பங்குகள் மாதிரி ரிப்பேர் ஷாப்புகளை ஒப்பன் பண்ணி, ஒரு மீட்டர் கூட ரிப்பேர் செய்யவில்லை என்ற கம்ப்ளயின்ட் வராமல் இருக்க ஏற்பாடு செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிப்பேர் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலிக்கலாம். ஆனால் மீட்டர் போட்டு ஓட்டினால்தான் மீட்டரே ரிப்பேர் ஆகும். சென்னையில் வேண்டுமானால் போட்டு ஓட்டுகிறார்கள். பல இடங்களில் மீட்டரே போடுவதில்லை. அதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பு தேவை என்ற காரணத்தால்தான் காவல்துறையின் மூலம் கார்டுகள் வழங்கப்பட்டு பொதுமக்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் இல்லாமல் அந்த கார்டுகளை அனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டது. பொது மக்கள் ஒத்துழைப்புகூட அதற்குச் சரியானபடி இல்லை. இனி மேலாவது அதற்கு அவர்கள் ஒத்துழைப்பு கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

1989 மே 4]

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கூட்டத் தொடருக்குப் புகை வண்டி மூலம் சென்னைக்கு வரும்போது புகைவண்டி நிலையத்தில் ஆட்டோக்காரர்கள் வர மறுப்பதோடு நாங்கள் பல இன்னல்களுக்கு காலை நேரத்தில் ஆளாக நேரிடுகிறது. அதைப் போக்குவதற்காக முக்கியமான நாட்களில் புகை வண்டி நிலையத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் விடுதிகளுக்கு பஸ்கள் விடுகின்ற எண்ணம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடக்கக் கூடிய, துவங்கக் கூடிய நாளில் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஹாஸ்டல் வரைக்கும் ஏற்கனவே பஸ் வசதிகள் இருக்கின்றன என்று கருதுகிறேன். குறுக்கீடு) இருக்கிறது. ஆட்டோ ரிக்ஷாக்களுடைய தொல்லை இல்லாத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டுமென்றும், ஓட்டுநர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இருக்கிறது என்றும் சொன்னார்கள். அவை உண்மைதான். அந்தக் குறைகள் களையப்படுவதற்கு சென்னை மாநகர காவல்துறை அதிகாரிகளோடு கலந்து பேசப்பட்டுள்ளது. ஆங்காங்கே பயணிகள் அதிகமாக வரக்கூடிய இடங்களில் அந்தத் தொல்லை இல்லாமல் இருக்கின்ற வகையில் வரிசையாக ஆட்டோக்களை நிறுத்தி வைத்து, அதே மாதிரி பயணிகளையும் வரிசையாக நிற்க வைத்து, எந்தெந்த இடங்களுக்குச் செல்கிறார்கள் என்கின்ற விவரங்கள் கேட்டறிந்து, ஆட்டோவினுடைய நம்பர் குறிக்கப்பட்டு, தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதிலே ஏதாவது குறைகள் இருக்குமானால், எதிர்காலத்தில் அவற்றை நீக்குவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களிடம் பொதுமக்கள் அருகில் உள்ள இடங்களுக்கு அழைத்தால் அவர்கள் வருவதற்கு மறுப்பதும் நீண்ட தொலைவு தூரம் என்றால் வருகிறேன் என்று சொல்லுவதாகக் கூறப்படுகிறது. அவை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தகவல் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியே அது தான் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஜனவரி மாதம் இப்படிக் குறைந்த தூரத்திற்கு நாங்கள் வர மாட்டோம் நீண்ட தூரம் போனால் தான் நாங்கள் வருவோம் என்று பல ஆட்டோ ஓட்டுநர்கள் கூறியதாகச் சொல்லி புகார் வந்ததின் பேரிலே காவல்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. இருந்தாலும் கூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, பொது மக்களிலேயே விபரம் தெரிந்தவர்கள் அப்படி ஆட்டோ ரிக்ஷாவிலே ஏற்ற மறுப்பார்களேயானால், எல்லா இடங்களிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப் போல போலீஸ் கண்காணித்துக் கொண்டு இருப்பது என்பது இயலாத காரியம்—அப்படிப்பட்ட ஆட்டோக்களுடைய நெம்பரைக் குறிப்பிட்டு காவல்துறை கமிஷனருக்கு எழுதலாம் அல்லது எனக்கே கூட நீங்கள் நேரிடையாக எழுதினால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் சில நேரங்களிலே ஆட்டோ ரிக்ஷாவை எடுத்துச் செல்லும் போது, நீங்கள் பயணம் சென்று விட்டு திரும்பவும் வந்தால்தான் நாங்கள் ஆட்டோவை எடுப்போம் என்று சொல்லுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக நாங்கள் இருந்தபோதிலும் கூட, நான் சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னால், இன்னும் கூட நீங்கள் அதிகமாகத் தரலாம் என்று சொல்லுகிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலையை மாற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஒரு வேளை சட்டமன்ற உறுப்பினர்கள் போன இடத்திலிருந்து திரும்பி வருவதற்கு வழி இல்லாமல் தவிக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்திலேகூட அப்படிச் சொல்லியிருக்கலாம். இருந்தாலும்கூட பல குறைபாடுகளில் இதுவும் ஒன்றுதான். கவனிக்கப்பட வேண்டிய குறைபாடுதான்.

1989 மே 4]

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் முறையாக பெர்மிட் வாங்கி ஓடுகிற ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை எவ்வளவு? அந்த முறையான பெர்மிட் வாங்குவதற்கான விதி முறைகள் என்ன என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, முறையாக பெர்மிட் பெற்று ஓடக்கூடிய ஆட்டோக்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. பெர்மிட் வாங்குவதற்குப் போக்குவரத்துத் துறையினுடைய ஆணையாளர் அவ்வப்போது விளம்பரம் செய்து விண்ணப்பங்களைக் கோருகிறார். அந்த விண்ணப்பம் பல்வேறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, ஆட்டோ ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்கக் கூடியவர்கள், அதே மாதிரி படித்து வேலை இல்லாமல் இருக்கக் கூடிய பட்டதாரிகள், விதவைகள், எக்ஸ் சர்வீஸ்மேன், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், பல்வேறு ஆட்டோ கூட்டுறவு சங்கங்கள் என்று இப்படிப் பல்வேறு வகையான அடிப்படையில் அந்த ஆட்டோ பெர்மிட்டுகள் ஒதுக்கப்படுகின்றன.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் பெரும்பாலான ஆட்டோக்கள் பெர்மிட் இல்லாமல் காவல்துறையை சேர்ந்தவர்களே அவற்றை பினாமியாக நடத்துகிற காரணத்தால் கடுமையான விதிமுறைகள் மீறப்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். அதன் தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெர்மிட் இல்லாமல் சில ஆட்டோக்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான். அவ்வப்போது சோதனை இடப்படுகிறது. இருந்தாலும்கூட சென்னை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், செங்கை அண்ணா மாவட்டமும் இணைந்து இருக்கிற காரணத்தால், செங்கை-அண்ணா மாவட்ட பெர்மிட் வைத்துக்கொண்டு கூட இங்கே கொஞ்சம் பேர் ஓட்டிக் கொண்டிருக்கிறார்

கள். இருந்தாலும் இதற்கான சோதனை தீவிரப்படுத்தப்பட்டு குற்றங்கள் களையப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. ரா. சொக்கர்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெர்மிட் இல்லாமல் ஓடக்கூடிய ஆட்டோக்களைத் தடுப்பதற்குப் பேருந்துகளில் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் போக எப்படி இன்னொரு நம்பரும் எழுதப்படுகின்றதோ, அதே போல ஆட்டோ ரிக்‌ஷாவில் அந்த பெர்மிட் நம்பரை எழுதி விட வேண்டும் என்ற விதிமுறை செய்யப்பட்டால் இந்த பெர்மிட் இல்லாமல் ஓடக்கூடிய ஆட்டோக்களைத் தடுத்து அரசாங்கத்திற்கு முறையான வருமானம் வருவதற்கான வழிவகை செய்வதற்கு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதே அவற்றின் பெர்மிட் நம்பர் குறிக்கப்பட வேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளன. சில ஆட்டோக்களிலே குறிக்காமல் வைத்திருக்கிறார்கள். அதுகூட விதிமுறைகளின்படி தவறுதான். பெர்மிட்டினுடைய எண்கள் குறிக்கப்பட வேண்டும். குறிக்கப்பட்டிருக்கிறதா என்பது எதிர்காலத்திலே கண்காணிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் கவனத்திற்கு—இன்னும் 15 வினாக்கள் எஞ்சியிருக்கின்றன.

திருவாரூர்—சென்னை பேருந்து

194—(*வினா எண். 757) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திருவாரூர்—சென்னை—வழி—நன்னிலம்—பேருந்து விடும் செய்குறிப்பு உள்ளதா?

கள். இருந்தாலும் இதற்கான சோதனை தீவிரப்படுத்தப்பட்டு குற்றங்கள் களையப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. ரா. சொக்கர்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெர்மிட் இல்லாமல் ஓடக்கூடிய ஆட்டோக்களைத் தடுப்பதற்குப் பேருந்துகளில் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் போக எப்படி இன்னொரு நம்பரும் எழுதப்படுகின்றதோ, அதே போல ஆட்டோ ரிக்ஷாவில் அந்த பெர்மிட் நம்பரை எழுதி விட வேண்டும் என்ற விதிமுறை செய்யப்பட்டால் இந்த பெர்மிட் இல்லாமல் ஓடக்கூடிய ஆட்டோக்களைத் தடுத்து அரசாங்கத்திற்கு முறையான வருமானம் வருவதற்கான வழிவகை செய்வதற்கு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதே அவற்றின் பெர்மிட் நம்பர் குறிக்கப்பட வேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளன. சில ஆட்டோக்களிலே குறிக்காமல் வைத்திருக்கிறார்கள். அதுகூட விதிமுறைகளின்படி தவறுதான். பெர்மிட்டினுடைய எண்கள் குறிக்கப்பட வேண்டும். குறிக்கப்பட்டிருக்கிறதா என்பது எதிர்காலத்திலே கண்காணிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் கவனத்திற்கு—இன்னும் 15 வினாக்கள் எஞ்சியிருக்கின்றன.

திருவாரூர்—சென்னை பேருந்து

194—(*வினா எண். 757) திரு. மா. மண்மாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திருவாரூர்—சென்னை—வழி—நன்னிலம்—பேருந்து விடும் செய்ற்குறிப்பு உள்ளதா?

1989 மே 4]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்ட தலைநகரிலிருந்தும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னைக்குப் பேருந்துகளை விட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே நன்னிலம் பெரிய வட்டத்தினுடைய தலைநகராக இருக்கிறது. அரசு அலுவலர்களும், ஏனையோர்களும், பொதுமக்களும், வழக்கு தொடர்பாகவும் சென்னைக்கு அடிக்கடி வர இருக்கின்ற காரணத்தினாலே நன்னிலத்திலிருந்து, வட்டத் தலைநகரிலிருந்தாவது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னைக்குப் பேருந்து விட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலிருந்து வேதாரண்யம் சென்னையிலிருந்து நாகப்பட்டினம் தடங்களில் இயக்கப்படுகின்ற பேருந்துகள் சன்னாநல்லூர் வழியாக இயக்கப்படுகின்றன. சன்னாநல்லூரிலிருந்து நன்னிலம் 4 கிலோ மீட்டர் தூரத்திலேதான் இருக்கிறது. எனவே இந்த வழித் தடங்களில் இயக்கப்படும் 6 பேருந்துகளை நன்னிலம் வழியாக இயக்கினால் 8 கிலோ மீட்டர்கள் அதிகமாகிறது. பயண நேரமும், கட்டண விகிதமும் அதிகரிக்கிறது. எனவேதான் இதில் நேரடி போக்குவரத்து வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு நன்னிலத்திலிருந்து நேரடியாக சென்னைக்குப் போக்குவரத்து பேருந்து விடுவதற்குப் பயணிகள் விகிதம் அந்த அளவிற்கு இருக்குமா என்பது பரிசீலிக்கப்பட்டு எதிர்காலத்திலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது திருவாரூர்—நன்னிலம்—மயிலாடுதுறை சென்னைக்குத்தான், திருவாரூரிலிருந்து தனியார் சொகுசு பேருந்து ஒரே ஒரு வண்டி பயணி இல்லாமலே வந்து கொண்டிருக்கிறது. இப்போது தனியார் திருவாரூரிலிருந்து 3 சொகுசு பேருந்துகள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். பேருந்து திருவாரூரிலிருந்து நெரிசல் அதிகமாக சென்னைக்கு

வருகின்ற காரணத்தினாலே திருவாரூர், நன்னிலம், மயிலாடு துறை வழியாக சென்னைக்குப் பேருந்து விட்டால் வசூலில் குறைவு இருக்காது என்பதைத் தெரிவித்து அதை விடு வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர்—சென்னை வழி நன்னிலம் பேருந்துகளுடைய வழித்தடத்தை பற்றி உறுப்பினர் குறிப் பிட்டிருக்கிறார். அதுவும் பரிசீலனை செய்யப்பட்டு போதுமான அளவுக்குப் பேருந்தில் வசூலாகக்கூடிய நிலை மை இருக்குமானால் அந்த வழித் தடத்திலேயும் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட தூரம் செல்லுகின்ற பேருந்துகளில் ஜாக்கி கிடை யாது, ஸ்டூல் கிடையாது, குடிப்பதற்குத் தண்ணீர் கிடை யாது, நல்ல டயர் கிடையாது. இப்படிபட்ட நிலைமைகளை மாற்றி..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திருவாரூர்க் காரர் என்பதனால் உங்களுக்கு திருவாரூருக்கு வாய்ப்பு அளித்தேன். நீங்கள் நீண்ட தூரம் போகிறீர்கள்.

திரு. வி. தம்புசாமி: திருவாரூர் வந்து போகும் வண்டி களுக்கு இந்தச் சாமான்கள் வழங்கி வண்டி விடப்படுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் தலைவர் அவர்களே, திரு வாரூக்கு மட்டும் அல்ல. தமிழகம் முழுவதும் நீண்ட தூரம் செல்லக்கூடிய பேருந்துகளில் டயர் கன்டிஷனாக இருந்தாலும் அல்லது வண்டியினுடைய பொதுவான கண்டிஷன் நல்ல முறையிலே இருக்க வேண்டும் என்ற நோக்கம்தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. இருந்தாலும் கூட குறைகள் பேருந்துகளிலே நிறைய இருக்கின்றன என்பது போக்குவரத்துத் துறையினுடைய மானிய விவாதத்தின் போது இங்கே எடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நீண்ட தூரம் பேருந்து களை இயக்கிக்கொண்டிருக்கிறது. அதிலே முன்பெல்லாம்

சுத்தமான குடிநீர் வைக்கப்பட்டு போய் வருகின்ற பயணிகளுக்கு வசதி செய்யப்பட்டிருந்தது. கொஞ்ச நாட்களாக அந்தக் குடிநீர் வசதி கூட இல்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தக் குறைகளை எல்லாம் தெரிவித்ததற்கு பிறகு தற்போது குடிநீர் வசதி உடனடியாக செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. ஜி. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாமண்டூர் என்கிற ஊரிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களில் அனைத்து திருவள்ளுவர்பஸ்களும நிறுத்தப்படுகின்றன. பிரயாணம் செய்யகூடியக் பிரயாணிகளும் அங்குள்ள ஹோட்டல்களிலே சாப்பிட்டு சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்களே, டிரைவர், கண்டக்டரைக் கேட்டால் அரசு அப்படி உத்திரவு போட்டிருப்பதாகச் சொல்கிறார்களே. ஆகவே, வேறு நகரங்களில் நிறுத்தி, உணவு உட்கொள்வதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஊரு குறிப்பிட்ட உணவு விடுதிக்கு முன்னாலேதான் நிறுத்த வேண்டும் என்று அரசு எந்தவிதமான உத்தரவும் போடவில்லை. அதில் ஏதாவது குறைகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பாரேயானால், நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள்.

195—(*வினா எண். 869) திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், பவானி சாகர், புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய பகுதிகளில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

1989 மே 4]

சுத்தமான குடிநீர் வைக்கப்பட்டு போய் வருகின்ற பயணி களுக்கு வசதி செய்யப்பட்டிருந்தது. கொஞ்ச நாட்களாக அந்தக் குடிநீர் வசதி கூட இல்லை. இங்கே மாண்புமிகு உறுப் பினர்கள் அந்தக் குறைகளை எல்லாம் தெரிவித்ததற்கு பிறகு தற்போது குடிநீர் வசதி உடனடியாக செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்திற்கு அறி வுறுத்தப்பட்டுள்ளது.

திரு. ஜி. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாமண்டூர் என்கிற ஊரிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களில் அனைத்து திருவள்ளுவர்பஸ்களும நிறுத்தப்படுகின்றன. பிர யாணம் செய்யகூடியக் பிரயாணிகளும் அங்குள்ள ஹோட் டல்களிலே சாப்பிட்டு சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக் கிறார்களே, டிரைவர், கண்டக்டரைக் கேட்டால் அரசு அப்படி உத்திரவு போட்டிருப்பதாகச் சொல்கிறார்களே. ஆகவே, வேறு நகரங்களில் நிறுத்தி, உணவு உட்கொள்வதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஊரு குறிப்பிட்ட உணவு விடுதிக்கு முன்னாலேதான் நிறுத்த வேண்டும் என்று அரசு எந்தவிதமான உத்தரவும் போட வில்லை. அதில் ஏதாவது குறைகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பாரேயானால், நட வடிக்கை மேற்கொள்ளலாம்.

வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள்.

195—(*வினா எண். 869) திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், பவானி சாகர், புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய பகுதிகளில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

[1989 மே 4

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம், பவானி சாகர் புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய பகுதிகளில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி சாகர் டவுன்ஷிப் இடம். இருக்கின்ற நிலம் அத்தனையும் அரசாங்கத்திற்கும், பொதுப்பணித் துறைக்கும், டவுன்ஷிப்பிற்கும் சொந்தமானது. அங்கே தனியார்கள் வீடு கட்டி இருப்பதற்கோ மற்றதற்கோ வாய்ப்புகள் அதிகமாக இல்லை. ஆகவே அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்தோ அல்லது விலைக்கு வாங்கியோ வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டி, அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற ஒரு திட்டத்தின் பேரில்தான் முன்னாலிருந்த வாரியத் தலைவர் அங்கே வந்து ஆய்வு செய்து, அந்தத் திட்டம் அங்கே துவங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும், அந்தக் கோப்புகள் கூட அரசிற்கு வந்து பொதுப்பணித் துறைக்கு அனுப்பப்பட்டு, அந்த நிலத்தை விலைக்கே கொடுக்க வேண்டும். என்ற அடிப்படையிலே ஒரு உத்தரவு கூட வரவேண்டும் என்று கேட்டிருப்பதாகத் தகவல். ஆகவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசியம் செய்து தருவதற்கு முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருந்தது. ஆனால், 1988-வது ஆண்டிலே கவர்னருடைய ஆட்சிக் காலத்திலே தமிழ்நாடு முழுவதிலும் இவ்வளவு அதிகமான இடங்களிலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமா— 4(1) நோட்டிபிகேஷன் தமிழ்நாடு முழுவதிலும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. ஆகவே, ஒரு வல்லுநர் குழுவை நியமித்து எங்கெங்கே உடனடியாக 10 ஆண்டுகளுக்குள்ளே எடுத்துக் கொள்ள முடியும் என்று ஆய்வு செய்து முடிவு செய்திருக்கிறார்கள். 28—10—1988-இலே பிறப்பிக்கப்பட்ட ஆணையின் மூலம், இந்தக் கேள்வியிலே

1989 மே 4]

சொல்லப்பட்டிருக்கின்ற பவானி சாகர், புஞ்சைப்புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய பகுதிகளுக்கு இந்தக் காலக் கட்டத்திலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அவசியம் இல்லை என்ற அளவிலே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது, பவானி சாகரைப் பொறுத்த மட்டில் ஒரு செண்ட் நிலம் கூட தனியாருக்கு —அங்கேயிருக்கின்ற சுற்று வட்டாரத்து நிலங்கள் அத்தனையும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள். அணை கட்டும் போது அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே பணி புரிகின்ற அனைத்து அலுவலர்களுடைய ஆபீஸ்களும் அங்கே இருக்கின்றன. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தங்குவதற்குக் கூட இட வசதி கிடையாது. அவர்கள் சத்தியிலேயும், கோபியிலேயும், வேறு கிராமங்களிலேயும் இருந்து வருகிறார்கள். அல்லது வேறு இடங்களிலிருந்து வருகிறார்கள். ஆகவே, அங்கே நிச்சயமாக மறு பரிசீலனை செய்து, புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் கூட பின்னாலே கட்டிக் கொள்ளலாம், பவானி சாகரிலே அவசியம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து நிச்சயமாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நிச்சயமாகச் செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே 1988-வது ஆண்டிலே கைவிடப்பட்டிருக்கின்றது என்று நான் சொன்னேன். ஆனால் எப்போதும் எடுக்க முடியாது என்ற நிலை இல்லை. ஏற்கனவே பள்ளிப் பாளையம் அருகிலே ஏறத்தாழ 1300 வீடுகள் கட்டப்பட்டு கால் பகுதி வீடுகளில் கூட இன்னும் அங்கே குடியிருக்க வரவில்லை. அங்கே அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கின்றது. பவானி சாகரிலே உள்ளபடியே தேவையிருந்தால், அவசியம் இருந்தால் நிச்சயமாக 35 நோட்டிஸ் டவுன்ஸ் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதை 36-ஆக ஆக்கிவிடுவதிலே எந்தவிதமான சிரமமும் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் வந்து அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு ஏதுவாக நடவடிக்கை எடுக்க உதவி செய்தால் உள்ளபடியே,

அந்தஇடத்திலும், 35-க்குப் பதிலாக, 36-ஆவது நோடல் டவுனாக அதை ஆக்கிக் கொண்டு, அந்தத் திட்டத்தை நாம் நிறை வேற்றிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி அவர்கள் முன் வந்தால் ''அதற்கு சின்னசாமி— கந்தசாமி கூட்டுத் திட்டம்'' என்று பெயர் வைக்கலாமா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அரசிற்கு ஆட்சேபணை இல்லை (சிரிப்பு).

மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள்

196*வினா எண். 1731 (திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை) அமைச்சர்கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலை இடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

197(*வினா எண். 608 (திரு. ஆர். சிங்காரம் மற்றும்திரு. ஆர். எட்டியப்பன்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

அந்தஇடத்திலும், 35-க்குப் பதிலாக, 36-ஆவது நோடல் டவுனாக அதை ஆக்கிக் கொண்டு, அந்தத் திட்டத்தை நாம் நிறை வேற்றிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி அவர்கள் முன் வந்தால் ''அதற்கு சின்னசாமி — கந்தசாமி கூட்டுத் திட்டம்'' என்று பெயர் வைக்கலாமா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அரசிற்கு ஆட்சேபணை இல்லை (சிரிப்பு).

மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள்

196*வினா எண். 1731 (திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை) அமைச்சர்கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலை இடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

197(*வினா எண். 608 (திரு. ஆர். சிங்காரம் மற்றும்திரு. ஆர். எட்டியப்பன் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

அந்த இடத்திலும், 35-க்குப் பதிலாக, 36-ஆவது நோடல் டவுனாக அதை ஆக்கிக் கொண்டு, அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி அவர்கள் முன் வந்தால் ''அதற்கு சின்னசாமி — கந்தசாமி கூட்டுத் திட்டம்'' என்று பெயர் வைக்கலாமா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அரசிற்கு ஆட்சேபணை இல்லை (சிரிப்பு).

மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள்

196*வினா எண். 1731 (திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை) அமைச்சர்கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலை இடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

197(*வினா எண். 608 (திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு. ஆர். எட்டியப்பன் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

1989 மே 4]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து வைத்திருக்கின்ற இளைஞர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற நிவாரணத் தொகையை இரட்டிப்பாக ஆக்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையை இரட்டிப்பாக்கும் சூழ்நிலை இல்லை என்று சொன்னார்கள். நாட்டில் இருக்கின்ற கஷ்டமான சூழ்நிலையில் படித்த பட்டதாரிகள் உண்ண உணவு இன்றி, உடுக்க உடை இன்றி, இருக்க இடம் இன்றி தவித்துக் கொண்டு இருக்கும் இந்த நிலையில் அதை நீங்கள் கட்டாயமாக உயர்த்துவதற்கு அல்லது சிறிது தொகையாவது உயர்த்துவதற்கு அரசு மீண்டும் பரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து வைத்து இருக்கின்ற இளைஞர்களுக்கு வழங்கப்படுகின்ற இந்தத் தொகை ஒருதற்காலிக ஏற்பாடே அல்லாமல் இது தான் நிரந்தரம் என்று எண்ணிக்கொண்டு இன்னும் அதிகமாக கேட்பது என்பது சரியான ஒரு ஏற்பாடாக நிச்சயம் இருக்க முடியாது. அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதுதான் உரிய ஏற்பாடாக இருக்க முடியும். அதற்கான ஏற்பாட்டை இந்த அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மையங்களில் போடுகின்ற சத்துணவு இவர்களுக்கும் போட முடியுமா என்று அறிய விரும்புகிறேன். அந்த அளவுக்கு கேவலமான சூழ்நிலையில் போய்க் கொண்டிருப்பதோடு, அதே நேரத்தில் அவர்களுக்கு எத்தனை ஆண்டுகளுக்கு அந்த உதவித் தொகை கொடுக்கப்படுகிறது? அதற்கு ஒரு எல்லை உண்டா? அந்த வருடத்தையாவது நீட்டித்துக் கொடுக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

[1989 மே 4

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அர்களே, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம்—3 வருடங்களுக்குத்தான் வழங்கப்படும். பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகள் இவர்களுக்கு 100 ரூபாய்; புகுமுகக் கல்வி, பிளஸ் 2 தேறியவர்களுக்கு 75 ரூபாய், பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு 50 ரூபாய் என 3 ஆண்டுக் காலத்திற்கு வழங்கப்படும். குழந்தைகளுக்குத் தான் சத்துணவு பெரியவர்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ. படித்த வேலை கிடைக்காத மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து வைத்து வேலை இல்லாமல் இருக்கக் கூடிய, நான் ஏற்கனவே குறிப்பிட்ட பகுதியினருக்கு இதுவரையில் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. தொழில் பயிற்சி நிலையங்களிலே பயிற்சி பெற்றவர்களுக்கு இவர்களோடு ஒத்துப் பார்க்கையில் மிக விரைவில் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவர்களுக்கும் காலதாமதம் ஆகும் என்ற நிலை ஏற்பட்டால் அது பற்றியும் இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 ஆண்டுக் காலம் முடித்தவர்களுக்குத் தான் இந்த உதவித் தொகை என்ற நிபந்தனை இருக்கிறது. அதுவும் 3 ஆண்டுகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. எனவே இந்த 5 ஆண்டு நிபந்தனையை சற்றுத் தளர்த்தி 2 ஆண்டு காலம் முடித்தவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்கப்படும் என்ற நிலைக்கு அரசு வருமா என்பதோடு வேலை கிடைக்கும் வரை அந்த உதவித் தொகையை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1989 மே 4]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்த படி இது ஒரு தற்காலிக ஏற்பாடு—அவ்வளவு தான். இதையே நிரந்தரம் ஆக்கி இதிலே அதிகம் கொடுக்க வேண்டும் என்று கேட்பது அவர்கள் வேலை தேடுகின்ற முயற்சியைத் தடுத்து விடும் அல்லது அதிலே உற்சாகம் இழந்து விடுவார்கள் என்ற காரணத்தாலே இந்த நிவாரண நிதி இதே அளவில் தொடரும்

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலம் முழுவதும் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புவதோடு, ஒருவர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தன்னுடைய பெயரைப் பதிவு செய்து அதன்பிறகு அவருக்குத் திருமணம் ஆகி அவருக்கு மகன் பிறந்து அவரும் பதிவு செய்து அவருக்குத் திருமணம் ஆகின்ற வரையில் ஒரு இண்டர்வியூ கூட வருவது இல்லை. இந்தக் காலதாமதம் எதனால் ஏற்படு கிறது ? அதன் மீது அரசு மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு குடும்ப வினா மாதிரி இருக்கிறது.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வியோடு தொடர்பு இல்லாத ஒரு கேள்வியைக் கேட்டிருக் கிறார். அவர் இங்கே இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு வேலை கிடைக்கவில்லை என்கின்ற வகையிலே சொல்லி இருக்கிறார். அவர் சொல்லிய அநதக் கருத்துப் படி ஏதாவது ஒரு குறிப்பிட்ட நபர் அப்படி வேலை இல்லாமல் இருக்கிறார் என்று தெரிவித்தால் உடனடியாக இந்த அரசு கவ னிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு உதவித் தொகை வழங்கும்போது அத்தொகையை உயர்த்த இயலாது, ஆண்டுகளையும் நீடிக்க இயலாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது வழங்கக்கூடிய அந்தத் தொகை, வங்கிகளிலே அவர்களுக்குக் கணக்கு வைக்கப்

பட்டு, அந்த வங்கிக் கணக்குகளுக்கு அந்த உதவித் தொகை அனுப்பி வைக்கப்படுகிறது. அந்த இளைஞர்கள் அந்த வங்கிகளுக்குச் சென்று விவரங்களைக்கேட்டால் அவர்களுக்குச் சரியான விவரம் கிடைப்பதில்லை. அங்கே அவர்கள் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள். அதற்குப் பதிலாக, இந்த உதவித் தொகை பெறக்கூடிய அந்த இளைஞர்களுக்கு அரசே நேரடியாக தபால் மூலமாக அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள ஏற்பாட்டை பரிசீலனை செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற சங்கடங்கள் இருக்குமேயானால் மாற்று ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி நல்லதம்பி அவர்கள் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்தும் வேலை கிடைக்காமல் இப்போது சட்டமன்ற உறுப்பினராக ஆகியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஒரு துணைக் கேள்வி அனுமதிக்கப்படுகிறது. (சிரிப்பு)

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை 3 ஆண்டுக்காலம் கொடுக்கிறார்கள். ஆனால் "by fair or foul means" அங்கே பதிந்து வேலையைப் பெற்று விடுகின்றவர்கள் ஆயுள் முழுவதும் வேலையைச் செய்து, சம்பளத்தையும் ஊதியத்தையும் பெறுவதோடு, ஓய்வு காலத்தில் ஓய்வூதியமும் பெறுகிறார்கள். 20 ஆண்டுக் காலமாகியும் வேலை கிடைக்காதவர்கள் இந்த சொற்பத் தொகையை மாத்திரம் பெற்றுக் கொண்டு ஓய்வூதியத்திற்கும் வழி இலலாமல் இருக்கின்றார்களே அவர்களுக்கு, குறைந்தது 15 ஆண்டுக் காலம் ஆனால் வேலைக்கு உத்தரவாதம் உண்டு என்று சொல்கின்ற அளவிற்கு ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா; அவர்களுடைய பரிதாபமான நிலையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் ஒரு அரசு ஆணையின் மூலமாக, தட்டச்சர், சுருக்கெழுத்தாளர், எழுத்தர்

1989 மே 4]

ஆகியவர்களுடைய பெயர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பெறக் கூடாது என ஒரு தடை இருந்தது. அதன் காரணமாகத்தான், தட்டச்சர்கள், சுருக் கெழுத்தாளர், எழுத்தர் இவர்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவில் வேலைவாய்ப்பே இல்லாமல் இருந்தார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மன்றத்திலே மன்ற உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் தெரிவித் ததின் அடிப்படையில் இந்த மன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, எழுததராக தகுதி உள்ளவர்களும் 3 மாத காலத்திற்கு வேலைவாய்ப்பு இருக்குமேயானால் கூட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலேயிருந்து அவர்களுடைய பெயர்களைப் பெற்று வேலையில்லாதவர் களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம் என்கின்ற புதிய ஆணை யினை இந்த அரசு இப்போது வெளியிட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு வேலை எளிதிலே கிடைக்கக்கூடிய அல் லது குறிப்பிட்ட காலக் கெடுவிலே கிடைக்கக்கூடிய சூழ்நிலை இப்போது உருவாகி இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய அச்சம் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெமினி கேப்சூல் தொழிற்சாலை

198—(வினா எண். 850) -திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்பு மிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

கோவை குறிச்சியில் மூடப்பட்டுள்ள ஜெமனிகேப்சூல் தொழிற் சாலையைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ,ஜெமினி கேப்சூல் என்கின்ற தொழிற்சாலை 1978-ஆம் ஆண்டு மருந்து உற்பத்திக் காகத் தொடங்கப்பட்டது. பின்னாலே 1988 ஆம் ஆண்டு பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தொழிலாளர்களுடைய

1989 மே 4]

ஆகியவர்களுடைய பெயர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பெறக் கூடாது என ஒரு தடை இருந்தது. அதன் காரணமாகத்தான், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தாளர், எழுத்தர் இவர்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவில் வேலைவாய்ப்பே இல்லாமல் இருந்தார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மன்றத்திலே மன்ற உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் தெரிவித்ததின் அடிப்படையில் இந்த மன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, எழுததராக தகுதி உள்ளவர்களும் 3 மாத காலத்திற்கு வேலைவாய்ப்பு இருக்குமேயானால் கூட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலேயிருந்து அவர்களுடைய பெயர்களைப் பெற்று வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம் என்கின்ற புதிய ஆணையினை இந்த அரசு இப்போது வெளியிட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு வேலை எளிதிலே கிடைக்கக்கூடிய அல்லது குறிப்பிட்ட காலக் கெடுவிலே கிடைக்கக்கூடிய சூழ்நிலை இப்போது உருவாகி இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய அச்சம் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெமினி கேப்சூல் தொழிற்சாலை

198—(வினா எண். 850) -திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

கோவை குறிச்சியில் மூடப்பட்டுள்ள ஜெமனிகேப்சூல் தொழிற்சாலையைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ,ஜெமினி கேப்சூல் என்கின்ற தொழிற்சாலை 1978-ஆம் ஆண்டு மருந்து உற்பத்திக்காகத் தொடங்கப்பட்டது. பின்னாலே 1988 ஆம் ஆண்டு பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தொழிலாளர்களுடைய

வேலை நிறுத்தம், நிதிப் பற்றாக்குறை ஆகியவற்றால் மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிய 52 தொழிலாளர்களில் நேரடியாக 40 பேர் தங்களின் கணக்கு களை நேர் செய்து கொண்டார்கள். எனவே இத்தகைய இக் கட்டான சூழ்நிலையில் இந்த அரசு தலையிடுவதற்கான சூழல் இல்லை என்பதைத் தெரிவிப்பதோடு ஒரு விவர அறிக்கையும் அவையின் முன்னே வைக்கப்பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

கோவை சுந்தராபுரத்திலுள்ள ஜெமினி கேப்சூல்ஸ் என்ற நிறுவனம் 1978 ஆம் ஆண்டில் மருந்து மாத்திரை தயார் செய்ய ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் 52 தொழி லாளர்கள் பணி புரிந்து வந்தனர். தொழிலாளர்களின் ஒத்துழையாமை மற்றும் நிறுவனத்தின் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தை 1—5—1988 முதல் நிரந்தரமாக மூடுவது என நிர்வாகம் முடிவெடுத்து, தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய நஷ்ட ஈடு பணிக் கொடை 1987–88 ஆம் ஆண்டு ஒய்வு லீவு ஊதியம், 1987–88 ஆம் வருட போனஸ் ஆகியவை 1—5—1988-ல் பட்டுவாடா செய்யப்படும் என அறிவித்தனர்.

(2) இந்நிறுவனத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் சார் பாக செயல்படும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் இது குறித்து 7—4—1988 ஆம் தேதியன்று கோவை தொழிலாளர் நல அலுவலரிடம் மனு தாக்கல் செய்ததின் பயனாக 28—4—1988 அன்று சமரசப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பின்னர் கோவை தொழிலாளர் துணை ஆணையர் இப்பிரச்சனை குறித்து 23—5—1988, 7—6—1988, 27—6—1988, 11—8—1988, 31—8—1988 மற்றும் 12—9—1988 ஆகிய தேதிகளில் பேச்சுவார்த்தை மேற்கொண்டார். நிர்வாகம் 27—6—1988-ல் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மட்டுமே கலந்து கொண்டது. பேச்சுவார்த்தையின் போது நிர்வாகத்தின் நிதி நிலைமைப் பற்றியும், நிதியுதவி கிடைத்தால் நிறுவனத்தை இயக்க முடியுமா என்பது பற்றியும் அறிக்கை தாக்கல் செய்யு மாறு நிர்வாகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால்

1989 மே 4]

நிர்வாகம் அவ்வாறு அறிக்கை ஏதும் தாக்கல் செய்யவில்லை. அதன் பின்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொள்ளவில்லை. தொழிற் சங்கத்திடம் சங்க ஆவணங்களைத் தாக்கல் செய்ய பல முறை அறிவித்தும் அவற்றை தாக்கல் செய்யவில்லை.

(3) எனவே, இந்நிறுவனத்தைத் திறப்பதற்கு அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு, நிர்வாகமும், தொழிற் சங்கமும் ஒத்துழைக்காததால் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்த இயலவில்லை.

(4) இந்நிறுவனம் நலிவுற்று மூடப்பட்டுள்ளதால் பாதிக்கப் பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணமாக தலா ரூ. 250 தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்க தொழிலாளர் நல வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(5) மேலும், இந்நிறுவனத்திலுள்ள 52 தொழிலாளர் களில் 40 பேர்கள் அவர்களது கணக்கை நிர்வாகத்துடன் நேரடியாகப் பேசி தீர்த்துக் கொண்டு சென்றுவிட்டதாகவும் தெரிகின்றது.

(முற்பகல் 9.50)

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றபடி அங்கே இருக்கக் கூடிய தொழிலாளர்களின் கணக்கை முடித்திருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. ஆனால் உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரிக்கும் அந்தத் தொழிற்சாலை ஊழியர் கள் சி.ஐ.டி.யு. சங்கத்தில் சேர்ந்த ஒரே காரணத்திற்காக மூடி யிருக்கிறார்கள். ஆகவே, மீதம் இருக்கக்கூடிய தொழிலாளர் களுக்காவது அந்த நிறுவனத்தைத் திறந்து வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பொன். முத்துராமலிங்கம் : தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்தின் அடிப்படையில் வழக்குகள் இன்னும் நிலுவையில் தான் இருக்கின்றன. உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் அந்த வழக்குகள் பரிசீலிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : தலைவரவர்களே, இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கின்றபடி அந்தத் தொழிற் சாலை நிதி நெருக்கடி என்ற காரணத்தால் மூடப்பட்டிருக் கிறது. ஆகவே, நிதி நெருக்கடியைப் போக்கி, அந்தத் தொழிற் சாலையைத் திறக்க உத்தரவாதம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, நிதி நெருக்கடி போக்கப்பட அந்த நிறுவனம் முன் வரவேண்டும். முறைப்படி கேட்கப்பட வேண்டும். அத்தகைய சூழ்நிலைகள் உருவானால்தான் அரசு பரிசீலனை செய்து, நிதிப் பற்றாக்குறையைப் போக்க ஏற்பாடு செய்ய முடியும்.

பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள்.

199—(* வினா எண். 992)திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்குத் தர வேண்டிய பாஸ் புக் பீடி முதலாளிகளால் மறுக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : (அ) மற்றும் (ஆ) தலைவரவர்களே, பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களுக்கு கலால் பிரிவைச் சேர்ந்தவர்களால் பாஸ் புத்தகம் வழங்கப் படுகிறது. அந்தக் கலால் பிரிவு மத்திய அரசைச் சேர்ந்தது. பாஸ் புத்தகம் எதற்காக வழங்கப்படுகிறது என்றால் புகை யிலை எடுத்துச் செல்லுகிறபோது உரியவர்கள்தான் எடுத்துச் செல்லுகிறார்களா அல்லது வேறு நபர் யாராவது அந்தப் புகை யிலையை எடுத்துச் செல்லுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக மத்திய அரசைச் சேர்ந்த கலால் பிரிவினால் பாஸ் புத்தகம் வழங்கப்படுகிறது. ஆகவே, அதில் மாநில அரசு எதையும் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்சு கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1989 மே 4]

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் நெல்லை, திருச்சி வடாற்காடு மாவட்டங்களில் சுமார் 3 இலட்சம் பெண்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் சட்டத்தின்படி யார் வேலை செய்கிறாரோ அவர் பெயரில்தான் பாஸ் புக் அல்லது அடையாள அட்டை கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் அதிலே அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கலால் பிரிவு அல்ல. மேலும், பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் பெண்களாக இருப்பதால், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் பெயரில் பாஸ் புக் கொடுக்காமல் அவர்களுடைய தகப்பன் பெயரில், கணவன் பெயரில் கொடுப்பதாகச் சொல்லப் படுகிறது. அப்படி இல்லாமல் வேலையில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் பெயரிலேயே பாஸ் புக் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ் புத்தகம் என்பது மத்திய அரசின் கலால் பிரிவினரால் தரப்படுவது. 'லாக் புக்' என்பது மாநில அரசால் வழங்கப்படுவது. இரண்டிலும் கிட்டத்தட்ட ஒரே விவரங்கள்தான் இருக்கின்றன. அந்த வகையில் லாக் புக் யார் யாருக்கு வழங்கப்படவில்லையோ அவர்களுக்கு வழங்கப்பட அரசு வலியுறுத்தி, தொடர்புடைய அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறது. அதில் முறைகேடுகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவரவர்களே, பொதுவாக முதலாளிகள், இவர்கள் வீட்டுக்குள் வேலை செய்வதால்தான் பாஸ் புக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 1982-ல் சுப்ரீம் கோர்ட் இது சம்பந்தமாக தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கிறது. இந்தப் பெண் தொழிலாளர்களுக்கு வாராந்தர ஓய்வு, பிரசவ கால ஓய்வு, ஆகியவை கொடுக்கப்படுவதில்லை ; பிராவிடன்ட் ஃபண்டு பிடிக்கப் படுவதில்லை. ஆகையால் அவர்கள் ஒரு பாதுகாப்பற்ற

நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதுபற்றி தீர விசாரித்து ஒரு நல்ல முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங்களிலே சென்று வேலை செய்பவர்கள், பீடி சுற்றுபவர்கள் என்று ஒரு பகுதியினர். இன்னொரு பகுதியினர் புகையிலையைத் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று பீடி சுற்றுபவர்கள் ஒரு பகுதியினர். இல்லங்களிலே புகையிலையை எடுத்துச் சென்று பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களில் ஆண்கள், இருக்கிறார்கள்; பெண்கள் இருக்கிறார்கள்; சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு படிவங்கள்—விடுப்புப் படிவங்கள், ஊதியத்தைக் குறிக்கின்ற படிவங்கள்—எல்லாம் வைத்துக்கொள்ள தேவையில்லை என்று முன்னால் விதிவிலக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஆங்காங்கே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மையமாக வைத்து, விதிவிலக்கு வழங்கக்கூடாது; விதிவிலக்கு வழங்கியிருந்தாலும் அது ரத்து செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசின் சார்பில் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. விதிவிலக்குகள் ரத்து செய்யப்படாமல் இருக்குமானால் அப்படிப்பட்ட நிலைமைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல்.

200—(* வினா எண். 3413) **திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : தலைவரவர்களே, இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கின்றபடி அந்தத் தொழிற்சாலை நிதி நெருக்கடி என்ற காரணத்தால் மூடப்பட்டிருக்கிறது. ஆகவே, நிதி நெருக்கடியைப் போக்கி, அந்தத் தொழிற்சாலையைத் திறக்க உத்தரவாதம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, நிதி நெருக்கடி போக்கப்பட அந்த நிறுவனம் முன் வரவேண்டும். முறைப்படி கேட்கப்பட வேண்டும். அத்தகைய சூழ்நிலைகள் உருவானால்தான் அரசு பரிசீலனை செய்து, நிதிப் பற்றாக்குறையைப் போக்க ஏற்பாடு செய்ய முடியும்.

பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள்.

199—(* வினா எண். 992) திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்குத் தர வேண்டிய பாஸ் புக் பீடி முதலாளிகளால் மறுக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : (அ) மற்றும் (ஆ) தலைவரவர்களே, பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களுக்கு கலால் பிரிவைச் சேர்ந்தவர்களால் பாஸ் புத்தகம் வழங்கப்படுகிறது. அந்தக் கலால் பிரிவு மத்திய அரசைச் சேர்ந்தது. பாஸ் புத்தகம் எதற்காக வழங்கப்படுகிறது என்றால் புகையிலை எடுத்துச் செல்லுகிறபோது உரியவர்கள்தான் எடுத்துச் செல்லுகிறார்களா அல்லது வேறு நபர் யாராவது அந்தப் புகையிலையை எடுத்துச் செல்லுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக மத்திய அரசைச் சேர்ந்த கலால் பிரிவினால் பாஸ் புத்தகம் வழங்கப்படுகிறது. ஆகவே, அதில் மாநில அரசு எதையும் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 4]

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் நெல்லை, திருச்சி வடாற்காடு மாவட்டங்களில் சுமார் 3 இலட்சம் பெண்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் சட்டத்தின்படி யார் வேலை செய்கிறாரோ அவர் பெயரில்தான் பாஸ் புக் அல்லது அடையாள அட்டை கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் அதிலே அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கலால் பிரிவு அல்ல. மேலும், பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் பெண்களாக இருப்பதால், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் பெயரில் பாஸ் புக் கொடுக்காமல் அவர்களுடைய தகப்பன் பெயரில், கணவன் பெயரில் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இல்லாமல் வேலையில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் பெயரிலேயே பாஸ் புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ் புத்தகம் என்பது மத்திய அரசின் கலால் பிரிவினரால் தரப்படுவது. 'லாக் புக்' என்பது மாநில அரசால் வழங்கப்படுவது. இரண்டிலும் கிட்டத்தட்ட ஒரே விவரங்கள்தான் இருக்கின்றன. அந்த வகையில் லாக் புக் யார் யாருக்கு வழங்கப்படவில்லையோ அவர்களுக்கு வழங்கப்பட அரசு வலியுறுத்தி, தொடர்புடைய அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறது. அதில் முறைகேடுகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: தலைவரவர்களே, பொதுவாக முதலாளிகள், இவர்கள் வீட்டுக்குள் வேலை செய்வதால் தான் பாஸ் புக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 1982-ல் சுப்ரீம் கோர்ட் இது சம்பந்தமாக தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கிறது. இந்தப் பெண் தொழிலாளர்களுக்கு வாராந்தர ஓய்வு, பிரசவ கால ஓய்வு, ஆகியவை கொடுக்கப்படுவதில்லை; பிராவிடன்ட் ஃபண்டு பிடிக்கப்படுவதில்லை. ஆகையால் அவர்கள் ஒரு பாதுகாப்பற்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதுபற்றி தீர விசாரித்து ஒரு நல்ல முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங்களிலே சென்று வேலை செய்பவர்கள், பீடி சுற்றுபவர்கள் என்று ஒரு பகுதியினர். இன்னொரு பகுதியினர் புகையிலையைத் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று பீடி சுற்றுபவர்கள் ஒரு பகுதியினர். இல்லங்களிலே புகையிலையை எடுத்துச் சென்று பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களில் ஆண்கள், இருக்கிறார்கள்; பெண்கள் இருக்கிறார்கள்; சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு படிவங்கள்—விடுப்புப் படிவங்கள், ஊதியத்தைக் குறிக்கின்ற படிவங்கள்—எல்லாம் வைத்துக்கொள்ள தேவையில்லை என்று முன்னால் விதிவிலக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஆங்காங்கே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மையமாக வைத்து, விதிவிலக்கு வழங்கக்கூடாது; விதிவிலக்கு வழங்கியிருந்தாலும் அது ரத்து செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசின் சார்பில் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. விதிவிலக்குகள் ரத்து செய்யப்படாமல் இருக்குமானால் அப்படிப்பட்ட நிலைமைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல்.

200—(* வினா எண். 3413) **திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதுபற்றி தீர விசாரித்து ஒரு நல்ல முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங்களிலே சென்று வேலை செய்பவர்கள், பீடி சுற்றுபவர்கள் என்று ஒரு பகுதியினர். இன்னொரு பகுதியினர் புகையிலையைத் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று பீடி சுற்றுபவர்கள் ஒரு பகுதியினர். இல்லங்களிலே புகையிலையை எடுத்துச் சென்று பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களில் ஆண்கள், இருக்கிறார்கள்; பெண்கள் இருக்கிறார்கள்; சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு படிவங்கள்—விடுப்புப் படிவங்கள், ஊதியத்தைக் குறிக்கின்ற படிவங்கள்—எல்லாம் வைத்துக்கொள்ள தேவையில்லை என்று முன்னால் விதிவிலக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஆங்காங்கே தெரிவிக்கப் பட்ட கருத்துக்களை மையமாக வைத்து, விதிவிலக்கு வழங்கக்கூடாது; விதிவிலக்கு வழங்கியிருந்தாலும் அது ரத்து செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சம்பந்தப் பட்டவர்களுக்கு அரசின் சார்பில் அறிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. விதிவிலக்குகள் ரத்து செய்யப்படாமல் இருக்குமானால் அப்படிப்பட்ட நிலைமைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல்.

200—(* வினா எண். 3413) திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1989 மே 4]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிக்கும், பேரூராட்சிக்கும்' நிறைந்த வேறுபாடுகள் இல்லை. ஆதி திராவிடர்கள் மிகவும் வறுமையில் வாடுகிறவர்கள். பேரூராட்சியில் வாழ்கிற ஆதி திராவிடர்களுக்கு இந்த அரசு எதிர்காலத்திலாவது காலனி வீடுகளைக் கட்டித் தர முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் இவைகளின் கீழ் ஊராட்சிப் பகுதி களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாசி மக்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கிற திட்டம் இருந்தது. பேரூராட்சிப் பகுதிகளில் கட்டக்கூடாது என்று மத்திய அரசு தெரி வித்திருந்தது. ஆனாலும் நம்முடைய மாநில அரசு இப்போது பொறுப்பேற்றுக் கொண்டவுடன் 1989-90 ஆம் ஆண்டில் 25 சதவீதம் பேரூராட்சிப் பகுதிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்தது.

இதற்கிடையில் என்.ஆர்.இ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. ஆகிய இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து மத்திய அரசு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரால் ஒருங் கிணைத்து இருக்கிறார்கள். அதிலே கிராமப்புறங்களில் மட்டும்தான் இப்படிப்பட்ட வேலைகள் எடுத்துக்கொள்ளப் பட வேண்டும். பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இருப்பினும் நம்முடைய மாநில அரசு பேரூராட்சிப் பகுதிகளிலும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் வீடுகள் கட்டித் தருவது பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு முடிவெடுக்கிற வரையில் உள்ள இடைக் காலத்திலே கடன் வழங்கியாவது வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் நகர்ப்புற கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலமாக நலிவுற்றவர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கும் கடன் கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிகொண்டான் ஆற்றில் பெட் டேம் கட்டுதல்.

201—(* வினா எண். 555) திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் வட்டம், பிலாவடி, புளியஞ்சேரி, விக்ரபாண்டியம் கிராமங்கள் பாசனம் பெறும் பிலாவடி வாய்க்கால் தலைப்பில் முடிகொண்டான் ஆற்றில் பெட் டேம் (Bed dam) கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

(இ) மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) பெட் டேம் கட்டும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியத்தில் பிலாவடி, மேலராமன்சேட்டி, புளியஞ்சேரி, விக்கிரபாண்டிபுரம், மேலப்பிடாகை ஆகிய

[1989 மே 4

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு முடிவெடுக்கிற வரையில் உள்ள இடைக் காலத்திலே கடன் வழங்கியாவது வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் நகர்ப்புற கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலமாக நலிவுற்றவர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கும் கடன் கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிகொண்டான் ஆற்றில் பெட் டேம் கட்டுதல்.

201—(* வினா எண். 555) திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் வட்டம், பிலாவடி, புளியஞ்சேரி, விக்ரபாண்டியம் கிராமங்கள் பாசனம் பெறும் பிலாவடி வாய்க்கால் தலைப்பில் முடிகொண்டான் ஆற்றில் பெட் டேம் (Bed dam) கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

(இ) மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) பெட் டேம் கட்டும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியத்தில் பிலாவடி, மேலராமன்சேட்டி, புளியஞ்சேரி, விக்கிரபாண்டிபுரம், மேலப்பிடாகை ஆகிய

1989 மே 4]

கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் முடிகொண்டான் ஆற்றில் புளியஞ்சேரி வாய்க்கால் ஆற்றில் தலைப்பில் பெட் டாம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று பல முறை அப்பகுதி விவசாயிகள் விண்ணப்பித்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று அரசு பெட் டாம் கட்டிக் கொடுக்க ஆவன செய்யுமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கிராமங்கள் எல்லாம் ஏற்கெனவே முடிகொண்டான் ஆற்றில் உள்ள பிலாவடி ரெகுலேட்டர் மூலம் அதாவது நீர்கண்டிகை மூலம் பாசன வசதி பெறலாம் என்கிற நிலை இருக்கிறது. எனவேதான் அவர் குறிப்பிட்ட அந்த இடத்தில் பெட் டாம் கட்டுகிற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் அந்த இடத்தை ஆய்வு செய்து இது பய னுள்ள, தேவையான திட்டம் என அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்து அந்தப் பயனுள்ள திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பொதுவாகவே தஞ்சை மாவட்டத்திலே ஆறுகளில் பல இடங்களில் படுகைகளில் நீர் கண்டிகைகள் கட்ட வேண்டும் என்று கோரிக்கைகள் பல வந்திருக்கின்றன. அவைகளைக் கட்டுகிறபோது பாசனப் பங்கீட்டு முறையில் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே தான் ஒவ்வொரு ஆறாக எடுத்துக் கொண்டு அந்த ஆற்றைப் பற்றி ஆராய்ந்து அங்கே பெட் டாம் கட்டலாமா, ரெகு லேட்டர் கட்டலாமா என்று ஆராய்ந்து ஆய்வு செய்ய அரசு

பணித்திருக்கிறது. அந்த வகையிலே முதலாவதாக முடி கொண்டான் ஆறு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடமும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும். அதுவும் ஆய்வில் இருக்கின்றது. ஆய்வு முடிந்த பிறகு, சாதகமான சூழ்நிலை ஏற்படுமாயின் அவர்கள் விரும்பிய வண்ணம் அங்கே ஒரு 'பெட் டாம்' கட்டப்படும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

எட்டுகுடியில் வடிகால் கட்டுதல்

202—(*வினா எண். 840) (திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எட்டுகுடியில் வடிகால் வெட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுக் குடியில் வடிகால் வெட்ட திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எட்டுக்குடி வடிகால் சம்பந்தமாக 1984—வது ஆண்டில் காவிரி சீரமைப்பு கோட்டத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு செக்கிலியான் வாய்க்காலுடன் இணைப்பது என்று திட்டம் தயாரிக்கப்பட்டு செயல் படாமல் இருக்கின்றது. இந்த திட்டத்தை அரசு மேலும் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத்திட்டத்திற்கு 1986—87 ஆம் ஆண்டு கடைமடை பகுதியிலிருந்து பாப்பனார் வடிகால் வரை ரூ. 5.50 லட்சம் செலவில் மேம்பாட்டு பணிகள் மற்றும் கீழ்குமிழ் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வடிகால் அபிவிருத்தி செய்தபோதிலும் மழைக்காலங்களில் தண்ணீரை வெளியேற்றுவதிலே ஒரு பெரும் பிரச்சினை இருக்கின்றது. எனவேதான் அந்தப் பிரச்சினை தீர அந்தக் கிராமத்து மக்கள் அந்தப் பகுதியிலே உள்ள சிவன் கோட்டம் வடிகாலையும் மேம்பாடு

பணித்திருக்கிறது. அந்த வகையிலே முதலாவதாக முடிகொண்டான் ஆறு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடமும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும். அதுவும் ஆய்வில் இருக்கின்றது. ஆய்வு முடிந்த பிறகு, சாதகமான சூழ்நிலை ஏற்படுமாயின் அவர்கள் விரும்பிய வண்ணம் அங்கே ஒரு 'பெட் டாம்' கட்டப்படும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

எட்டுகுடியில் வடிகால் கட்டுதல்

202—(*வினா எண். 840) (திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எட்டுகுடியில் வடிகால் வெட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுக் குடியில் வடிகால் வெட்ட திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எட்டுக்குடி வடிகால் சம்பந்தமாக 1984—வது ஆண்டில் காவிரி சீரமைப்பு கோட்டத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு செக்கிலியான் வாய்க்காலுடன் இணைப்பது என்று திட்டம் தயாரிக்கப்பட்டு செயல் படாமல் இருக்கின்றது. இந்த திட்டத்தை அரசு மேலும் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத்திட்டத்திற்கு 1986—87 ஆம் ஆண்டு கடைமடை பகுதியிலிருந்து பாப்பனார் வடிகால் வரை ரூ. 5.50 லட்சம் செலவில் மேம்பாட்டு பணிகள் மற்றும் கீழ்குமிழ் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வடிகால் அபிவிருத்தி செய்தபோதிலும் மழைக்காலங்களில் தண்ணீரை வெளியேற்றுவதிலே ஒரு பெரும் பிரச்சினை இருக்கின்றது. எனவேதான் அந்தப் பிரச்சினை தீர அந்தக் கிராமத்து மக்கள் அந்தப் பகுதியிலே உள்ள சிவன் கோட்டம் வடிகாலையும் மேம்பாடு

செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல மேல் பாதி வடிகாலினையும் அகலப்படுத்தி தூர் வாரி செக்கிலியான் வாய்க்காலுடன் இணைக்க இயலுமா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. ஆய்வின் அறிக்கை வந்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அந்த ஆய்வுக்குழு அறிக்கை முடித்து அது சீரமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு அறிக்கை வந்தவுடன் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்.

203—(*வினா எண். 2107) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி ராஜா தோப்பில் அணைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ரூ. 216 லட்சம் செலவில், அந்த மதிப்பீட்டில் உள்ள இத்திட்டத்தின் மூலம் 500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனவசதி உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கூடுதல் உணவு உற்பத்தி 426.83 டன்கள் ஆகும். நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 27.5 மில்லியன் கன அடி தண்ணீர் ஆகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல மேல் பாதி வடிகாலினையும் அகலப்படுத்தி தூர் வாரி செக்கிலியான் வாய்க்காலுடன் இணைக்க இயலுமா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. ஆய்வின் அறிக்கை வந்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அந்த ஆய்வுக்குழு அறிக்கை முடித்து அது சீரமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு அறிக்கை வந்தவுடன் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்.

203—(*வினா எண். 2107)திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி ராஜா தோப்பில் அணைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ரூ. 216 லட்சம் செலவில், அந்த மதிப்பீட்டில் உள்ள இத்திட்டத்தின் மூலம் 500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனவசதி உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கூடுதல் உணவு உற்பத்தி 426.83 டன்கள் ஆகும். நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 27.5 மில்லியன் கன அடி தண்ணீர் ஆகும்.

(இ) இத்திட்டத்திற்கென 17.76 ஏக்கர் வனத்துறை நிலங்கள் தேவைப்படுவதால் வனத்துறையின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வொத்திசைவு கிடைக்கப்பெற்றதும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அரசு விரைந்து முடிவெடுக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதாகச் சொன்னதற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் நான் காட்பாடி தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தத் திட்டத்தை அல்லது அணை கட்டுகின்ற திட்டங்களை நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற அந்த பாரஸ்ட்நிலம் எடுப்பதிலே கால தாமதம் ஆகின்றது என்று சொல்லப்படுகின்றதே, இதை விரைவு படுத்த இந்த ஆண்டிலேயாவது திட்டம் ஆரம்பிக்கப்படுமா என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை நிலத்தை இத்திட்டத்திற்கென அளிப்பதற்கு வனத்துறையால் ஒத்திசைவு கொடுக்கப்பட்டது. அந்த 17.76 ஏக்கர் நிலங்கள் கொடுக்க வனத்துறை மூலம் ஒத்திசைவு தொடர்பாக கடிதம் ஒன்று எழுதப்பட்டது. இந்திய அரசு அதன் எல்லைகோடுகளை சரியாக குறிக்கவில்லை என்று மறுபடியும் திருப்பியனுப்பியிருக்கிறது. மறுபடியும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு அந்தக் கடிதம் சென்று, மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் அது குறித்து அதிகாரிகளோடு கலந்துபேசி சரியாக அந்த எல்லைகளை வரையறுத்து மீண்டும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது. அந்த உத்தரவை எதிர்பார்த்து வேலைகள் நடக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனத்துறை உத்தரவை எதிர்பார்த்து வேலைகள் நடக்கலாம். செண்பகத்தோப்பு ஆனாலும், ராஜா தோப்பு ஆனாலும் இந்தப் பதிலைத்தான் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இந்த அணைக் கட்டுகின்ற திட்டங்களாலே உணவு உற்பத்தி எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லி விரைவாக வனத்துறையினுடைய உத்தரவை பெற்று அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே' இப்படிப்பட்ட அணைகளைக் கட்டுவதற்கு ஒரு பெரிய தலைவலியாக இருப்பது இப்போது மைய அரசு போட்டிருக்கிற சட்டந்தான். வனத் துறை பகுதியிலிருந்து நாம் 50 ஏக்கர் நிலம் அணை கட்டுவதற்காக எடுக்க வேண்டுமென்றால், அதற்காக 100 ஏக்கர் ரெவின்யூ லேண்ட்டை திருப்பி வனத் துறைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் கொடுப்பதாக ஒத்துக்கொண்டால், அடுத்து அவர்கள் கிளப்புகிற கேள்வி, சரளைக்கல் நிலமாக இருக்கிறது, ஓடைப் புறம்போக்காக இருக்கிறது. இது தேவையில்லை என்று சொல்வி நன்னிலம் பகுதியில் நஞ்சை நிலமாகக் கொடுங்கள் என்று கேட்பார்கள் போல இருக்கிறது. அதையும் ஒத்துக்கொண்டு செய்தால், இப்போது ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். டெபாசிட் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே போனால் தமிழ்நாட்டிலே எந்த அணையையும் கட்ட முடியாத சூழ்நிலை உருவாகும். இதை மத்திய அரசுக்கு இந்த அரசு விவரித்து கடிதம் எழுதியிருக்கிறது. எழுதும், மீண்டும் வாய்ப்பு கிடைக்கும்போது நேரிலும் இது குறித்து வாதாடும் இத்தகைய தடைகளை அகற்றினால்தான் பாசனத்திற்காகக் கட்டப்படும் அணைகளை விரைந்து கட்ட முடியும்.

மலைவாழ் மக்களுக்கு சலுகைகள்.

204—(*வினா எண். 454) திரு. எம். சிரங்கன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்களுக்கு உள்ள சலுகைகள் மேட்டூர் வட்டபால மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கும் நீட்டிக்கப்படுமா?

அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இந்த அணைக் கட்டுகின்ற திட்டங்களாலே உணவு உற்பத்தி எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லி விரைவாக வனத்துறையினுடைய உத்தரவை பெற்று அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே' இப்படிப்பட்ட அணைகளைக் கட்டுவதற்கு ஒரு பெரிய தலைவலியாக இருப்பது இப்போது மைய அரசு போட்டிருக்கிற சட்டந்தான். வனத் துறை பகுதியிலிருந்து நாம் 50 ஏக்கர் நிலம் அணை கட்டுவதற்காக எடுக்க வேண்டுமென்றால், அதற்காக 100 ஏக்கர் ரெவின்யூ லேண்ட்டை திருப்பி வனத் துறைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் கொடுப்பதாக ஒத்துக்கொண்டால், அடுத்து அவர்கள் கிளப்புகிற கேள்வி, சரளைக்கல் நிலமாக இருக்கிறது, ஓடைப் புறம்போக்காக இருக்கிறது. இது தேவையில்லை என்று சொல்லி நன்னிலம் பகுதியில் நஞ்சை நிலமாகக் கொடுங்கள் என்று கேட்பார்கள் போல இருக்கிறது. அதையும் ஒத்துக்கொண்டு செய்தால், இப்போது ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். டெபாசிட் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே போனால் தமிழ்நாட்டிலே எந்த அணையையும் கட்ட முடியாத சூழ்நிலை உருவாகும். இதை மத்திய அரசுக்கு இந்த அரசு விவரித்து கடிதம் எழுதியிருக்கிறது. எழுதும், மீண்டும் வாய்ப்பு கிடைக்கும்போது நேரிலும் இது குறித்து வாதாடும். இத்தகைய தடைகளை அகற்றினால்தான் பாசனத்திற்காகக் கட்டப்படும் அணைகளை விரைந்து கட்ட முடியும்.

மலைவாழ் மக்களுக்கு சலுகைகள்.

204—(*வினா எண். 454) திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்களுக்கு உள்ள சலுகைகள் மேட்டூர் வட்டபால மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கும் நீட்டிக்கப்படுமா?

[1989 மே 4

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சீரங்கன் : பேரவைத் தலைவரவர்களே, மலைவாழ் மக்களுக்கு என்ன சலுகைகள் செய்யப்பட்டிருக்கின்றன, அங்கே எவ்வளவு மக்கள் வாழ்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, பழங்குடியினர் தொடர்ந்தாற்போல் வசிக்கும் பகுதிகளில் மொத்த மக்கள் தொகை 10,000-க்கும் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் 50 விழுக்காடுக்கும் அதிகமாக பழங்குடியினர் வசித்தால் அந்தப் பகுதி வாழ் மக்களுக்குப் பழங்குடியினர் மேம்பாட்டு துணை திட்டப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி வாழ் மக்களுளுடைய நல் வாழ்விற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சீரங்கன் : பேரவைத் தலைவரவர்களே, பாலமலையில் 21 சிற்றூர்களும், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களும் வாழ்கிறார்கள். அங்கே ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. அங்கே குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடையாது. அங்கே 3 ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்குக் கூரையே கிடையாது. ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் அங்கே போவதென்பது மிக மிகக் குறைவு. காரணம், போக்குவரத்து வசதியில்லாமல் மலைப் பாதையில் மேலே ஏறிப் போக வேண்டியதாக உள்ளதால், அப்படிப்பட்ட நிலையை அரசு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதோடு, அந்த மலைக்குப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்க விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, இது தொடர்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களிடமிருந்து சில கூடுதல்

1989 மே 4]

விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைக்கப்பெற்றவுடன் மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்டால் சேலம் மாவட்டம், பாலமலைப் பகுதியில் பழங்குடி மக்கள் மேம்பாட்டு துணைத் திட்டப் பகுதியாக அறிவிக்கப் படுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பாலமலைப் பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டப் பகுதியாக இல்லாவிட்டாலும் அப்பகுதியில் வாழும் பழங்குடியினருக்கு உரிய வசதிகள் தற்போது செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, குறைகள் ஏதாவது இருந்தால் அது பற்றி விவரமறிந்து, அதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

மாநில ஆதி திராவிடர் நலக் கமிட்டி.

205—(*வினா எண். 1413) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த பல ஆண்டு காலமாக மாநில ஆதி திராவிடர் லக் கமிட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் கமிட்டி அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம.

(ஆ) மாநில அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் அரசால் மேற்கோள்ளப்பட்டுள்ளன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக இந்தக் கமிட்டி அமைக்கப்படவில்லை. இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள்ளாகவாவது இந்த கமிட்டி அமைக்கப்படுமா? இதற்கு முந்தைய கேள்வியின்போதே நான் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கும்போது மாண்புமிகு தலைவர் அவர்கள்

1989 மே 4]

விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைக்கப்பெற்றவுடன் மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்டால் சேலம் மாவட்டம், பாலமலைப் பகுதியில் பழங்குடி மக்கள் மேம்பாட்டு துணைத் திட்டப் பகுதியாக அறிவிக்கப் படுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பாலமலைப் பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டப் பகுதியாக இல்லாவிட்டாலும் அப்பகுதியில் வாழும் பழங்குடியினருக்கு உரிய வசதிகள் தற்போது செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, குறைகள் ஏதாவது இருந்தால் அது பற்றி விவரமறிந்து, அதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

மாநில ஆதி திராவிடர் நலக் கமிட்டி.

205—(*வினா எண். 1413) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த பல ஆண்டு காலமாக மாநில ஆதி திராவிடர் லக் கமிட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் கமிட்டி அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம.

(ஆ) மாநில அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் அரசால் மேற்கோள்ளப்பட்டுள்ளன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக இந்தக் கமிட்டி அமைக்கப்படவில்லை. இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள்ளாகவாவது இந்த கமிட்டி அமைக்கப்படுமா? இதற்கு முந்தைய கேள்வியின்போதே நான் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கும்போது மாண்புமிகு தலைவர் அவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு வாருங்கள். மரபை எல்லாம் மீறக் கூடாது. நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள். நான் கேள்வியை முடிக்கப் போகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஆகவே இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிவடைவதற்குள்ளாக அமைக்கப்படுமா என்பதையும், அவ்வாறு அமைத்து அது அறிவிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலான ஆதி திராவிடர் நலக் குழுவைத் திருத்தி அமைக்கும் செயற் குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 206, 207 மற்றும் 208 ஆகியவை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தின் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல்கோரல்

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் பணிக்குழுக்களில் இடம் பெறுவோர் குறித்து.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியுடன் ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறைத் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ், பயன்பெறும் பயனீட்டாளர்களின் — அதாவது பெனிபீஷியரீஸ் — பெயர்ப் பட்டியலைத்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு வாருங்கள். மரபை எல்லாம் மீறக் கூடாது. நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள். நான் கேள்வியை முடிக்கப் போகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஆகவே இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிவடைவதற்குள்ளாக அமைக்கப்படுமா என்பதையும், அவ்வாறு அமைத்து அது அறிவிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமி டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலான ஆதி திராவிடர் நலக் குழுவைத் திருத்தி அமைக்கும் செயற் குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 206, 207 மற்றும் 208 ஆகியவை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தின் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல்கோரல்

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் பணிக்குழுக்களில் இடம் பெறுவோர் குறித்து.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியுடன் ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திதிற்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறைத் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ், பயன்பெறும் பயனீட்டாளர்களின் — அதாவது பெனிபீஷியரீஸ் — பெயர்ப் பட்டியலைத்

1989 மே 4] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

தயாரிக்க ஒரு டாஸ்க் ஃபோர்ஸ்—பணிக்குழு ஒன்று நியமனம் செய்ய அரசு உத்தரவிட்டதையும் அந்தப் பணிக் குழுவின் அந்தப் பகுதி சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களையும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற என் கோரிக்கையை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி நல்ல முடிவெடுப்பதாகவும், இந்த அவையிலே அறிவித்தார்கள்.

ஆனால் அதற்கிடையில் இந்தக் குழு — பணிக் குழு— அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பயனீட்டாளர்களையும் தேர்ந்தெடுக்கும் பணி முடிவடைகிற நிலையில் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் உள்ள ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால் அந்தப் பகுதிகளில் இருக்கிற தி.மு.க. நண்பர்கள் அந்தப் பணிக் குழுவில் தங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்களை மட்டும்தான் போட வேண்டும் என்றும், அதிகாரிகளைப் பயமுறுத்தியும், நிர்ப் பந்தித்தும் வருகிறார்கள். குறிப்பாக, எனது சட்டமன்றத் தொகுதியில் அங்குள்ள நகராட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளையும் வட்ட ஆட்சியரையும் **
தி. மு. க. தலைவர்களையே டாஸ்க் ஃபோர்சில் முழுமையாகச் சேர்க்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்து வருகிறார் என்பதை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல் போன்ஸ் சட்டம் பயின்றவர்.......

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்குச் சம்பந்தப் படாத ஒருவரைப்பற்றி பேசுவது முறையல்ல. அதுவும் பெய ரைக் குறிப்பிட்டுச் சொல்வது முறையல்ல. பொதுவாகச் சொன்னாலே அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு விளக்கம் தருவார். தலைவர் அவர்களே, அது சம்பந்தமாகச் சொல்லப் பட்ட பெயரை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த ஒரு வரி மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அதற்கான டாக்குமென்டரி எவிடென்ஸ்களை நான் நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்திருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை—சட்டமன்ற உறுப்பினர்களை—ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை ஒதுக்கிவிட்டு — பணிக்குழு என்கிற பெயரில்—பின்வாசல் வழியாக கட்சி அரசியலை—தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்புக்களின்மீது திணிப்பது எந்த வகையிலே நியாயம் என்பதை இந்த அரசு யோசிக்க வேண்டும். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில்கூட எல்லா கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கும் அந்தக் குழுவில் இடம் தரப்பட்டது. அதைப் போலவே நியாய விலைக் கடைகளுக்கு அமைக்கப்படுகிற விஜிலென்ஸ் குழுவுக்கு தி.மு.க. நண்பர்கள் மட்டுமே இடம் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். அது சீரான விநியோகத்தைத் தருமா என்பதையும் அரசு யோசிக்க வேண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரத்தைத் தருகிறோம் என்று சொல்லி ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கிருந்த அதிகாரத்தையும் எடுத்துவிட்டார்கள். சமீப காலத்தில் கைத்தறி வார விழாவின்போது பெரிய போஸ்டர்கள் எல்லம்மா அச்சடித்து. . . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே தாங்கள் அனுமதி கொடுத்ததும் அவர் ஒரு குட்டிப் பிரசங்கத்தையே இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு பிரச்சினை என்றால் ஒரு கேள்வி வடிவத்தில் இரண்டொரு வாக்கியங்களில் கேட்பது தான் முறையானது, அதுமாத்திரமல்லாமல் இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் நேற்றைய தினமே என்னிடம் தங்கள் அறையில் பேசியிருக்கிறார். அது குறித்து சில தாள்களையும் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். நான் உடனடியாக அதைக் குறித்து உள்ளாட்சித்துறை அமைச்சரிடம் பேசி சட்டமன்ற உறுப்பினர்

களையும் அந்தக் குழுவில் இணைக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, அதற்கான ஆணை தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆக நேற்றைய தினம் என்னிடம் பேசிவிட்டு அதற்கான நடவடிக்கை எடுத்த பிறகும்கூட இன்றைய தினம் வேண்டுமென்றே தி.மு.க. அரசைக் குற்றஞ்சாட்டுவதுபோல ஒரு நீண்ட உரையை இங்கே ஆற்றிக் கொண்டிருப்பது---இந்த அவையிலே தொடர்ந்து 'ஜீரோ அவர்' என்கிற பெயரால் கடைப்பிடிக்கப்படுமானால் அது நல்லதல்ல என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் உட்காரலாம். என்னிடத்தில் இசைவு கேட்கிறபோது ஒரு செய்தியை எடுத்துச் சொல்லி, முதலமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெறுவதற்காக நீங்கள் இசைவு கேட்டீர்கள். முதலமைச்சருடைய ஒப்புதல் பெற்று நாங்களும் அதற்கு இசைவு அளித்தோம். எனவே, அவற்றைச் சுருக்கமாகச் சொல்லி அவர்களுக்கு விடை அளிப்பதற்கு வாய்ப்பு அளிப்பதுதான் முறையே தவிர, நீங்கள் அதிலே ஒரு முழுமையான விளக்கம் அளிப்பது முறையாகாது. இப்போது உங்கள் வினா முடிந்து விட்டது, அதற்கான விளக்கமும் முடிந்து விட்டது. அடுத்து திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

(ஆ) பெண் போலிசார், சீருடை பதவி உயர்வு குறித்து

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் முன்பு முதல்வராக இருந்த காலத்திலேதான் பெண் போலீசாரை நியமித்தார்கள். அவர்கள் நியமிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் கூட ஒரு சப் இன்ஸ்பெக்டருக்குக் கூட பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆண் சப் இன்ஸ்பெக்டர்களுக்கு 10 ஆண்டுகளில் பதவி உயர்வு கிடைக்கிறது. இதற்கு உள்ள வித்தியாசம் என்ன? அதோடு பெண் போலீசார் உடுப்பு போடும்போது அவர்களுக்கு சற்றுச் சிரமமாக இருக்கின்றது. டாக்டர்கள்போடுவது போன்று ஒரு புஷ் கோட்டை பெண் போலீசார் மேலாகப் போட்டுக் கொள்ளலாம் என்ற ஒரு நிலைமை வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ? அடுத்து பெண் குற்றவாளிகளை பெண் போலீசாரே, பெண் சப்-இன்ஸ்பெக்டர்களே விசாரிக்கக்கூடிய ஒரு தன்மை

களையும் அந்தக் குழுவில் இணைக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, அதற்கான ஆணை தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆக நேற்றைய தினம் என்னிடம் பேசிவிட்டு அதற்கான நடவடிக்கை எடுத்த பிறகும்கூட இன்றைய தினம் வேண்டுமென்றே தி.மு.க. அரசைக் குற்றஞ்சாட்டுவதுபோல ஒரு நீண்ட உரையை இங்கே ஆற்றிக் கொண்டிருப்பது---இந்த அவையிலே தொடந்து 'ஜீரோ அவர்' என்கிற பெயரால் கடைப்பிடிக்கப்படுமானால் அது நல்லதல்ல என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் உட்காரலாம். என்னிடத்தில் இசைவு கேட்கிறபோது ஒரு செய்தியை எடுத்துச் சொல்லி, முதலமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெறுவதற்காக நீங்கள் இசைவு கேட்டீர்கள். முதலமைச்சருடைய ஒப்புதல் பெற்று நாங்களும் அதற்கு இசைவு அளித்தோம். எனவே, அவற்றைச் சுருக்கமாகச் சொல்லி அவர்களுக்கு விடை அளிப்பதற்கு வாய்ப்பு அளிப்பதுதான் முறையே தவிர, நீங்கள் அதிலே ஒரு முழுமையான விளக்கம் அளிப்பது முறையாகாது. இப்போது உங்கள் வினா முடிந்து விட்டது, அதற்கான விளக்கமும் முடிந்து விட்டது. அடுத்து திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

(ஆ) பெண் போலிசார், சீருடை பதவி உயர்வு குறித்து

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் முன்பு முதல்வராக இருந்த காலத்திலேதான் பெண் போலீசாரை நியமித்தார்கள். அவர்கள் நியமிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் கூட ஒரு சப் இன்ஸ்பெக்டருக்குக் கூட பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆண் சப் இன்ஸ்பெக்டர்களுக்கு 10 ஆண்டுகளில் பதவி உயர்வு கிடைக்கிறது. இதற்கு உள்ள வித்தியாசம் என்ன? அதோடு பெண் போலீசார் உடுப்பு போடும்போது அவர்களுக்கு சற்றுச் சிரமமாக இருக்கின்றது. டாக்டர்கள்போடுவது போன்று ஒரு புஷ் கோட்டை பெண் போலீசார் மேலாகப் போட்டுக் கொள்ளலாம் என்ற ஒரு நிலைமை வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அடுத்து பெண் குற்றவாளிகளை பெண் போலீசாரே, பெண் சப்-இன்ஸ்பெக்டர்களே விசாரிக்கக்கூடிய ஒரு தன்மை

எல்லாம் உருவாகும் நிலைமையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, பெண் போலீசாரை டி.எஸ்.பி. வீட்டுக்கு பந்தோபஸ்த்துக்காக அல்லது வேறு எதற்காகவாவது அனுப்புகிறார்களே ? அந்த மாதிரி எல்லாம்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்டது உடை பற்றி. நீங்கள் பேசுவது காவல் துறைமானியக் கோரிக்கையிலா ?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அங்கு ஆர்டர்லியாக அனுப்புவதிலே பெண் போலீசாரை அனுப்பாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் குறிப்பிட்டதைப் போல காவல் துறை மானியத்திலே பேச வேண்டிய கருத்துக்களை அம்மையார் அவர்கள் இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். உடையைப் பொறுத்தவரையில் அது எவ்வாறு திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதை அரசு காவல் துறையோடு கலந்து பேசி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆர்டர்லி அனுப்புவதைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி என்னிடத்தில் விவரம் இல்லை. ஒருவேளை பெண் போலீஸ் அதிகாரிகள், பெரிய அதிகாரிகளாக இருந்தால் அவர்களுககு ஆர்டர்லி அனுப்பும்போது அந்தப் பெண்கள் அனுப்பப் படலாம். ஆண் போலீஸ் அதிகாரிகளுக்கு அவர்கள் அனுப்பப் படத் தேவையில்லை என்ற கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, புஷ் ஷர்ட் என்பது கர்ப்பமுற்ற பெண்களுக்கு மட்டுமே வெள்ளைக்காரர் காலத்தில் போடப்படுவது. ஏனென்றால் அது காலம் ஆக ஆக அதற்குத் தகுந்தவாறு அந்தச் சட்டை விரிந்து கொடுக்கவேண்டும் என்பதற்காக போடப்பட்டது தான் புஷ் ஷர்ட்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : It is pushing towards......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதையும் எதிர்பார்த்துப் போடலாம். (சிரிப்பு).

உரிமைப்பிரச்சினை.
(அ) மக்கள் குரல்நாளேடு மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் மக்கள் குரல் நாளேட்டின் மீது ஒருஉரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அறிவிப்பைக் கொடுத்து உள்ளார்கள். இது எவ்வாறு உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குறுக்கீடு). தயவு செய்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் உட்காரலாம். திரு. அப்துல் லத்தீப் உட்காரலாம். திரு. சி. கோவிந்தராஜன் தொடரலாம். (தொடர்ந்து திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நின்று கொண்டிருந்தார்). திரு. கோவிந்தராஜன் அவர்கள் பேசுங்கள். (மேலும் சில உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்). திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் தொடரலாம் ; மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். திரு. அப்துல் லத்தீப் கவனிக்க வேண்டும். நீங்கள் உட்காரவில்லை என்றால் நான் இன்னும் ஒரு படி மேலே போக வேண்டியிருக்கும். அது அவ்வளவு நல்லதல்ல. நீங்கள் உட்காரலாம். இப்போது, திரு. சி. கோவிந்தராஜன்.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே மக்கள் குரல் நாளேடு சென்னை 28-4-1989, வெளியூர் 29-4-1989 இதழில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது. '' மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழகத்தில் சந்தர்ப்பவாத போக்கில் செயல்படுகிறது என்றும், மேல் சபையைத் திரும்ப ஏற்படுத்துவது பற்றி தீர்மானம் சட்டசபையில் வந்தபோது மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சபைக்கு வராமலேயே இருந்து விட்டனர் என்றும் கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறி இருக்கிறது'' என்று எழுதப்பட்டு இருக்கிறது. இந்த சமயத்தில் இது எப்படி உரிமை மீறல் ஆகும் என்பதை எடுத்துக் கூறுவதற்கு ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். முதலில் கம்யூனிஸ்ட் கட்சி சந்தர்ப்பவாதப் போக்கில் போய்க் கொண்டிருக்கிறது என்பது எங்களுடைய கட்சியின் மீது வேண்டுமென்றே களங்கம் கற்பிப்பதற்காக எழுதப்பட்ட வாக்கியமாகும். எங்கள் கட்சி எங்களுடைய கொள்கையின் பிரகாரம்தான் நடந்து கொண்டிருக்கிறதே தவிர, கொள்

கையை விட்டு எந்தக் காரணத்தைக் கொண்டும் சந்தர்ப்ப வாத அடிப்படையில் போவதில்லை என்பதை இங்கு உறுதியாகக் கூற விரும்புகிறேன். இப்படிக் கூறுபவர்கள்தான் சந்தர்ப்பவாத அடிப்படையில் எழுதுவதும், சந்தர்ப்பவாத அடிப்படையில் பேசுவதுமாக இருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருகாலத்தில் கல்கி அவர்கள்....

(முற்பகல் 10.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இதிலே உரையாற்ற வேண்டாம். அது என்ன உரிமை மீறல் என்பதை மட்டும் எடுத்துச் சொல்லுங்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : அன்றைக்கு இந்த மேல்சபை இங்கு கொண்டு வரப்பட வேண்டுமா, வேண்டாமா என்ற விவாதம் வந்த பொழுது, இங்கே கூறப்பட்டிருப்பது, கம்யூ னிஸ்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உறவு கொண் டிருப்பதன் காரணமாக, சந்தர்ப்பவாத அடிப்படையில், இந்தத் தீர்மானம் சட்டசபையில் வந்தபோது மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் சபைக்கு வராமலேயே இருந்து விட்டனர் என்று இதிலே எழுதப்பட்டிருக்கிறது.

நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். அன்றைய தினம் இங்கே நாங்கள் வந்து கலந்து கொண்டு, எங்களுடைய கட்சியினுடைய கருத்தையும், எங்களுடைய கொள்கைத் திட்டத் திலேயே மேல்சபை தேவை இல்லை என்று அறிவித்திருப்பதையும் எங்களுடைய அணியினுடைய தலைவர் இங்கே எடுத்துக்கூறி, அதற்குப் பிறகு விவாதம் நடந்து முடிந்த பிறகு, இதற்கான ஓட்டெடுப்பு வந்த காலத்தில்தான் நாங்கள் மீண்டும் இந்த நிலையை வலியுறுத்திவிட்டு எங்களுடைய அணித் தலைவர் எடுத்துக் கூறிய பிறகு, வெளிநடப்புச் செய்தோமே தவிர சபைக்கு வராமலேயே இருந்தது என்பது இல்லை.

அன்றைய தினம் மக்கள் குரல் பத்திரிகையின் நிருபரும் இங்கே நிச்சயமாக இருந்திருப்பார் என்று நான் கருதுகிறேன். உண்மை இவ்வாறிருக்க, இதைத் திரித்துக் கூறி, நாங்கள் சந்தர்ப்பவாதப் போக்கில் செல்வதாக எழுதியுள்ளார்கள். மேலும் நாங்கள் இங்கே வந்து கலந்து கொண்டு,

1989 மே 4] [திரு. சி. கோவிந்தராஜன்]

எங்களுடைய நிலையைச் சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்தோமே தவிர நாங்கள் வராமலேயே இருந்துவிட்டோம் என்று, எங்களுடைய கட்சியைக் களங்கப்படுத்துவதுபோல, மாசு படுத்துவதுபோல, திரித்துக் கூறுவதும், உண்மைக்குப் புறம்பாக எழுதுவதும் இந்த அவையினுடைய உரிமையை மீறக் கூடிய குற்றமாகும் என்று நான் இங்கே கூற பிரியப்படுகிறேன்.

''ஒரு காலத்தில், கல்கி அவர்கள் கூறினார்கள் கம்யூனிஸ்ட்டுகள் கோட்டையை விட்டாலும் விடுவார்களே தவிர, கொள்கையை விடமாட்டார்கள்'' என்று எனவே நாங்கள் சந்தர்ப்பவாதிகள் அல்ல, எங்களுடைய கொள்கையை எடுத்துச் சொல்லி விட்டு நாங்கள் வெளிநடப்பு செய்தோம்.

நடக்காத ஒன்றை நடந்ததாகக் கூறி, இப்படி எழுதியிருப்பது இந்த அவையினுடைய உரிமையை மீறக்கூடிய செயலாகும் என்று கூறி, இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து நாளேட்டின் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டு, பின் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

என்னிடத்திலே இசைவு கேட்டபடி திரு. கோ. பூவராகன்.

2. தகவல் கோரல் தொடர்பு

(இ) நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடங்களைக் கொடுத்தவர்களுக்கு நிவாரணம் அளித்தல்

* திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடங்களையெல்லாம் எடுத்த மக்கள் பாதிக்கப்பட்ட சூழ்நிலை யிலே இருந்து, அவர்களுக்காக நம்முடைய தமிழ்நாடு அரசாங் கம், அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லி, அவர்களுக்கு வீட்டுமனை வழங்கவும் அவர்கள் நிலங்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கவும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கவும் என்று அங்குள்ள அது சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் களை வைத்துப் பேசி, ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள்.

1989 மே 4] [திரு. சி. கோவிந்தராஜன்]

எங்களுடைய நிலையைச் சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்தோமே தவிர நாங்கள் வராமலேயே இருந்துவிட்டோம் என்று, எங்களுடைய கட்சியைக் களங்கப்படுத்துவதுபோல, மாசு படுத்துவதுபோல, திரித்துக் கூறுவதும், உண்மைக்குப் புறம்பாக எழுதுவதும் இந்த அவையினுடைய உரிமையை மீறக் கூடிய குற்றமாகும் என்று நான் இங்கே கூற பிரியப்படுகிறேன்.

''ஒரு காலத்தில், கல்கி அவர்கள் கூறினார்கள் கம்யூனிஸ்ட்டுகள் கோட்டையை விட்டாலும் விடுவார்களே தவிர, கொள்கையை விடமாட்டார்கள்'' என்று எனவே நாங்கள் சந்தர்ப்பவாதிகள் அல்ல, எங்களுடைய கொள்கையை எடுத்துச் சொல்லி விட்டு நாங்கள் வெளிநடப்பு செய்தோம்.

நடக்காத ஒன்றை நடந்ததாகக் கூறி, இப்படி எழுதியிருப்பது இந்த அவையினுடைய உரிமையை மீறக்கூடிய செயலாகும் என்று கூறி, இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து நாளேட்டின் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டு, பின் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

என்னிடத்திலே இசைவு கேட்டபடி திரு. கோ. பூவராகன்.

2. தகவல் கோரல் தொடர்பு

(இ) நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடங்களைக் கொடுத்தவர்களுக்கு நிவாரணம் அளித்தல்

* திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடங்களையெல்லாம் எடுத்த மக்கள் பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலே இருந்து, அவர்களுக்காக நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம், அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லி, அவர்களுக்கு வீட்டுமனை வழங்கவும் அவர்கள் நிலங்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கவும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கவும் என்று அங்குள்ள அது சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துப் பேசி, ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள்.

[திரு. கோ. பூவராகன்] 1989 மே

இதுவரையில், ஒருவித நடவடிக்கையும் எடுக்காததினால் ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விரைவிலே நல்லதொரு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதுகுறித்து ஏற்கனவே இந்த மன்றத்திலே மாண்புமிகு பூவராகன் அவர்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்லி, நானும் விளக்கம் அளித்திருக்கின்றேன்.

நெய்வேலியிலே பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு தருகின்ற முன்னுரிமைகள் பற்றியும், காலி செய்யப் படுகின்ற கிராமப் பகுதிகளிலே அவர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை தர வேண்டுமென்பது பற்றியும், உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு நல்ல முடிவுகளை எடுத்திட வேண்டுமென்று, மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

முன்பே, மாவட்ட ஆட்சித் தலைவரும், திரு. பூவராகன் அவர்களும், மற்றும் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களும் அங்கே கலந்து பேசி, அதற்கு ஆவன செய்வதாக அந்த நிர்வாகமும் உறுதி அளித்திருக்கிறது; என்னிடத்திலும்கூட அத்தகைய உறுதி நிர்வாகத்தின் சார்பாக அளிக்கப்பட்டிருக்கின்றது.

மாவட்டக் கலெக்டர் அவர்கள் தொடர்ந்து அந்த முயற்சியிலே ஈடுபட்டு, விரைவில் அங்கே, அந்தச் சுரங்கத்தினுடைய விரிவாக்கம் அமைவதற்கு ஏற்ற வண்ணம் இந்தச் செயல்பாடுகளையெல்லாம் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்று நான் நம்புகின்றேன்.

எனவே, இந்தப் பிரச்சினையை இந்த அளவில் விட்டு விடலாம் என்று நான் கருதுகிறேன்.

3. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

(ஆ) மதுராந்தகம் நகராட்சி நிறைவேற்றியுள்ள தீர்மானம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை.

25-4-89 அன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் அவர்கள் 25-3-89 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சி குறித்தும், பேரவைத் தலைவர் நடவடிக்கை குறித்தும் மதுராந்தகம் நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது அவை உரிமை மீறிய செயல் ஆகும் எனக் கூறி இப்பிரச்சினையை உரிமைக்குழுவிற்கு அனுப்பிவைக்கும்படி அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அவையிலும் பேசியிருக்கிறார்.

இதுகுறித்து அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகங்கள் துறை அவர்களிடமிருந்து விளக்கம் கேட்டதில் 20-4-1989 அன்று நடைபெற்ற நகரமன்றக் கூட்டத்தில் இதுகுறித்து ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இந்தப் பிரச்சினையில் அவை உரிமை மீறல் இருப்பதாகக் கருதுகிறேன்.

எனவே, பேரவை விதி 226-ன் கீழ் இப்பிரச்சினையை ஆய்ந்து, பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி

(ஈ) உள்ளாட்சி மன்ற அதிகாரங்களை விரிவாக்கம் செய்வது குறித்து விவாதிக்க டெல்லியில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். முக்கியமான பிரச்சினையை எழுப்பக்கூடிய வாய்ப்புகள் முன் அனுமதி பெறுவது என்பது இப்போது நடைமுறையில் உள்ளது. ஆனால் நம்முடைய பழைய மரபிற்கு ஏற்ப முக்கியமான பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்படுகிற அவசரத்தை

3. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

(ஆ) மதுராந்தகம் நகராட்சி நிறைவேற்றியுள்ள தீர்மானம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை.

25-4-89 அன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் அவர்கள் 25-3-89 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சி குறித்தும், பேரவைத் தலைவர் நடவடிக்கை குறித்தும் மதுராந்தகம் நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது அவை உரிமை மீறிய செயல் ஆகும் எனக் கூறி இப்பிரச்சினையை உரிமைக்குழுவிற்கு அனுப்பிவைக்கும்படி அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அவையிலும் பேசியிருக்கிறார்.

இதுகுறித்து அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகங்கள் துறை அவர்களிடமிருந்து விளக்கம் கேட்டதில் 20-4-1989 அன்று நடைபெற்ற நகரமன்றக் கூட்டத்தில் இதுகுறித்து ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இந்தப் பிரச்சினையில் அவை உரிமை மீறல் இருப்பதாகக் கருதுகிறேன்.

எனவே, பேரவை விதி 226-ன் கீழ் இப்பிரச்சினையை ஆய்ந்து, பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி

(ஈ) உள்ளாட்சி மன்ற அதிகாரங்களை விரிவாக்கம் செய்வது குறித்து விவாதிக்க டெல்லியில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். முக்கியமான பிரச்சினையை எழுப்பக்கூடிய வாய்ப்புகள் முன் அனுமதி பெறுவது என்பது இப்போது நடைமுறையில் உள்ளது. ஆனால் நம்முடைய பழைய மரபிற்கு ஏற்ப முக்கியமான பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்படுகிற அவசரத்தை

உத்தேசித்து எழுப்பப்படுவதாகும். எனவே, இரண்டு விதத்திலும் எழுப்பலாம் என்று தாங்கள் அண்மையில் ஒரு தீர்ப்புக் கூறியிருக்கிறீர்கள். நான் ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்ப நினைத்தேன். அதைத் தாங்கள் தடுக்கிறீர்கள். அது தங்களுடைய உரிமை. எனக்கு இந்த வாய்ப்புக் கொடுக்கப்படுமா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி மீண்டும் அவை அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்வோம் என்பதை இப்போது என்னுடைய தீர்ப்பாக அளித்து, இப்போது உங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து..

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்ததன் பேரில் ஒரு முக்கியமான பிரச்சினையை நான் எழுப்புகிறேன். இன்றையதினம் அரசமைப்புச் சட்டம் மாற்றப் படக்கூடிய அளவிற்கு உள்ளாட்சி அமைப்புகள் சட்டமன்றம் வகிக்கக்கூடிய அதிகாரங்களைப் போல அவைகள் வகிக்கக்கூடிய அளவிற்கு அரசியல் சட்டம் திருத்தப்படும் என்று திரு. மாதவ ராவ் சோலங்கி அவர்கள் நேற்றையதினம் டெல்லியில் பேசியிருக்கிறார்கள். இதுகுறித்து உள்ளாட்கித் துறை, பஞ்சாயத்து ராஜ் என்று சொல்லக்கூடிய இவைகள் குறித்தும் பாரதூரமான விளைவுகள் ஏற்படுத்தக்கூடிய முடிவுகளை மேற்கொள்ள, அரசியல் சட்டத்தைத் திருத்த நாளையதினம் டெல்லியில் எல்லா மாநில முதலமைச்சர்களையும் பிரதமர் அவர்கள் அழைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றக் கூட்டம் இருப்பதாலும் நாளையதினம் நம்முடைய விழா இருப்பதாலும் வரமுடியவில்லை, மாற்றி வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து இருந்தார்கள். ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்பு திரு. என். டி. இராமாராவ் அவர்கள் அந்தக் கூட்டத்தில் அதனுடைய முக்கியதுவத்தைக் கருதி கலந்து கொள்வதாக அறிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பிரதமர் அவர்களை வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப அவர்களிடத்திலிருந்து ஏதாவது தகவல் வந்ததா? அப்படி, முக்கியமான இந்த கூட்டம் நடக்கும்போது அதை ஓரிரு தினங்கள் மாற்றி வைக்க

வேண்டுமென்று அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப மத்திய அரசாங்கம் ஏதாவது தகவல் கொடுத்திருக்கிறதா? ஏனென்றால் இது முக்கியமான பிரச்சினை. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளாமலே, நம்முடைய அபிப்பிராயத்தை அவர்கள் தெரிந்து கொள்ளாமலே ஒரு முடிவு எடுப்பது அவ்வளவு ஏற்புடையது அல்ல. எனவே, இதுகுறித்து மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏதாவது தகவல் வந்திருக்கிறதா, இந்த அரசாங்கத்தினுடைய நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு என்னுடைய கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் திடீரென்று சில விவரங்களைக் கேட்கும்போது அறையிலே தங்களைச் சந்தித்து முன் அனுமதி பெற நேரம் இல்லாமல் போய்விடுகிறது என்று சொன்னார்கள். இது ஒன்றும் திடீரென்று ஏற்பட்டது அல்ல. நேற்றைக்கு முன் தினமே வந்த செய்தி. அதனாலே அவர்களே கூட கொஞ்சம் அலுப்பைப் பார்க்காமல் 8.12 மணி அளவிற்குத் தங்கள் அறைக்கு வந்து திரு. குமரி அனந்தன் அவர்கள் கேட்டதைப் போல, நம்முடைய ஆல்போன்ஸ் அவர்கள் கேட்டதைப் போல, பொன்னம்மாள் அவர்கள் கேட்டதைப் போல, பூவராகன் அவர்கள் கேட்டதைப் போல, அவர்களும் கேட்டிருக்கலாம். ஆனால் அவர் எழுப்பிய பிரச்சினை இப்போது ஏற்பட்டுள்ள இந்த விவாதத்தை விட மிக முக்கியமானது என்ற காரணத்தால் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சி மன்றங்களைப் பற்றி அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் வரக்கூடிய நிலைமை இருப்பதாக மத்திய அமைச்சர் அறிவித்து இருப்பதை அவர் குறிப்பிட்டார். கடந்த 30 ஆம் தேதியன்று தான், 5 ஆம் தேதியன்று முதலமைச்சர்களைக் கூட்டி பிரதமர் யோசிக்க இருக்கிறார் என்ற முறையில் ஒரு 'டெலக்ஸ்' செய்தி வந்தது. அதைந் தொடர்ந்து அதுகுறித்து என்னென்ன விவரங்களைப் பற்றிப் பேச இருக்கிறோம் என்ற செய்தியும் வந்தது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 4

(முற்பகல் 10–30)

நான் உடனடியாக பிரதமருக்கு விவரமாக தந்தியின் மூலமாகத் தெரிவித்தேன். ஐந்தாம் தேதி அன்று ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட சட்டமன்றப் பேரவையினுடைய பொன்விழா இருக்கிற காரணத்தால் வர இயலாது என்றும், மிக முக்கியமான மானியக் கோரிக்கைகள், எல்லாமே நான் பதில் சொல்லவேண்டிய கோரிக்கைகளாக, மானியக் கோரிக்கைகளாக இருக்கிற காரணத்தால், முன்கூட்டி அறிவிக்கப்படாத சூழ்நிலையில் வர இயலவில்லை என்றும் அதுமாத்திரம் அல்லாமல் நீங்கள் அனுப்பியிருக்கிற விவரங்களைப் பார்க்கும் போது, அதை அமைச்சரவைக் கூட்டத்திலாவது விவாதித்து அதற்குப் பிறகு தங்களோடு கலந்து பேசுவதுதான் சிலாக்கிய மானதாக இருக்கும் என்றும், இந்த முக்கியமான விஷயத்திலே, இவ்வளவு அவசரப்படக்கூடாது என்றும், எனவே தேதியை ஒத்திவைக்கவேண்டும் என்றும் நான் ஒரு வேண்டுகோளாக ஒரு டெலக்ஸ் தந்தியை பிரதமர் அவர்களுக்கு அனுப்பி இருந்தேன். ஆனால் அவர்கள் தேதியை மாற்றுவதாகத் தெரியவில்லை. நேற்றுக் காலையில், திருமதி ஷீலா தீட்சித் அவர்கள் பிரதமருடைய அலுவலகத்திலேயிருந்து தொலைபேசியிலே என்னோடு தொடர்பு கொண்டார்கள். அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சர் வர இயலாவிட்டாலும்கூட, முதலமைச்சருடைய பிரதிநிதியாக ஒருவரை அனுப்பிவைக்க வேண்டும் என்று பிரதமர் விரும்புவதாக அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு நானும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் கலந்து பேசி, ஐந்தாம் தேதி நடைபெறுகிற அந்த முதலமைச்சர்களுடைய மாநாட்டுக்கு தமிழக அரசின் சார்பில் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லவும், இந்த அரசியல் சட்டத் திருத்தத்தால் மாநில உரிமைகள் பாதிக்கப்படுமேயானால், அவைகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய அளவிற்கு நம்முடைய எண்ணங்களை அங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறவும் இந்த அரசின் சார்பில் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்களை அனுப்புவது என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் இன்றைக்குப் புறப்பட்டுச் செல்கிறார்கள். நாளைக்கு அந்த மாநாட்டிலே அவர்கள் கலந்து கொள்கிறார்

கள். நாம் அங்கே எடுத்து வைக்கிற கருத்து, மாநில உரிமைகள் பாதிக்கப்படாத அளவிற்கு இருக்கவேண்டும் என்ற அந்தக் கருத்தாகத்தான் அமையும் என்பதை நான் நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு விளக்கமாக அளிக்கிறேன்.

(உ) பேரவைத் தலைவரின் தீர்ப்பை விமர்சிக்கும் வகையில் மதுராந்தகம் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது பிரச்சினை பற்றி உரிமைக் குழுவிற்கு அனுப்பியுள்ளது குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய அதிகாரத்திலே குறுக்கிட்டதாக என்னைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். உங்களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. அதிலே நான் உள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால் இங்கே, உகம்சந்த் அவர்களுடைய சகோதரர் சேர்மனாக இருக்கிற அந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். அதை அனுப்புவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு). அதிலே கான்ட்ரோவர்சி இருக்கிறது. (குறுக்கீடு). அதை அனுப்புவதும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தொடரே தவறு. மதுராந்தகம் நகராட்சி. அதிலே யாருடைய சகோதரர் என்பது அல்ல பேச்சு.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மதுராந்தகம் நகரமன்றத்தினுடைய தீர்மானத்தின் மீது உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அது உரிமைக் குழுவிற்குப் போவதும், போகாததும் உங்களுடைய முடிவு. ஆனால் நான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குச் சொல்லிக் கொள்வது எல்லாம், மதுராந்தகம் நகராட்சியிலே அரசாங்கத்திற்கு போட்டோக்களை வெளியிடுங்கள் என்று ஒரு ரெக்கொஸ்ட், அதாவது வேண்டுகோளாகத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, வற்புறுத்தவோ அல்லது நீங்கள் செய்யவில்லை என்றால், போராட்டம் நடத்துவோம் என்று சொல்லியோ, எந்தவிதமான இதுவும் இல்லை. அப்படி

கள். நாம் அங்கே எடுத்து வைக்கிற கருத்து, மாநில உரிமைகள் பாதிக்கப்படாத அளவிற்கு இருக்கவேண்டும் என்ற அந்தக் கருத்தாகத்தான் அமையும் என்பதை நான் நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு விளக்கமாக அளிக்கிறேன்.

(உ) பேரவைத் தலைவரின் தீர்ப்பை விமர்சிக்கும் வகையில் மதுராந்தகம் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது பிரச்சினை பற்றி உரிமைக் குழுவிற்கு அனுப்பியுள்ளது குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய அதிகாரத்திலே குறுக்கிட்டதாக என்னைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். உங்களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. அதிலே நான் உள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால் இங்கே, உகம்சந்த் அவர்களுடைய சகோதரர் சேர்மனாக இருக்கிற அந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். அதை அனுப்புவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு). அதிலே கான்ட்ரோவர்சி இருக்கிறது. (குறுக்கீடு). அதை அனுப்புவதும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தொடரே தவறு. மதுராந்தகம் நகராட்சி. அதிலே யாருடைய சகோதரர் என்பது அல்ல பேச்சு.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மதுராந்தகம் நகரமன்றத்தினுடைய தீர்மானத்தின் மீது உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அது உரிமைக் குழுவிற்குப் போவதும், போகாததும் உங்களுடைய முடிவு. ஆனால் நான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குச் சொல்லிக் கொள்வது எல்லாம், மதுராந்தகம் நகராட்சியேல அரசாங்கத்திற்கு போட்டோக்களை வெளியிடுங்கள் என்று ஒரு ரெக்கொஸ்ட், அதாவது வேண்டுகோளாகத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, வற்புறுத்தவோ அல்லது நீங்கள் செய்யவில்லை என்றால், போராட்டம் நடத்துவோம் என்று சொல்லியோ, எந்தவிதமான இதுவும் இல்லை. அப்படி

பேசவேண்டும் என்று நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தால், வீரமணி, எல்லாவற்றையும் இழுக்கவேண்டியதாக இருக்கும். அப்படிப்பட்ட பிரச்சினைத் தேவையா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை முடிவு செய்ய வேண்டியது உரிமைக் குழு, அதிலே தங்கள் கட்சியினரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதை அங்கே தெரிவித்து ஒரு முடிவு எடுக்கவேண்டுகிறேன்.

(ஊ) வினா நேரம் முடிவுற்றவுடன் முக்கியப் பிரச்சினைகள் குறித்து எழுப்ப விரும்பும் உறுப்பினர்கள் பேரவைத் தலைவரிடம் முன் இசைவு பெற வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லி மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி பிரதமர் அவர்கள் கூட்டிய கருத்தரங்கிலே கலந்துகொள்வது பற்றி ஒரு விளக்கம் அளித்தார்கள். இது அவையில் கேட்கப்பட்டு, அதற்கு பதில் சொல்லப்பட வேண்டியது, தேவை என்பதில் எனக்கு இரண்டாவது கருத்து கிடையாது. ஆனால் இப்படி முன்கூட்டியே தெரிவித்து பதில் சொல்லக்கூடிய வாய்ப்புள்ள அமைச்சர்கள் அதுபற்றி தெரிந்து கொண்டு பதில் சொல்வதற்கான தயார் நிலையை உண்டாக்கவேண்டும் என்பதற்காகத்தான் முன் இசைவு என்பது தரப்படுகிறதே தவிர, மற்றபடி அதில் மரபுகள் மீறல் என்பது வேறு நாங்கள் திடீரென்று எழுந்து கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது என்று உறுப்பினர்கள் கருதுவார்களானால், அவர்களுக்கு நான் அளிக்க வேண்டிய பதில் இதுதான்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களே, திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய இந்த வினாவிற்கு முதலிலே ஒரு பகுதியில் விடையைச் சொல்லியிருக்கிறார்கள். இது முன் பகுதி. இதை இன்றைக்கு உடனடியாக எழுப்பித்தான் தீரவேண்டும் என்று இல்லை. இதை 8-30 மணிக்குக் கேட்டிருந்தால் கூட அதைப்பற்றிச்சொல்ல முடியும் என்று

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1989 மே 4

பேசவேண்டும் என்று நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தால், வீரமணி, எல்லாவற்றையும் இழுக்கவேண்டியதாக இருக்கும். அப்படிப்பட்ட பிரச்சினைத் தேவையா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை முடிவு செய்ய வேண்டியது உரிமைக் குழு, அதிலே தங்கள் கட்சியினரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதை அங்கே தெரிவித்து ஒரு முடிவு எடுக்கவேண்டுகிறேன்.

(ஊ) வினா நேரம் முடிவுற்றவுடன் முக்கியப் பிரச்சினைகள் குறித்து எழுப்ப விரும்பும் உறுப்பினர்கள் பேரவைத் தலைவரிடம் முன் இசைவு பெற வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லி மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி பிரதமர் அவர்கள் கூட்டிய கருத்தரங்கிலே கலந்துகொள்வது பற்றி ஒரு விளக்கம் அளித்தார்கள். இது அவையில் கேட்கப்பட்டு, அதற்கு பதில் சொல்லப்பட வேண்டியது, தேவை என்பதில் எனக்கு இரண்டாவது கருத்து கிடையாது. ஆனால் இப்படி முன்கூட்டியே தெரிவித்து பதில் சொல்லக்கூடிய வாய்ப்புள்ள அமைச்சர்கள் அதுபற்றி தெரிந்து கொண்டு பதில் சொல்வதற்கான தயார் நிலையை உண்டாக்கவேண்டும் என்பதற்காகத்தான் முன் இசைவு என்பது தரப்படுகிறதே தவிர, மற்றபடி அதில் மரபுகள் மீறல் என்பது வேறு நாங்கள் திடீரென்று எழுந்து கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது என்று உறுப்பினர்கள் கருதுவார் ளானால், அவர்களுக்கு நான் அளிக்க வேண்டிய பதில் இதுதான்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களே, திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய இந்த வினாவிற்கு முதலிலே ஒரு பகுதியில் விடையைச் சொல்லியிருக்கிறார்கள். இது முன் பகுதி. இதை இன்றைக்கு உடனடியாக எழுப்பித்தான் தீரவேண்டும் என்று இல்லை. இதை 8-30 மணிக்குக் கேட்டிருந்தால் கூட அதைப்பற்றிச்சொல்ல முடியும் என்று

1989 மே 4] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் நான் உறுப்பினர்கள் காலதாமதமாக வருவது அல்லது நினைத்தபடி கேட்பது என்பதைப் பற்றி எல்லாம் இப்போது திறனாய்வு செய்ய விரும்பவில்லை. ஆனால் ஒரு சிலர் மட்டும் இதை அப்படிப் பயன்படுத்திக் கொண்டு, அவ்வப்போது வினாக்களை எழுப்புவதும், நான் தீர்ப்பு அளித்து, அதற்கு அனுமதி அளிக்க மறுத்த பிறகும் கூட விடாப்பிடியாக, வீம்பு செய்வதுமான போக்குகள் தொடருமானால், பேரவைத் தலைவர் தன்னுடைய கடமையை இந்த அவையிலே செய்ய முடியாது என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பிறகு நானும் பேரவைத் தலைவர் பதவியை விட்டுவிட்டு ஓர் உறுப்பினராகவே இருந்து கடமையாற்றக்கூடிய நிலைமைதான் வருமே தவிர, அதிலே எந்தவகையான மாறுபாடான கருத்துக்கும் இடம் இருக்க முடியாது. இப்படி பலரும்எழுந்து கேட்பதுஅவையினுடைய நேரத்தை மிகுதியும் வீணடிக்கிறது என்பது குறித்து நம்முடைய அவை முன்னவர்அவர்கள் எனக்கு எழுதித் தந்த குறிப்பையும் நான் இங்கே படிக்க விரும்புகிறேன்.

Adjourment Motions: as a rule, shall not be allowed if they refer to day-to-day administration and they may be permitted as Call Attention Motions. Even strike by students or labourers may be taken up as Adjournment Motions with prior notice to the concerned Ministers and the Ministers shall be prepared with materials to reply. Zero hour is not permissible as per the regulations of the House. Yet the leaders of the Opposition parties may be permitted on rare occasions to raise any important issue which requires immediate clarifications and that too, when it comes within the direct responsibility of the Government.

அதை உறுப்பினர்கள் அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

அ கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சிஒன்றியங்களில்வேளாண்மை விரிவாக்க மைய அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்குவதில் தாமதம்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கோயம்புத்தூர் மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரிய அனுப்பப்பட்ட வேளாண்மை விரிவாக்க மைய அதிகாரிகள் 300 பேருக்கு மார்ச் மாதத்திற்கான சம்பளம் இன்னும் வழங்கப்படாதது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரக் குறிப்பு ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

1—3—1989 ஆம் தேதியிட்ட ஊரக வளர்ச்சித் துறை அரசாணை எண். 164-ல், வேளாண்மைத் துறையைச் சார்ந்த விரிவாக்க அலுவலகத்தில் பணியாற்றிய பணியாளர்களை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் இணைத்து, அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையரின்கீழ் பணியாற்ற வேண்டுமென ஆணையிடப்பட்டது. இவ்வாணை 1—3—1989 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

2. இவ்வாறு மாற்றப்பட்ட பணியாளர்களுக்கு, ஊரக வளர்ச்சி ஆணையாளரால் மாற்று எற்பாடு செய்யும்வரை, வேளாண்மைத் துறை நிதி ஒதுக்கீட்டிலிருந்து சம்பளம், மற்றுமுள்ள செலவுகள் தொடர்ந்து பெறவேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கிடையில், 1989 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான மேற்படி பணியாளர்களின் சம்பளப் பட்டியலை அந்தந்த ஒன்றிய ஆணையாளர்கள் கருவூலத்தில் அளிக்கும்போது, அனுமதிக்குமாறு எல்லா மாவட்ட கருவூல அதிகாரிகளுக்கும், 19—4—1989 நாளிட்ட வேளாண்மைத் துறை கடித எண். 25747-ப.தொ. 89-1-ல் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

1989 மே 4]

3. இது குறித்து, கூடுதல் வேளாண்மை இயக்குநர் மேலும் சில விவரங்களைத் தெரிவித்துள்ளார். வேளாண்மைத் துறை பணியாளர்கள் அரசு ஆணை எண். 164 (ஊ.வ. துறை), நாள் : 1—3—1989-க்கிணங்க 23—3—1989-லிருந்து 31—3—1989 வரை ஊராட்சி ஒன்றியங்களில் பணியில் சேர்ந்தனர். இப்பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்ட பின்னரே, அவர்களது '' இறுதி ஊதியச் சான்றிதழ் '' வழங்க இயலும். இச்சான்றிதழே அவர்கள் ஊதியம் பெற வகை செய்யும். இந்த இறுதி ஊதியச் சான்றிதழ், ஏப்ரல் மாத முதல் வாரத்தில் வேளாண்மை உதவி இயக்குநரால் தயார் செய்யப்பட்டு, அந்த அந்த ஊரக ஒன்றியங்களுக்கும் அனுப்பப்பட்டது. கோவை மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில், பணி புரியும் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு, மார்ச் மாதத்திற்கான ஊதியம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்று, கூடுதல் வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. கீழ்க்கண்ட வட்டார வளர்ச்சி அலுவலகங்களில், (கோவை மாவட்டம்) வேளாண்மைத் துறையைச் சார்ந்த மாற்றப்பட்ட பணியாளர்களுக்கு, ஊதியம் பெற்று வழங்கிய விவரம் பின்வருமாறு.—

வட்டார வளர்ச்சி அலுவலகம்:

1	பேரூர்	10–4–1989 மற்றும் 20–4–1989-ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
2	தொண்டாமுத்தூர்	10–4–1989 மற்றும் 21–4–1989-ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
3	மதுக்கரை ..	11–4–1989 மற்றும் 18–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
4	சர்க்கார் சாமக்குளம். :	10–4–1989 மற்றும் 12–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

5	பெரியநாயக்கன் பாளையம்.	10-4-1989 மற்றும் 13-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
6	அன்னூர்	12-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
7	காரமடை	13-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
8	அவிநாசி	10-4-1989 மற்றும் 17-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
9	சூலூர்	20-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
10	கிணத்துக்கடவு ..	10-4-1989 மற்றும் 17-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
11	சுல்த்தான்பேட்டை.	17-4-1989-ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
12	குடிமங்கலம் ..	11-4-1989, மற்றும் 17-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
13	ஆனைமலை ..	11-4-1989 மற்றும் 21-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
14	பொள்ளாச்சி (வடக்கு)	20-4-1989ல் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
15	பொள்ளாச்சி (தெற்கு).	20-4-1989ல் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
16	உடுமலைப்பேட்டை	21-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 4] [திரு. கோ. சி. மணி]

17 மடத்துக்குளம் .. 21-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

18 திருப்பூர் 13-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கபடட்டுள்ளது.

19 பொங்கலூர் .. 17-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

20 பல்லடம் 20-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் தங்களிடம் எழுதிக் கொடுக்கப்பட்டபோது அந்த சம்பந்தபபட்ட அதிகாரி களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. இப்போது எடுத்துக் கொள்ளப்படுகிற போது விவர அறிக்கையில் சம்பளம் கொடுக் கப்பட்டதாக சொல்லப்படுகிறது. எனவே சம்பளம் கொடுப் பதில் இருக்கக் கூடிய கால தாமதத்தைத் தவிர்த்து, இதுபோன்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இனி கொண்டு வருவதையும் தவிர்க்கின்ற விதததிலே, அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே உள்ளாட்சித்துறை மூலம் ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டு, அதற்குப் பிறகு அதை ஏற்றுக் கொண்டு, சம்பளம் நாம் வழங்குவதா, அல்லது அந்தத் துறை வழங்குவதா என்று இரண்டு துறையுமே பரிசீலித்துக் கொண் டிருந்த காரணத்தால் சற்று கால தாமதம் ஆகிவிட்டது. இடை யில் 21 ஆம் தேதி எல்லோருக்குமே அந்தச் சம்பளம் வழங்கப பட்டு விட்டது. எனவே ஏறத்தாழ 20 நாட்கள் கால தாமத மானது. இனிமேல் அது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்.

(ஆ) நன்னிலம் மருத்துவமனையில் தண்ணீர் தொட்டி இன்மையாலும் போதுமான மருத்துவர்கள் இன்மையாலும் எற்பட்டுள்ள இடர்பாடுகள்

திரு. மா. மணமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், நன்னிலம் மருத்துவமனையில் ஆறு மருத்துவர் பணியாற்றிய நிலையில் இன்று பெண் மருத்து

1989 மே 4] [திரு. கோ. சி. மணி]

17 மடத்துக்குளம் .. 21-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

18 திருப்பூர் 13-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கபடட்டுள்ளது.

19 பொங்கலூர் .. 17-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

20 பல்லடம் 20-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் தங்களிடம் எழுதிக் கொடுக்கப்பட்டபோது அந்த சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. இப்போது எடுத்துக் கொள்ளப்படுகிற போது விவர அறிக்கையில் சம்பளம் கொடுக் கப்பட்டதாக சொல்லப்படுகிறது. எனவே சம்பளம் கொடுப் பதில் இருக்கக் கூடிய கால தாமதத்தைத் தவிர்த்து, இதுபோன்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இனி கொண்டு வருவதையும் தவிர்க்கின்ற விததிலே, அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே உள்ளாட்சித்துறை மூலம் ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டு, அதற்குப் பிறகு அதை ஏற்றுக் கொண்டு, சம்பளம் நாம் வழங்குவதா, அல்லது அந்தத் துறை வழங்குவதா என்று இரண்டு துறையுமே பரிசீலித்துக் கொண் டிருந்த காரணத்தால் சற்று கால தாமதம் ஆகிவிட்டது. இடை யில் 21 ஆம் தேதி எல்லோருக்குமே அந்தச் சம்பளம் வழங்கப பட்டு விட்டது. எனவே ஏறத்தாழ 20 நாட்கள் கால தாமத மானது. இனிமேல் அது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்.

(ஆ) நன்னிலம் மருத்துவமனையில் தண்ணீர் தொட்டி இன்மையாலும் போதுமான மருத்துவர்கள் இன்மையாலும் எற்பட்டுள்ள இடர்பாடுகள்

திரு. மா. மணமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், நன்னிலம் மருத்துவமனையில் ஆறு மருத்துவர் பணியாற்றிய நிலையில் இன்று பெண் மருத்து

[திரு. மா. மணிமாறன்] [1989 மே 4

வரும் இல்லாமல் இரண்டே மருத்துவர் மட்டும் வேலை செய்வதால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினையும், அம் மருத்துவ மனையில் தண்ணீர் தொட்டி இயங்காததாலும் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளையும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு, ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் ஆறு. அங்கு இரண்டு உதவி மருத்துவர் மட்டும் பணி புரிந்து வந்தனர். உதவி மருத்துவர்கள் பற்றாக்குறை காரணமாக உதவி மருத்துவர்கள் பணியமர்த்த முடியவில்லை. தற்பொழுது பட்ட மேற்படிப்பு முடித்து வந்த மருத்துவர்களில், மூன்று ஆண் உதவி மருத்துவரும், ஒரு பெண் உதவி மருத்துவரும் முறையே 8-3—1989, 27-3—1989 மற்றும் 28—3—1989 தேதிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கள் பணியில் விரைவில் சேருவார்கள். தண்ணீர் தொட்டி இயங்க மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குனரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மூன்று மருத்துவர்கள்தான் பணியிலமர்த்தப்பட்டதாய் இருக்கிறது. எனவே அதில்கூட இன்னும் ஒரு மருததுவர் பாக்கி இருக்கிறது. இந்த நான்கு மருத்துவர்களும் ஏறத்தாழ 6, 7 மாதங்களாக அந்த மருத்துவ மனையில் பணியாற்றாத காரணத்தால், அது வட்டத்தின் தலைமை மருத்துவமனையாக இருக்கின்ற காரணத்தால் மிக இடர்பாடுகள் வந்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற நோயாளிகள் எல்லாம் மிகவும் அவதிப்பட்டார்கள். எனவே இதுபோன்ற நிகழ்ச்சி மேற்கொண்டும் நிகழாமல், மருத்துவர்கள் பயிற்சிக்கு சென்றுவிடுகின்ற ஒரேயொரு முக்கிய காரணமாக கருதப்படாமல், அப்படி பயிற்சிக்குச் செல்கின்ற நேரத்தில் 'சப்ஸ்டிட்யூட்'' மருத்துவர் நியமித்து, அவர்களை விடுவிப்பதற்கு

அரசு முன்வருமா என்பதோடு தொடர்ந்து அந்தத் தவறுகள் நிகழாமல் ஏனைய பணிகளையும் பார்ப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் இதைச் சரியாகப் புரிந்துக் கொள்ளாமல் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருடைய கேள்விலேயே முதலில் 2 மருத்துவர்கள் அங்கே பணியாற்றுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் மூன்று ஆண் உதவி மருத்துவர்களும், ஒரு பெண் உதவி மருத்துவரும், ஆக நான்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்குறார்கள். ஆகவே மொத்தம் அறுவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சேராமல் இருப்பார்கள் என்று சொன்னால், மீண்டும் அவர்கள் நியமிக்கப்படுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–40).

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களை நியமித்து விடுவார்கள். ஆனால் அவர்கள் அந்தப் பணியிலே சேர்ந்து விட்டார்களா இல்லையா என்பதை நாம் அறிய வேண்டும். பலர் 3 மாதம் 4 மாதம் என்று விடுப்பிலே சென்று விடுகிற காரணத்தால், பணியில் அமர்த்தப் படுகிறார்களே தவிர, விடுப்பிலே செல்கிறவர்களுக்கு ஈடாக மருத்துவர்கள் இல்லை. அது மட்டும் அல்லாமல் அது ஒரு வட்ட தலைமை மருத்துவமனையாக இருக்கிறது. அங்கே தண்ணீரே இல்லாமல் 7, 8 மாதங்களாக கழிப்பிட வசதி, வார்டுக்குத் தண்ணீர், ஆப்பரேஷன் தியேட்டர் போன்றவைகளுக்கு தண்ணீர் இல்லாமல் மிக மோசமானநிலையில் அவைகள் எல்லாம் கெட்டுப் போயிருக்கின்றன. எனவே ஒரு மருத்துவமனையில் 6 மாத காலமாக தண்ணீர் இல்லாமல் இருக்கும் நிலை சரியாக இருக்குமா என்பதைப் பரிசீலித்து அப்படிப்பட்டநிலைக்கு வர யார் தவறு செய்கிறார்களோ, அப்படி வேலை செய்யாதவர்களுக்கு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வரசு இதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக்கு (Senate) உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:

1. திரு. இரா. மோகன்,
2. திரு. கே. ரமணி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேரவைக்கு (Sen te) உறுப்பினர்கள் தேர்வு :

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க் கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. அ. பெரியண்ணன்.
2. திரு. அன்பில் பொய்யாமொழி."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

[1989 மே

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வரசு இதந்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக்கு (Senate) உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:

1. திரு. இரா. மோகன்,
2. திரு. கே. ரமணி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேரவைக்கு (Sen te) உறுப்பினர்கள் தேர்வு :

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. அ. பெரியண்ணன்.
2. திரு. அன்பில் பொய்யாமொழி.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

[1989 மே

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வரசு இதந் கான நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக்கு (Senate) உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:

1. திரு. இரா. மோகன்,
2. திரு. கே. ரமணி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேரவைக்கு (Sen te) உறுப்பினர்கள் தேர்வு :

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க் கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. அ. பெரியண்ணன்.
2. திரு. அன்பில் பொய்யாமொழி."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

1989 மே 4]

(இ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் பேரவை (Senate)க்கு உறுப்பினர் தேர்வு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

திரு. பா. மனோகரன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப் பெற்று நிறைபெற்றது.

6. மானியக் கோரிக்கைகள் 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி:

(அ) கோரிக்கை எண் 7.—மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

மானியக் கோரிக்கை எண் 7, மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,01,56,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சட்டமன்ற ஊழியர்களை பல ஆண்டு காலமாக தற்காலிகமாக வைத்திருப்பதை மாற்றி நிரந்தரமாக்கவும், அவர்களது ஊதியத்தை உயர்த்தவும் ஏற்பாடு செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

மானியக் கோரிக்கை எண் 7— மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,01,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

1989 மே 4]

(இ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் பேரவை (Senate)க்கு உறுப்பினர் தேர்வு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:

திரு. பா. மனோகரன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப் பெற்று நிறைபெற்றது.

6. மானியக் கோரிக்கைகள் 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 7.—மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

மானியக் கோரிக்கை எண் 7, மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,01,56,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சட்டமன்ற ஊழியர்களை பல ஆண்டு காலமாக தற்காலிகமாக வைத்திருப்பதை மாற்றி நிரந்தரமாக்கவும், அவர்களது ஊதியத்தை உயர்த்தவும் ஏற்பாடு செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

மானியக் கோரிக்கை எண் 7— மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,01,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப் படும் ஊதியத்தை ரூ. 600லிருந்து ரூ.1,000 ஆகஆக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,01,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டமன்ற நூலகத்தை விரிவாக்கவும் அதிக அளவில் புதிய நூல்கள் வாங்கவும் அவைகள் சீராக வைக்க வசதிகள் செய்து கொடுத்தும் ஊழியர்களை அதிகப் படுத்த நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,01,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) கோரிக்கை எண் 8 தேர்தல்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப் பின்கீழ் ரூ. 8,30,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல்களில் வாக்காளர்களை வேட்பாளர்கள்

[984 மே 4]

க்ாகனங்களில் ஏற்றி வருவதைத் தடை செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 8— தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,30,42,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் முடிந்தவுடன் வாக்குகளை எண்ணும்போது சுயேட்சை வேட்பாளரின் வாக்குகளை தனியாகப் பிரித்து எண்ணுவதின் மூலம் சில முறைகேடுகளையும், குழப்பங்களையும் தவிர்க்கலாம் என்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 8— தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,30,42,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலச் சட்டமன்றத்தைக் குறித்தும் அதனுடைய நடைமுறைகளைப் பற்றியும், செயல் திறனைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அதுபற்றிய கருத்தை அவர்கள் தெரிவிப்பதையொட்டி நான் கூறக்கூடிய விளக்கம் இருக்குமானால் அதை இறுதியிலே தெரிவிப்பேன் என்று இப்போது கூறிக் கொள்கிறேன். அதைப்போலவே நாட்டிலே நடைபெற்று வருகின்ற தேர்தல்கள் எந்த முறையில் நடைபெறுகின்றன, எப்படிப்பட்ட தேர்தல் ஆணைக் குழுவினுடைய தலைமையில், ஆலோசனையில் நடைபெறுகின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அறிந்ததாகும். எனவே அது பற்றியும் உறுப்பினர்கள் தெரிவிக்கக்கூடிய கருத்துக்களை ஒட்டி நான் தெரிவிக்கக்கூடிய விளக்கம் இருக்குமானால் இறுதியில் கூறுகிறேன் என்று கூறி அவையிலே இது பற்றிய நல்ல கருத்துக்களை எதிர்பார்த்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

கோரிக்கை எண் 8 பற்றிய குறிப்பு இணைப்பாக அச்சடிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதிகளின்படி இன்று விவாதமும், அமைச்சர் அவர்களின் பதில்உரையும் சரியாக ஒருமணிக்கு முடிந்து மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுடைய பதிலுரை பின்னால் இருக்கிறது என்பதை உறுப்பினர்கள் எல்லோரும் கவனத்தில் கொண்டு இந்த விவாதத்தில் உரியநேரத்தில், இன்னும் சொல்லப்போனால் குறுகிய நேரத்தில் உரையாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் இந்த விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. ஆ. அறிவழகன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப்பேரவை நடவடிக்கை குறித்தும், தேர்தல் குறித்தும் என்னை இங்கே பேச அழைத்தமைக்கும், எனக்கு இங்கே ஒரு வாய்ப்பை நல்கியதற்கும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் அவர்களுக்கும், என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு ஒரு வாய்ப்பை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசில், தற்போது ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினர் அரசுக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே, நமது சட்டப் பேரவையிலும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் இடம் பெற வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், மத்திய அரசில், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படும் அந்தக் குழுக்களின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஜனநாயக நடைமுறையின் தாய் எனக் கருதப்படும் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கூட இந்த முறை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 மே 4] [திரு. ஆ. அறிவழகன்]

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை செவ்வனே செயல்படுத்த வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு அரசின் சார்பாக ஒரு உதவியாளரை நியமிக்க வேண்டும். மாநிலத்தில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களை பாதுகாக்கவும், அரசால் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் முறைப்படி அவர்களுக்குச் சென்று சேருகிறதா என்பதை கவனிக்கவும் அரசின் பணியில் 18 சதவீதம் பணியிடங்களை அமைப்பதற்கு ஒரு பரிந்துரைக் குழு, கண்காணிப்புக் கமிட்டி அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதைப் போல அநேகமாக மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், குறிப்பாக ஹரியானாவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்திருப்பதைப் போல நம்முடைய மாநிலத்திலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். தமிழகச் சட்டமன்ற நடவடிக்கைகளை வானொலியில் குறைந்த நேரத்திலே ஒலி பரப்புகின்றனர். அந்தக் கால அவகாசங்களை இந்த தமிழக சட்டப்பேரவை சார்பாக மத்திய அரசிடம் தெரிவித்து நீட்டித்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

தமிழக சட்டசபைத் தேர்தல். தேர்தலில் கள்ள ஓட்டுக்கள் போடுவதைத் தடுப்பதற்கு, வாக்காளப் பெருங்குடி மக்களுக்கு புகைப்படத்தை ஒட்டி, கள்ள ஓட்டுக்கள் போடப்படுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு மத்திய அரசிடம் தகுந்த ஆலோசனை வழங்கி, அதை இந்த ஆண்டிலேயே, ஏன், வருகின்ற மாநகராட்சித் தேர்தல்களிலேயே அதனைக் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டும். வாக்கு எண்ணிக்கைகள் துரிதமாக நடைபெறுவதற்கு மின்னணு முறையைக் கொண்டு வர வேண்டும். தற்போது, நடைபெறுகின்ற சட்டமன்றத் தேர்தல்களிலும், நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை நகராட்சிகளிலும், உள்ளாட்சி மன்றங்களிலும் பிரதிநிதித்துவம் அளித்து, அவர்களுக்கு வேண்டிய முன்னுரிமைகளையும், தனி ஒதுக்கீடுகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியின் சார்பாக, கல்வி அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு மனுவை அளித்து இருந்தேன். அந்த மனுவில் என்னுடைய தொகுதி, பிரிக்கப்பட்டு 20 ஆண்டுகளாகியும் அந்தப் பள்ளியில் மாணவர்கள் மரத்தடியில் நின்று இன்று வரை படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அந்தப் பள்ளியைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்துத் தர வேண்டும் என்று கோருகிறேன். என்னுடைய தொகுதியில்—இங்கே தமிழகத்தில் மும்முறை முதல்வராக வந்திருக்கும் கலைஞர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு என்னைப் போலவே, முதன் முதலாக சட்டமன்ற உறுப்பினராக இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று முதல் இன்று வரை அந்தத் தொகுதி ஒரு மாதிரித் தொகுதியாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இன்று அது சுதந்திரம் வாங்கிய இந்தியா போலவே காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியிலே அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் தொகுதி வரலாற்றில் இடம் பெற வேண்டும் என்ற எண்ணத்தினால்தான் இதுவரையில் அடிப்படை வசதிகள் கூட செய்யாமல் இருக்கின்றாரோ என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அவர்களிடமும் நான் ஒரு மனுவைக் கொடுத்திருந்தேன். என்னுடைய குளித்தலை வட்டத்திலே எந்தவிதமான தொழிற்சாலைகளும் கிடையாது. ஒரே ஒரு தொழிற்சாலைதான் இருக்கின்றது. நான் விவசாயக் கல்லூரியை என்னுடைய தொகுதியில் அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடமும், மற்றும் முதல்வர் அவர்களிடமும் வேண்டுகோள் விட்டிருந்தேன். அந்த விவசாயக் கல்லூரி அமைப்பதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளும் என்னுடைய தொகுதியாகிய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் இருக்கின்றது. அப்படியே அரசு அந்தக் கல்லூரியை அமைப்பதற்கு முன் வருமானால், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக, எங்களுடைய மக்களின் சார்பாக அரசிற்கு ஆயிரம் ஏக்கர்களை நன்கொடையாக அளிக்கவும் இருக்கின்றோம் என்று கூறி, எனக்கு வாய்ப்பு அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

1989 மே 4]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு சிறிய வயதில் நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றுகின்ற அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் என்னை வெற்றிபெறச் செய்த ஆரணித் தொகுதி மக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைச் சொல்லி என்னுடைய சில கருத்துக்களை இந்த அவை முன் வைப்பதில் பெருமை அடைகிறேன்.

சட்டமன்றம் என்பது பொதுமக்களின் குரலாக ஒலிப்பது. இங்கே மக்களின் பிரச்சினைகளை விவாதித்தால்தான் நாம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் நோக்கங்கள் நிறைவேறும். அதைத் தவிர்த்து கட்சி மனப்பான்மையில் விவாதங்கள் நடைபெற்றால் தேர்வு செய்த மக்களின் நம்பிக்கையை இழந்து விட நேரிடும். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசு ஜனநாயக உரிமைகளை முழுமையாகப் பேணிக் காக்கின்ற சர்வ சுதந்திரமான அமைப்பு. அப்படிப்பட்ட இந்த அமைப்பு, மக்களின் எண்ணத்தை அறியாத, ஒரே ஒரு வாக்கு கூட பெறாத கவர்னரால் எண்ணிய நேரத்தில் சில மாநிலங்களில் கலைக்கப்பட்டது, இது போன்ற நடவடிக்கைகள் முடிவு பெற வேண்டும். கவர்னர் பதவி என்பது அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டது. இன்றைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சியில் இந்த பதவி இருக்கவேண்டுமா என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. அதற்கு இந்தச் சட்டமன்றம் ஒரு முடிவு காண வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து உறுப்பினர்களையும் பொதுவான நோக்கில் கருதி நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். நேற்றையதினம் பேசும் போது கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அறந்தாங்கித் தொகுதியில் அவருடைய பகுதியில் ஆலை வைப்பது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டபோது உங்கள் பகுதியில் வாய்ப்பு இருந்தால் நிச்சயமாக அமைத்துத் தரப்படும், குறுகிய மனப்பான்மையோடு நடந்து கொள்ளும் எண்ணம் எனக்கும் இந்த அரசுக்கும் இல்லை

என்று பெருந்தன்மையோடு ஒரு கருத்தை இந்த அவையின் முன் வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி. பொன்னம்மாள் அவர்கள் தன்னுடைய விவாதத்தைத் தொடர்ந்து சில கருத்துக்களை இந்த அவையில் பேசிக்கொண்டிருக்கும் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அவையில் இல்லாமல் இருக்கிறார், அவர் இருக்க வேண்டும் என்று நினைத்தேன், வந்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அழைத்தவன் குரலுக்கு வருவேன் என்றான் கீதையிலே கண்ணன் என்பது தான் கீதையினுடைய வரிகள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுப்பினர்கள் நினைத்த மாத்திரத்திலே இந்த அவையிலே உதிக்கிறார் என்று சொன்னால் அந்தக் கடவுளாகிய கண்ணனைக்கூட மிஞ்சி இருக்கிறார் என்ற ஒரு நல்ல செய்தியைச் சொல்லி அப்படிப்பட்ட சிறப்புகள் பெற்ற முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கும்போது நாம் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பது நமக்குள்ள பெருமை என்ற என்னுடைய சொந்தக் கருத்தை இந்த அவையின் முன் வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், உலகத்தில் இருக்கும் அத்தனை அரிய பெருமக்களும் தன் பார்வையை தமிழக சட்டமன்றத்தை நோக்கிப் பார்த்தார்கள், பார்க்கிறார்கள், பார்ப்பார்கள் என்ற வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் சிறப்பான முறையில் பணியாற்ற உறுதி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுமார் 2 இலட்சம் மக்களின் பிரதிநிதியாக சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால் அவர்களுக்கு மேலும் சில வசதிகளை பெருக்கித் தந்து சிறப்பான முறையில் பணியாற்றக்கூடிய வாய்ப்புகளை அரசு உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக அட்டெண்டர்-கம்-டைப்பிஸ்டு பதவியை ஏற்படுத்தித்தந்து அவர்களுக்கு ஊதியமும், தொகுதியில் ஒரு அலுவலகமும் ஏற்படுத்தித் தந்து அதனால் ஏற்படுகின்ற செலவுகளையும் இந்த அரசே ஏற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்வீஸ் ஸ்டாம்பு அமைச்சர்களுக்கு வழங்குவதைப் போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்துகளில் செல்வதற்கு இலவச பாஸ் வழங்கவேண்டும் என்று

1989 மே 4] [திரு. ஏ. சி. தயாளன்]

கேட்டுக்கொள்கிறேன். இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்மருத்துவப்படிகை இன்னும் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ய றேன். அதேபோல் தொலைபேசிக் கட்டணம் எவ்வளவு ஆகிறதோ அவ்வளவையும் இந்த அரசு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்று சொன்னால் ஒரு உறுப்பினர் தொலைபேசியில் பேசுவது எல்லாம் தொகுதியின் பணிகளைப் பொறுத்துதான் என்ற வகையில் இருப்பதால் அவர்களுடைய முழுச் செலவையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சட்டமன்றத்தைச்சுற்றி இருக்கின்ற சட்டமன்றக் காவலர்களுக்கு — போலீஸ் மானியத்தில் அவர்களைப் பற்றி எல்லாம் பேசுவார்கள் என்று எல்லாம் நினைத்து அவர்கள் குறைகளை என்னிடம் சொன்னார்கள், ஆகவே, சட்டப்பேரவையில் இருக்கின்ற — காவலர்களுக்கு சிறப்பான சலுகையை இந்த அரசு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சட்டமன்றம் நிறைவேற்றுகின்ற திட்டங்களைக் குறிப்பிட்டக் கால அளவுக்குள் முடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் மக்களின் தேவையை உடனுக்குடன் நிறைவேற்ற முடியும் என்ற கருத்தை என்னுடைய கருத்தாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே, நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது செய்யாறில் சர்க்கரை ஆலை இருக்கிறது. போளூரில் சர்க்கரை ஆலை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இடையில் இருக்கின்ற என்னுடைய தொகுதியான ஆரணியில் அந்த ஆலையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விநாயகருக்கு கனி கிடைத்தது போல் மாண்புமிகு இராசேந்திரன் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சரிடமிருந்து உறுதி பெற்றுக் கொண்டார்கள். கனி கிடைக்காத முருகனைப் போல நான் இருக்கிறேன். வரலாற்றை மாற்றி அமைக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனி கிடைக்காமல் ஏங்குகின்ற முருகனைப் போல என்னை நினைத்து எனக்கும் கனி வழங்கி புதிய வரலாற்றை, திருப்பத்தை

படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இந்தச் சட்டமன்றத்தில் நான் முதன் முதலாக உரையாற்றுவதால் என்னுடைய தொகுதியைப் பற்றி சில விஷயங்களை இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சொல்லுவது தவறு இல்லை என்று நினைக்கிறேன். மிக நீண்டகாலமாக ஆரணியில் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. ஆகவே, விண்ணமங்கலம் பகுதியில் புதிதாக ஒரு மேல்நிலை குடிநீர்த் தேக்கத்தொட்டி கட்டி குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்கெனவே, ஆரணித் தொகுதிக்கு உட்பட்ட பச்சிமலைக் குப்பம் என்ற கிராமத்தில் வனத்துறைக்குச் சொந்தமான 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயக் கல்லூரி ஒன்றை அமைக்க அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அப்பகுதியில் விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தித் தர இந்த அரசு முன்வரவேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தஞ்சாவூருக்கு அடுத்து நெல் விளைச்சலில் மிகவும் அதிகமாக உற்பத்திச் செய்வது ஆரணியாக இருப்பதால் அங்கே ஒரு நவீன அரிசி ஆலையை அமைக்கவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, ஆரணி நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக மாற்றவேண்டுமென்ற கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த ஆணையை விரைவில் பிறப்பித்து ஆரணி நகரத்தை பி-பிரிவு நகரமாக அறிவிக்குமாறு அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக ஒரு பேரவைக் கமிட்டியை நியமனம் செய்ய வேண்டும். 1979-ஆம் ஆண்டு பேரவை விதிகள் குழுவில் இதுபற்றி ஆய்வு செய்யப்பட்டது. ஆகவே, இந்தக் கமிட்டியை உடனே நியமனம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1989 மே 4] [திரு. ஏ. சி. தயாளன்]

அதேபோல, சட்டமன்றப் பேரவை அலுவலர்களுக்கு பஸ் பாஸ் வழங்கவேண்டும். 1980ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல, சட்டப்பேரவை அலுவலர்களுக்கு பேரவை கூடும் நாட்களில் ஒரு நாளைக்கு ரூபாய் 6 முதல் 12 வரை ''அவுட் ஆப் பாக்கெட் எக்ஸ்பென்ஸ்'' வழங்கப்படுகிறது. இது 1984ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது. 5 ஆண்டுக் காலமாக இதே அளவு வழங்கப்பட்டு வருகிறது. அலுவலர்கள் காலை 8–00 மணி முதல் இரவு 8–00 மணி வரையில் 12 மணி நேரம் வேலை செய்கிறார்கள். இந்த ''அவுட் ஆப் பாக்கெட் எக்ஸ்பென்ஸ்''-ஐ ரூபாய் 15 முதல் 40 வரை உயர்த்தி வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டமன்றப் பேரவை கூடுகின்ற நாட்களைத் தவிர, நான்-மீட்டிங் டேஸ் என்று இருக்கின்ற நாட்களில் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்காக டாய்லெட் ஃபெசிலிட்டீஸ் இல்லாமல் இருப்பதை இந்த அரசின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், பேரவையைச் சுற்றியிருக்கின்ற அந்த டாய்லெட்டுகளையெல்லாம் பேரவை நடக்காத போது மூடி வைத்து விடுவார்கள். ஆகவே, நான்-மீட்டிங் டேஸ்-ல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டாய்லெட் ஃபெசிலிட்டீஸ்-ஐ செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

அதேபோல சட்டப் பேரவைச் செயலகத்தில் பணியாற்றும் தற்காலிக உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோரை நிரந்தரம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், அவர்கள் 7 அல்லது 8 ஆண்டுகளுக்கு மேலாக சட்டமன்றத்திலே பணியாற்றுகிறார்கள். அவர்கள் வேறு எங்கும் சென்று வேலை தேடமுடியாத நிலைமையில் இருப்பதால் அவர்களுடைய பணிகளை நிரந்தரமாக்கித் தரவேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் 25 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்க மருத்துவமனை ஒன்று இருக்கிறது. தற்போதும் முன்பிருந்த நிலையிலேதான் இருக்கிறது. அதற்குக் கட்டிடங்களைக் கட்டி, மருத்துவர்களை நியமித்து, இந்த அரசாங்க மருத்துவமனையை விரிவாக்கித் தரவேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பட்டுக்குப் பேர்போன என்னுடைய ஆரணித் தொகுதியில் அரசாங்கம் சாய ஆலை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல வீட்டு வசதி வாரியம் ஒன்றையும் ஆரணியில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளுக்கு இந்த ஆண்டு நிறைய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆரணியில் ஒரு தொழிற்சாலையை அமைத்துத்தர வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பட்டுச் சேலைகளை நெய்வதற்கு மூலப் பொருளான ''கோரா'' சரியாகக் கிடைக்காத காரணத்தால், கர்நாடக அரசும் தமிழ்நாடு அரசும் கூட்டுறவு முறையிலே ஒரு விற்பனைக் சங்கத்தை ஆரணியிலே துவக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பட்டுப் பூச்சி வளர்ப்பு மையம் ஒன்றை ஆரணியிலே ஏற்படுத்துவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முற்போக்கானத் திட்டங்களை இந்த அரசு தயாரித்து அதனுடைய பலன்கள் மக்களுக்குச் சென்று அடையவேண்டுமென்று நிறையத் திட்டங்களைத் தயாரித்து அந்தப் பலன்களை தமிழ்நாட்டு மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஏழையெளிய மக்களைக் காப்பாற்றுகின்ற அரசாக இந்த அரசு அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இந்த அரசினுடைய முற்போக்கானத் திட்டங்கள் மக்களைச் சென்றடையக் கூடாது என்று சில கட்சிகள் சில தவறான பிரச்சாரங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அதையும் மீறி, அரசாங்கம் போடுகின்ற திட்டங்களின் பலன்கள் மக்களைச் சென்று அடைய ஆரம்பித்து விட்டன. அவர்களெல்லாம்

வாயார இந்த அரசை வாழ்த்துகிறார்கள். அவர்களுடைய வாழ்த்தோடு என்னுடைய வாழ்த்தையும் இணைத்து என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால் ஒரு பாடல் வரியை நினைவு கூர்ந்து என் உரையை முடிக்கிறேன். ''ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை'' என்பது போல இந்த அரசினுடைய திட்டங்களை, இந்த அரசினுடைய சீரிய சிறப்பு களை யாராலும் மறைக்க முடியாது என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

7. விதி 110-இன் கீழ் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் அறிக்கை

முதலமைச்சர் பிறந்தநாளையொட்டி இலவச கண் சிகிச்சைத் திட்டங்களைத் துவங்குதல் குறித்து

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110இன் கீழ் இந்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்:

''கண் பார்வையற்றவர்களுக்கு இலவச கண் சிகிச்சை அளிக்கும் நோக்கத்தோடு தமிழக முதல்வர் அவர்கள் தனது முந்தைய பதவிக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு முகாம்களை நடத்தியதை நாம் நன்கு அறிவோம். அதை விரிவுபடுத்தும் எண்ணத்தோடு இந்த ஆண்டு கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் தேதி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இடத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்துவது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், இந்த ஆண்டில் சென்னை, செங்கை—அண்ணா, திருச்சி, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களையும் கண் புரை யற்ற மாவட்டங்களாக (கேட்டராக்ட் ப்ரீ டிஸ்டிரிக்ட்ஸ்) அறி வித்து, இந்த நோயை அந்த மாவட்டங்களில் இல்லாமல் செய்வதுஎன்றும் படிப்படியாக மற்ற மாவட்டங்களிலும் இதை விரிவு படுத்துவது என்றும் இந்த அரசு முடிவு செய்துள்ளது''

மேலும், கண் சிகிச்சைக்காக நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் தனியார் கண் மருத்துவமனைகளையும் பயன்படுத்திக் கொள்வது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது,

6. மானியக்கோரிக்கைகள்1989—90-விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சட்டமன்றம், சட்டமன்ற வளாகம், தேர்தல் பற்றிய பல்வேறு செய்திகளை மிகக் குறுகிய நேரத்திலே சொல்ல வேண்டியிருக்கிறது.

சட்டமன்றத்திலே பேசுகின்ற பேச்சுக்கள், எடுத்து வைக்கின்ற கருத்துக்கள் எல்லாம் எந்த அளவுக்கு துறைகளிலே இருக்கின்றவர்களுடைய மனதிலே பட்டு, அவை செயல்வடிவம் பெறுகின்றன என்பதை நாங்கள் தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு இருத்தல் வேண்டும். இங்கே பேசுகின்ற பேச்சுக்களை எல்லாம்—அதில் வருகின்ற வினாவாக இருந்தாலும் சரி, கருத்துக்காளக இருந்தாலும் சரி, ஆலோசனையாக இருந்தாலும் சரி—அவைகளுக்கு என்ன பதில் அல்லது நீங்கள் சொன்னதிலே எது சரி, எது சரியில்லை, எது பொருந்தும், எது பொருந்தாது என்பதை நாங்கள் அறிவதற்கு உரிய ஒரு வாய்ப்பினை முதலிலே ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்தப் பேரவை முடிவு செய்ய வேண்டும்; இந்த அமைச்சரவை முடிவு செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளுடன் எனது செய்தியைத் தொடங்க விரும்புகிறேன்.

அண்ணா சாலையிலிருந்து பேரறிஞர் அண்ணா சிலையைத் தாண்டி நீங்கள் உள்ளே வருகின்ற வளாகம் வரை நமது சட்டசபை சபாநாயகருடைய பொறுப்பிலே இருக்கிறது. அந்த வளாகத்திற்குள்ளே நீங்கள் வருகிற நேரத்தில் இடதுபுறம் பார்த்தால் நிலத்தடியிலே இருந்து குருடாயில் வந்து மேலே பொங்கி வருவது போன்ற ஒரு தோற்றம் நமக்குக் கிடைக்கும். இங்கே கூட எண்ணெய் கிடைக்கிறதோ என்ற ஆச்சரியம் வரும். ஆனால், உண்மையிலேயே அது என்னவென்று சொன்னால் மக்கள் சிறுநீர் கழித்த இடம் அது.

அதைத் தாண்டிப் போகிறோம் என்று சொன்னால் ஒரு இடத்தில் குளம் இருந்த இடம் இப்போது அது மண்ணாகத்தான் கிடக்கிறது. உள்ளே இப்போது குப்பை கொட்டி நிரப்பப்படுகிறது. அதைச் சுற்றி இருக்கிற சுவர்கள் எல்லாம் பாளம், பாளமாக வெடித்து நிற்கின்ற, ஏன் கீழே விழவில்லை என்றால் அதிலே சுவரொட்டி ஒட்டப்பட்டிருக்கிற காரணத்தால் ஒட்டிய சுவரொட்டிகள் அதைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கின்றன.

அதைத் தாண்டி நீங்கள் போனால்—நான் ஏற்கெனவே 7ஆவது அவையில் இருந்த சபாநாயகருக்குக் கடிதம் எழுதினேன். 8ஆவது அவையில் இருந்த சபாநாயகருக்கும் கடிதம் எழுதினேன், இந்த அரசினர் தோட்டம் பற்றி. ஏனென்றால் ஒரு காலத்திலே உள்ளே வருவதற்கே ஒரு அச்சமும் ஆச்சரியமும் வினாவும் வியப்பும் கலந்த எண்ணம், பயபக்தி அங்கே உள்ளே நுழைகின்றவர்களுக்கு வரும். இப்போது அப்படி இல்லை.

1989 மே 4] [திரு. குமரி அனந்தன்]

யார், யாரோ வருகிறார்கள், போகிறார்கள். அது ஒருபுறம் இருக்கட்டும். ஆகவே, அங்கே வாயில் காப்போர் ஒருவர் தேவைப்படுகிறார்.

நீங்கள் அதைத் தாண்டி உள்ளே வருகிற நேரத்தில்—முன்பு நான் ஏன் சபாநாயகருக்குக் கடிதம் எழுதினேன் என்று சொன்னால்—அதிகாலையிலே உலா போகிறபோது, நடையாக, கால் நடையாக போகிற நேரத்திலே, உடற் பயிற்சிக்காகச் செல்கிற நேரத்தில் ஏராளமான ரிக்சாக்கள், ஆட்டோ ரிக்சாக்கள், சைக்கிள்கள் அங்கே வரும். அவைகளை அங்கே நிறுத்திவிட்டு, அதிகாலயிலே போவது எங்கே என்று பார்த்தால் அங்கே இருக்கிற செடிகள், கொடிகள், புதருக்குள் பின்னாலே போய் ஆளுக்கு ஒரு சுருட்டோ பீடியோ சிகரெட்டோ பற்ற வைத்துக்கொண்டு ஏதோ விடுதலைப் போராளிகள் போல, அங்கே கொரில்லாக்களைப் போல உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். தங்களுடைய மலம் ஜலம் கழிக்கும் இடமாகவும் அது இருக்கும். இதை எல்லாம் அவர்கள் காணவேண்டும் என்பதற்காகத்தான் கடிதம் எழுதினேன். இப்போது அந்தப் பழக்கத்தை எப்படியோ பெரும்பாலும் தடுத்து விட்டார்கள். எப்படி என்றால் அப்படி வருகின்றவர்களைத் தடுத்து அல்ல; அங்கே இருக்கிற செடிகொடிகளை வெட்டிவிட்ட காரணத்தால் இப்போது யாரும் உட்கார முடியாத சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அரசினர் தோட்டம் என்று சொன்னால் அது தோட்டமாக இருக்கிறதா? கொஞ்சநாள் கழித்து அது பொட்டல் காடாக மாறிவிடும் என்று சொல்லுகின்ற வண்ணம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

இரவு நேரத்திலே போதிய வெளிச்சம் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் அங்கே இருக்கிற பாதை நமக்குப் பழக்கப்பட்ட பாதைதானே என்று காரை செலுத்திக்கொண்டு போனால் நடுவழியிலே திடீரென்று ''ஸ்பீட் பிரேக்கர்'' போலே ஏதாவது தோன்றும். என்ன என்று பார்த்தால் அது மனிதனாக இருக்கும். இப்படிப்பட்ட நிலைமை அரசினர் தோட்டத்தில் இருக்கிறது.

அதைத்தாண்டி நீங்கள் வருவதாக இருந்தால், தேர்வாணை வாரியத்திற்கு எதிர்ப்பக்கத்திலே ஒரு பெரிய மரம் பட்டுப்போய் இருக்கிறது. பட்ட மரத்தைக்கூட நாம் அழகுபடுத்திவிடலாம். அதிலே ஒட்டுச் செடிகளை வைத்து ''கிராஃப்ட்'' பண்ணிவிடலாம். ஒரு மரத்தைக் கூட வெட்டக்கூடாது என்றால், பட்ட மரத்தைக்கூட வெட்டக்கூடாது அது உறுதியாக இருக்கின்ற வரையில். 100 ஆண்டு, 80 ஆண்டு, 70 ஆண்டு உள்ள மரங்கள்தான் இன்றைக்கு அங்கே நிற்கின்றனவே தவிர, சிறு மரங்கள், நாற்றுகள் அங்கே வைக்கப்படுவதே இல்லை.

(முற்பகல் 11–10)

அரசினர் தோட்டம் என்கிற அந்தப் பெயரையே அது இழக்கிற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்கே பக்கத்திலே நமது சுற்றுலா அமைச்சர்

அவர்கள் இருக்கிறார்கள். சுற்றுலாவுக்கென்று அங்கே ஒரு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே சில பேருந்துகள் நிறுத்தப் பட்டிருக்கின்றன. அதிகாலை நேரத்தில் போகிறபோது அவர்கள் வருகிற வேகத்தைப் பார்த்தால் மிக பயங்கரமாக இருக்கிறது. அதோடு மட்டுமல்ல. கலைவாணர் அரங்கின் கோட்டைச் சுவருக்கும், புது சட்டமன்ற உறுப்பினர் விடுதியின் கோட்டைச் சுவருக்கும் இடையில் எப்போதும் 3, 4 எண்ணெய் லாரிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை ஏன் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியாது.

அங்கே இருக்கின்ற உணவு விடுதிக்குப் பக்கத்திலே இருக்கிற இடத்தைத் தனியார் பஸ் ஸ்டாண்டாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாள்தோறும் அங்கே ஒரு பஸ் பகல் நேரத்தில் நிற்கும். இரவு நேரத்திலே புறப்பட்டுப் போகும். இதெல்லாம் அரசினர் தோட்டத்தில் இருக்கின்ற நிலை.

அதைப்போலவே தேர்வாணையகத்தைத் தாண்டி வந்தால், இராஜாஜி ஹாலுக்குப் பின்னாலே ஒரு பெரிய ''இம்போஷிங் பில்டிங் என்ற வகையில் எழுச்சியோடு ஏற்றத்தோற்றத்தோடு கம்பீரமான கட்டடமாக ஒன்று இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் அழகு ஒழுக இருக்கிறது. முன்பெல்லாம், 1980லே எல்லாம் அங்கே உறுப்பினர்கள் இருந்தார்கள். பழைய உறுப்பினர்கள் அங்கே தங்கி, பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி என்று கூட அதை அழைப்பது உண்டு. இப்போது அங்கே உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பது தெரியாது. அந்த அழகான கட்டிடத்தின் மேலே இடிதாங்கி இருந்துகொண்டிருக்கிறது, இடி விழுந்து அது கீழே விழுந்துவிடக்கூடாது என்பதற்காக. ஆனால் இப்போது இடிவிழாமலே கூட அந்தக் கட்டிடம் இடிந்து விழுகிற நிலைமையில் இருக்கிறது. அதைச் செம்மைப் படுத்த வேண்டியது நம்முடைய கடமை. அங்கே இருக்கிற விடுதிகளுக்குப் பெயர் சொல்கிறபோது ஒன்று பழைய விடுதி; இன்னொன்று புதிய மாடி விடுதி; இன்னொன்று 'எர்ஸ்ட்வொய்ல்' நியூ ஹாஸ்டல், அதாவது முன்னைய புதிய விடுதி என்றெல்லாம் சொல்கிறார்கள். இவைகளை எல்லாம் மாற்றி ஒருவருடைய பெயரை வைத்து விட்டால் கூட தவறு இல்லை. எல்லாவற்றுக்கும் பொதுவாக இருக்கவேண்டும் என்று சொன்னால், சேரன் விடுதி, சோழன் விடுதி, பாண்டியன் விடுதி என்று கூட பெயரை வைத்துவிடலாம் என்று சொல்கிற ஒரு ஆலோசனையை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து சட்டசபைக்குள்ளே வந்துவிடுகிறோம். காலம் அதிகமாக இல்லாத காரணத்தால் நான் வேகமாக வருகிறேன். சட்டசபைக்குள்ளே வருகிறபோது பார்த்தால் இந்த இடம் இராணுவத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. எனவே எல்லாமே நாம் செய்துவிட முடியாது. இங்கே என்ன நடக்கிறது என்று சொன்னால் அகன்ற பெரிய பெரிய லாரிகள் திடீர் திடீரென்று வருவதைப் பார்த்தால் ரொம்ப ரொம்ப அச்சமூட்டுவதாக இருக்கிறது. உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல; பொது

1989 மே 4] [திரு. குமரி அனந்தன்]

மக்களுக்கு மட்டுமல்ல; அமைச்சர் பெருமக்கள், முதலமைச்சர் ஆகிய அத்தலைவர்களுக்கும் அச்சம் ஊட்டுகிற வகையில் தான் அவை வந்து கொண்டிருக்கின்றன. அவை வருவதைத் தடுக்க முடியாது. ஆனால் போர் நினைவுச் சின்னத்திற்கும், நமது நுழைவாயிலுக்கும் இடையிலே அகழியிலே ஒரு பாலம் போலே போட்டு அவர்களுக்குத் தனி வழி ஒன்று கொடுக்க முடியுமா என்று சிந்திக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்களோடு அது குறித்துப் பேச வேண்டும். அது நமது கட்டுப்பாட்டில் இல்லை என்பது எனக்குத் தெரியும்.

அதைப்போல கார் விடுகிற இடத்தைப் பார்த்தால் அமைச்சர்களுக்கு என்று சில இடங்களில் பாதுகாப்போடு அவர்களுடைய கார்களை நிறுத்திக் கொள்கிறார்கள். கார் ஓட்டிகளை வைத்திருக்கின்ற வசதி படைத்தவர்கள் அவர்களுடைய பார்வையில் விட்டு விடுகிறார்கள். எங்களைப் போன்றவர்கள் நாங்களே ஓட்டிக்கொண்டு வருகிற கார்களை— கை ஒடிந்த நிலையிலேயும் இப்போது நான்கைந்து நாட்களாக கார் ஓட்டுகிற நிலைக்கு எனது கை உதவுகிறது— நிறுத்துவதற்கு இடம் இல்லாமல் சிரமப்படுகிறோம். 'செல்ஃப் டிரைவிங்' செய்துகொண்டு வருகிற உறுப்பினர்கள் தங்கள் கார்களை நிறுத்துவதற்கென்று பக்கத்திலே ஒரு இடம் வேண்டும். அப்படி இடம் வேண்டும் என்பது மட்டுமல்ல: நிழல் இல்லை. இங்கே சூடான விவாதத்தில் கலந்து கொண்டு அங்கே போகிறபோது கார் அதைவிடச் சூடாக இருக்கிறது. எனவே அதற்கு நிழல் கொடுக்கிற வசதி இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

மனுக்கள் கொடுக்க வருகிற அந்தப் பொதுமக்கள் தனியாக நிற்க இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. வேலி போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அங்கே இருக்கை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். சிமெண்ட் பெஞ்சாவது போட்டுக்கொடுக்க வேண்டும். குடிநீர் வசதியாவது அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உள்ளே நுழைகிறபோது உள்ளே இருக்கிற காவலர்களைப் பார்க்கிறபோது, பணியாட்கள் பலரையும் பார்க்கிறபோது பெரிய போர்வைக்குள்ளே நுழைந்தவர்கள் போலே பெரிய சட்டை போட்ட சிறிய உருவங்களும், சிறிய சட்டை போட்ட பெரிய உருவங்களுமாக அவர்கள் தெரிகிறார்கள். ஏனென்று கேட்டால் சட்டையாக எங்களுக்கு கொடுத்து விடுகிறார்கள். துணியாகக் கொடுத்துவிட்டால் எங்கள் அளவுக்கு தகுந்தவாறு அழகாக நாங்கள் தைத்துக்கொள்வோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். இரண்டு வருடங்களுக்கு 4 இணை என்று கொடுப்பதற்குப் பதிலாக வருடத்திற்கு நான்கு இணை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் மற்ற உறுப்பினர்கள் கூறியதைப் போல அவர்களுக்கு எல்லாம், ஊதியத்தையும் மற்றைய படிகளையும்—மாலை வரையில் அவர்கள் காத்திருக்கின்ற காரணத்தால் எவ்வளவு தூரம் அவர்களுக்கு அதிமாக்கிக்

கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்கவேண்டும். எல்லோரும் சொன்னதையே நானும் சொல்ல வேண்டாம் என்பதற்காக அதாவது காலத்தின் அருமை கருதி அவர்களுடைய வேண்டுகோளை நான் ஆதரிக்கிறேன் என்பதை மட்டும் சொல்லி அடுத்த செய்திக்குப் போகிறேன்.

உள்ளே வருகிறபோது அங்கே நூலகம் வருகிறது. நூலகத்தில் நூல்கள் இருக்கின்றன, சரி. ஆனால் 'க்ளிப்பிங்ஸ்' என்று சொல்லப்படுகிற பத்திரிக்கை நறுக்குகள் இங்கே இல்லை. பத்திரிகை நறுக்குகள் மிக, மிகத் தேவை. இப்போது கூடங்குளம் என்று சொன்னால் அந்தக் கூடங்குளத்தைப் பற்றிய செய்திகள் அத்தனையும் நறுக்குகளாக அங்கே இருக்கவேண்டும். அப்படி செய்திகளை எல்லாம் நறுக்குகளாக அங்கே வைக்கவேண்டும் என்றால் இப்போது அங்கே இருக்கின்றவர்கள் போதாது. அதற்கென்று டெக்னிஷியன்ஸ், டெக்னிக்கல் அஸிஸ்டென்ட்ஸ் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். நிறையப்பேர் இருந்தால் தான் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்ய முடியும். அதற்கு உதவ வேண்டும்.

அடுத்து ஒரு ஜெராக்ஸ் மிஷின் இருந்தால் நல்லது. ஏதாவது ஒரு பெரிய புத்தகத்திலிருந்து அல்லது ரெஃபரன்ஸ் புத்தகத்திலிருந்து ஒரு பக்கம் எடுத்துக்கொண்டு போக வேண்டும் என்றால் புத்தகத்தை எடுத்துக்கொண்டு போக முடியாது. எனவே ஜெராக்ஸ் மிஷின் இருப்பது மிகவும் தேவை என்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு செய்தி. அது என்னவென்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கடமைகளை ஆற்றுவதற்கு அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்குச் சில செய்திகள், எங்கெங்கே இருக்கின்றன என்று தெரிந்துகொள்வதற்கு வசதியாக, நூலகத்திற்கு வருகிற நூல்கள், வருகின்ற ஏடுகள் இவைகளிலிருந்து இன்னின்ன தலைப்பிலே இன்னின்ன தகவல்கள் வந்திருக்கின்றன, இன்னின்ன தலைப்பிலே இன்னின்ன செய்திகள் வந்திருக்கின்றன என்ற அந்தத் தலைப்புகளின் தொகுப்பு ஒன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாரம்தோறும் அனுப்ப முடிந்தால் அந்தக் குறிப்பிட்ட தலைப்பிலே வந்திருக்கிற நல்ல கருத்துக்களை அவர்கள் தேடி எடுத்துக்கொள்ள முடியும். நான் இந்த செயலகத்தைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு முயற்சியிலே நீங்கள் ஈடுபட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்த செய்தியாக சொல்கிறேன். நாங்கள் இங்கே வருகிற போது, தண்ணீர் வசதி. பாராளுமன்றத்தில் எல்லாம் தண்ணீர் வைக்கின்றார்கள் என்றால், குடிதண்ணீர் வைக்கிறார்கள் என்று சொன்னால் வடிகட்டிய தண்ணீர் ஒரு பக்கம் இருக்கும், வெந்நீர் ஒரு பக்கம் இருக்கும். வெதுப்பி ஆறவைத்த தண்ணீர் ஒரு பக்கம் இருக்கும். சாதாரணமாக தண்ணீர் என்று சொல்கிறோமே, அது ஒரு பக்கம் இருக்கும். பனி நீர் என்று சொல்கிறோமே

ஐஸ்வாட்டர், அது ஒரு பக்கம் இருக்கும். இவை அத்தனையும் வைத்துவிட்டால், உதவியாளர்கள் இல்லாமலேயே கூட நாம் சென்று குடித்துவிட்டு வருகின்ற வாய்ப்பு இருக்கும். அவைகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அதே போல, சர்க்கரை ஆலை பற்றி பேசுகிறோம். வந்திருக்கின்ற பல உறுப்பினர்கள் தானே சர்க்கரை ஆலையாக இருக்கின்ற காரணத்தினாலே சர்க்கரை இல்லாத காபியை இங்கே கொடுப்பதற்கு சில ஏற்பாடுகளைச் செய்தால், விலைக் குத்தான் சும்மா இல்லை, அப்படி கொடுத்தால், அது நலமாக இருக்கும் என்று உங்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே சபைக்கு வருவோமானால் இது வேர்த்து விருவிருத்துக் கொண்டிருக்கின்ற இடமாக இருக்கிறது. அதற்கு மேலும் சில வசதிகளை கூட்ட முடிந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

சபாநாயகர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர் நடு நிலையிலேயிருந்து அவர் சிறிதுகூட வழுவக்கூடாது, நழுவக் கூடாது என்பது நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்ட ஒன்று. சான்றாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், ஒரு தடவை மௌலங்கர் அவர்களை பண்டித ஜவஹர்லால் நேரு பெருமான் நினைவு தவறிய வகையிலே ஒரு சிறு குறிப்பு கொடுத்து தயவுசெய்து என்னுடைய அறையில் சந்தியுங்கள் என்று திரு. மவுலங்கர் அவர்களிடம், அப்போது இருந்த ஸ்பீக்கர் பாராளுமன்ற சபாநாயகர் அவர்களிடம் கொடுக்க, உடனே அவர் அந்த குறிப்புச் சீட்டிலே பின்னால் Speaker does not go anywhere other, must come to him, என்று அவர் எழுதிவிடவும், உடனே வருத்தம் தெரிவிக்கின்ற பாணியிலே ஓடோடி நேரு பெருமான் வந்து நினைவு தவறி நான் எழுதிவிட்டேன் என்று அவர் வருத்தம் தெரிவித்த செய்தியை எல்லாம் நாம் வரலாற்றிலே பார்க்கிறோம். எனவே சபாநாயகர் என்பவர் அனைவருக்கும் மேற்பட்டவர் என்பதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுக்கு இன்னும் இரண்டே இரண்டு நிமிடங்கள் உள்ளன. உங்களுக்கு 12 நிமிடங்கள் ஒதுக்கி இருக்கிறோம். 10 நிமிடங்கள் முடிந்து விட்டன.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே சபாநாயகர் அவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கவேண்டும். எனவே இங்கேயும் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கின்றார் என்பதை நிரூபித்துக்கொண்டிருக்கின்றார் நமது சபாநாயகர் அவர்கள். சில நேரங்களில் சபாநாயகர் அவர்கள், எந்தவிதமான கட்சிமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டவராக இருக்கவேண்டும். நான் சான்றுகள் சொல்ல வேண்டியதில்லை. சான்றுகள்

சொல்லவும் கூடாது. ஒன்றை சொல்ல வேண்டுமென்று சொன்னால், திரு. செல்லபாண்டியன் அதே இடத்திலே சபாநாயகராக இருந்தார்கள், தடவை அவர் மீது நம்பிக்கை இல்லாத தீர்மானம் வந்தது. அந்த நம்பிக்கை இல்லாத தீர்மானத்தை எதிர்க்கட்சியினரும், அனைத்துக் கட்சியினரும் திரும்பப பெற்றுக்கொள்வது நல்லது என்ற முடிவுக்கு வந்தார்கள். அந்த தலைவர்கள எல்லாம் அப்படி ஒரு முடிவுக்கு வந்த ஒரு நேரத்திலேகூட, இந்த முடிவை எடுப்பதற்குக்கூட இந்த முடிவை நாங்கள எடுக்கப்போகிறோம, அதற்காக நாங்கள கூடிபேசப்போகிறோம், உங்களுடைய அறையை நாங்கள் இரண்டு நிமிடங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்று சொன்ன நேரத்திலே கூட, செல்லபாண்டியன் அவர்கள் மறுத்துவிட்டார்கள். இதை ஒரு சான்றாகச் சொல்வதறகுக் காரணம் என்ன என்று சொன்னால், அவர் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கவேண்டும், தனக்காகவும்கூட இருக்கக்கூடாது என்பதற்காக இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பேசுகின்ற நேரத்தில், சில செய்திகளை வந்து சொல்கிறோம. வினா நேரம் என்று ஒருகாலத்திலே இல்லை. பிறகு வினா நேரம் ஒன்று கேட்கப்பட்டது, உரிமைகள் அதிகமாக வேண்டும் என்பதற்காகத்தான். அதேபோல, இப்போது உரிமைகள் அதிகம் பெறவேண்டுமே தவிர வேறு ஒரு ஐயப்பாடும் எனக்கு இருக்கிறது. வரவர அது குறைந்துகொண்டு இருக்கிறதோ என்று சொல்கின்றபோது, ஒரு பக்கத்திலே அதிகமாகவும் உரிமைகள் எடுத்துக்கொள்வது போன்ற ஒரு தோற்றம் இன்னொரு பக்கத்தில் இருக்கிறது. உண்மையான கருத்துக்களை சொல்லவேண்டுமென்றால் அதைபபற்றி சிந்தித்து சொல்ல வேண்டும் என்று இங்கே வருகின்றவர்களை நாம் குறுகிய காலத்திலே முடியுங்கள் என்று சொல்கிற நேரத்தில், முடிக்க வேண்டும் தான், எல்லோரும் பேச வேண்டும்தான், எல்லோரும் கருத்து வைக்கவேண்டும் தான், ஆனாலும்கூட சில கருத்துக்களை வைப்பதற்கு நேரம் இல்லாமல் போவதும், சிலவற்றை அனுமதிக்க மாட்டோம் என்று சொல்வதும் எல்லைக்குட்பட்டும் இருக்கவேண்டும். ஆனால் சில நேரத்திலே எல்லாவற்றையும் நிறுத்துகின்றபோது நம்முடைய உரிமைகளே கூட சில நேரங்களிலே குறைகிறதோ என்று சொல்கின்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. அதை நாம் சிந்திக்கவேண்டும் என்று நான் உங்களை பணிவோடு கேட்டுக்கோள்கிறேன்.

அதேபோல, இங்கே பேசிய உடனே அமைச்சர்கள் பதில் சொல்வது என்பது முடியாத காரியம். இப்போது செய்கிறார்கள். ஆற்றல் மிக்க அமைச்சர்களும், முதலமைச்சர் அவர்களும் செய்கிறார்கள். இதில் நான் ஒரு ஆலோசனையை சொல்ல விரும்புகிறேன். ஆலோசனையாக பணிவோடு முன்னால் வைக்கிறேன். ஒரு தடவை ஒரு மானியக் கோரிக்கையின் மீது பேசிவிட்டால், பேசுகின்றவர்கள் எல்லாம் இன்று பேசிவிடவேண்டும் பதில் சொல்கின்ற அமைச்சர் மறுநாள் காலையிலே அதனைத்

1989 மே 4]6 [திரு. குமரி அனந்தன்]

தொடங்கவேண்டும். அது வினா நேரத்திற்கு முன்னாலேயோ பின்னாலேயா என்பது வேறு. அப்போதுதான் இங்கே பேசியவர்கள் என்ன என்ன கருத்துக்களைச் சொன்னார்கள் என்று அவர்கள் நிறுத்தப்பார்த்து, சரியா தப்பா என்று உறைத்துப் பார்தது பதில் சொல்லமுடியும். உதாரணமாக சொல்ல விரும்புகிறேன். நமது போலீஸ் மானியத்திலே இரண்டு நாட்கள் நடக்கின்றபோது முதல் நாள் பேச்சுக்கு விளக்கமாக பதில் அளித்த முதல்வர் அவர்கள், எல்லாவற்றிலும ஆற்றல் பெற்ற முதல்வர் அவர்கள், முதல் நாள் பேசிய கருத்துக்களுக்கு பதில் அளித்ததைப்போல், இரண்டாவது நாள் பேசிய கருத்துக்களுக்கு எல்லாம் பதில் அளிக்க முடியாதது நேரம் குறைவு ஒரு காரணமாக இருந்தாலும்கூட அதிகமான தன்னுடைய நேரத்தை அதற்கு செலவிட முடியவில்லை என்பது இருக்கிறது. எனவே பேசுகின்றவர்கள் அத்தனை பேர்களும் ஒரு நாள் பேசி மறுநாள் அவர்களுடைய பதிலே இருந்து தொடங்குவோமானால், அவர்கள் இன்னும் சற்று சிந்திப்பதற்கும் துறையிலே இருந்து அவர்கள் பதிலைப் பெறுவதற்கும், கருத்துக்களை பெறுவதற்கும், வாய்ப்பு இருக்கும் என்கின்ற ஆலோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

இன்னும் இரண்டு செய்திகள். இங்கே நம்மைப் போலவே இன்னும் சொல்லப்போனால் நம்மைவிட அதிகம் முன்னாலே வந்திருந்து, செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்களுக்கு இப்போது 25 பஸ் பாஸ்கள்தான் கொடுக்கப்படுகிறதென்று சொல்லுகிறார்கள். அதைச் சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டும். அதைப்போல அவர்கள் இங்கே இருந்து சில நேரங்களில் அதிகநேரம் தாமதித்துப் போக வேண்டி இருப்பதால், அவர்களுக்கு இடம் கொடுப்பது என்பதைப் பொறுத்தவரையில், சைதாப்பேட்டைக்குப் பின்னாலே இருக்கும் இடத்திலே அவர்கள் தங்களுக்கு வீடு கிடைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அதை நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கின்ற பத்திரிக்கையாளர்களுடைய அறை இருக்கிறதே— It is cramped— இடம் இல்லாத காரணத்தாலே சிலர் நின்று கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். அதைப்போல் டெலிபோன் வசதிகள் இல்லை. அதைச் சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களைப் பற்றி 2 வார்த்தைகள். இப்போது ரெயில்வே கூப்பன்கள் என்பதற்குப் பதிலாக பணம் கொடுக்கிறார்கள். மகிழ்ச்சி, ஆனால் பஸ் பாஸ் வைத்திருக்கிறவர்கள் அந்த பஸ் பாசை சரண்டர் செய்துவிட்டால், அதற்குத் தகுந்தாற்போல ஒரு காம்பன்சேஷன் கொடுக்க முடியுமா, அதற்கு ஒரு ஈடு கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற ரெயில்வே கூப்பன்களுக்கு ஒதுக்கப்படும் பணம் போதாது. இன்னும் அதை அதிகமாக ஒதுக்க வேண்டும். இப்

போது சான்றாக என்னை எடுத்துக்கொள்ளுங்கள். நான் சாத்தான்குளம் போய் வர வேண்டுமென்றால், நாம் கொடுக்கும் பணத்தில் எத்தனை முறை போய் வர முடியும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். சேப்பாக்கத்திலே இருக்கின்றவர்களுக்கு வேறு, பூங்கா நகரிலே இருக்கின்றவர்களுக்கு வேறு. அங்கே இருப்பவர்கள் என்ன செய்வது என்பதைப் பற்றி சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. ஏராளமான மனுக்கள் வருகின்றன. வருகின்ற தபால்களுக்கெல்லாம் நாங்களே அஞ்சல் தலை ஒட்டிக்கொண்டிருந்தால் அது முடியாது. இப்போது சிரமத்தின் பேரிலே நடந்து கொண்டிருக்கிறது. தயவு செய்து அஞ்சல் தலைகளை சர்வீஸ் ஸ்டாம்ப் மாதிரியோ அல்லது ப்ரீ-பெய்ட் மாதிரியோ ஏற்பாடு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

அதைப்போல, தொகுதியிலே அலுவலகம் வைத்து நடத்த, செயலாளர்களுக்கு அந்த அலுவலகக் கட்டிடத்திற்கு உரிய வாடகை இவைகளைக் கொடுக்க வேண்டும். (மணிஅடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறிப்பிட்ட நேரத்திலே முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன்: நான் தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்ய வேண்டுமென்றால், என்னுடைய தொகுதி 102 கிலோ மீட்டர் நீளமுள்ளதாக இருக்கிறது. இதிலே சுற்றுப் பயணம் செய்ய வேண்டுமென்றால், தயவு செய்து உங்களை நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். தாலுக்கா ஆபீசில் அல்லது பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் இருந்து, சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்யும்போது ஜீப்பை எடுத்துக்கொள்ளலாம், அதற்கு 50 லிட்டர் பெட்ரோலை வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். நான் ஒரு தடவைகூட ஜீப் எடுத்ததில்லை அந்தப் பெட்ரோலைப் பயன்படுத்தியதில்லை. காரணம் வசதியிருக்கிறது என்பதல்ல. நாம் எடுத்தால் அவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்படுகிறது. எனவே அவர்கள் சிரமப்படுகிறார்கள். எனவே மாதத்திற்கு சில நாட்களாவது ஒரு ஜீப்பும், அதற்கு எவ்வளவு பெட்ரோல் தேவையோ அவ்வளவு பெட்ரோலையும் கொடுக்க வேண்டும். கவர்மென்ட் கூப்பன் மூலம் பெட்ரோல் வழங்கட்டும், பணம் கொடுக்க வேண்டுமென்பதில்லை. அப்படி சுற்றுப் பயணம் செய்ய வசதி செய்து கொடுக்க வேண்டும். அதைப்போல எம்.எல். ஏக்கள் சுற்றுப் பயணம் செய்யும்போது பஞ்சாயத்து யூனியனிலே இருக்கும் அலுவலர்கள் சில நாட்களாவது உடன் அவர்களுடன் போவது மிகவும் நல்லது. அப்போதுதான் உடனுக்குடன் தங்களுடைய பணியைச் செய்ய முடியும்.

1989 மே 4] [திரு. குமரி அனந்தன்]

சுருக்கமாக ஒரே வரியில் முடிக்கிறேன். அருமைக்குரிய பெருமக்களே, இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதி, அறை இருக்கிறதே அங்கே There is no privacy எல்லாமே ஒன்றாக இருக்கிறது. இப்போது பலவிதமான திட்டங்களைப் போட்டு நீங்கள் காரியங்களைச் செய்யும் காரணத்தாலே, ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் இப்போதிருக்கும் அறைக்குப் பின்னாலேயே ஓர் அறையைக் கட்டி, அத்துடன் இணைத்து, அவர்கள் தனியாகப் பயன்படுத்திக்கொள்ள ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு ஹவுஸ் என்று டெல்லியிலே இருக்கிறது. எம். எல். ஏ. வாக இருக்கிறவர்களிடம் 15, 20 ரூபாய் வாடகை வாங்குகிறார்கள். எக்ஸ்-எம்.எல்.ஏ.க்களிடம் 200 ரூபாய் வாடகை கேட்கிறார்கள். பாவம் அவர்கள், அது வேண்டாம் அதற்காக அங்கே எக்ஸ். எம். எல். ஏக்கள் நிரந்தரமாகக் குடியிருக்க மாட்டார்கள், குடியிருக்கக் கூடாது. வருஷம் இத்தனை நாட்கள் அவர்களுக்கு எம். எல் ஏ-க்களுக்கான கட்டணத்தில் கொடுக்கலாமா என்பது பற்றி அரசு சிந்தித்துப் பார்த்தால் நல்லது. அதைப்போல அவர்களுக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எம். பி. பென்ஷன் வாங்குகிற காரணத்தாலே சட்டமன்ற உறுப்பினர் பென்ஷன் கூடாது என்று சொல்ல வேண்டியதில்லை. இரண்டும் கொடுத்தால் தவறில்லை என்று சொல்கிறார்கள். அதைப்போல இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் அவர்கள் நல்ல முறையில் பணி செய்ய ஊக்கமளிப்பதாக இல்லை என்ற கருத்து எல்லோர் மத்தியிலும் இருக்கிறது. அந்தக் கருத்து எல்லோர் மத்தியிலும் இருக்கிறது என்பது எல்லோருடைய கண்களும் அகன்று விரிகின்ற காரணத்தாலே எனக்குப் புரிகிறது. அதை இந்த அவையினுடைய கருத்தாக அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, தேர்தல், சட்டமன்றம் பற்றிய மான்யக் கோரிக்கை மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

தேர்தலில் வெற்றிபெற்றால்தான் நாம் சட்டமன்றம்பற்றி இங்கே வந்து பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். இன்றையதினம் நாட்டில் தேர்தல் நடைமுறையானது சரியான முறையில் இல்லை. தேர்தல் நடக்கிறது. அதில் எல்லாக் கட்சிகளும் நிற்கின்றன. எத்தனையோ சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத்தான் நாம் தேர்தல்களை நடத்துகிறோம். தேர்தலில் நிற்பவர்கள் இவ்வளவுதான் செலவழிக்கலாம் என்ற ஒரு அளவு இருக்கிறது. நாம் எவ்வளவோ செலவழிக்கிறோம். இவ்வளவுதான் செலவழிக்கிறோம் என்று கணக்கே இல்லை. ஆனால், கடைசியில்

நாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இவ்வளவுதான் செல வானது என்று எழுதிக் கொடுத்துவிடுகிறோம். எவ்வளவு ரூபாய் செலவானாலும் சரி கணக்கு கொடுக்கிறபோது ரூ. 35,000தான் செலவானது என்று எழுதிக் கொடுக்கிறோம். இதுதான் இன்றைய நிலை. ஒழுங்காக தேர்தல்கள் நடக்க வேண்டுமென்றால் சட்டமன்றத் தேர்தல்களானாலும் சரி — பார்லிமெண்ட் தேர்தலானாலும் சரி, வாகன வசதியிலிருந்து போஸ்டர் அடித்துத் தருவதிலிருந்து சகலத்தையும் — சர்க்கார் பொறுப்பிலேயே செய்து தர வேண்டும். எல்லோருக்கும் பொது வாக இவ்வளவு ரூபாய் என்று நிர்ணயம் பண்ணிவிட்டு பெரிய கட்சிகளுக்கு இவ்வளவு, பணம் உள்ள கட்சிகளுக்கு இவ்வளவு—பணம் இல்லாத கட்சிகளுக்கு இவ்வளவு என்று இல்லாமல்—மொத்தத்தில் நியாயமாக ஒரு தொகையை நிர்ணயம் செய்து செலவழிப்பது நல்லது. கட்சிகள் எல்லோருக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். அரசியல் கட்சிகளுக்குத்தான் நான் சொல்லுகிறேன். இண்டிபெண்டண்ட்ஸ் களுக்கு செலவு செய்ய வேண்டியதில்லை. அதைப் போலவே இவர்களுக்கு வாகன வசதியைக்கூட செய்து கொடுக்க வேண்டும் தேர்தல்போது எல்லோருமே ஒரு வீட்டுக்கு எதிரே போய் எம். எல். ஏ.வுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்கிறோம். இதையெல்லாம் மாற்றி ஒரு சீரான முறையில் நிர்ணயிக்க வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்னாள் ஓட்டுச்சாவடிக்கு வருவதற்கு வசதி செய்து தர வேண்டும் என்று மனு கொடுத்தால் சர்க்காரிலேயே ஏற்றிக்கொண்டு வந்து விடுகிறமாதிரி நிர்ண யிக்கவேண்டும். இதுமாதிரி செய்தால் உபத்திரவம் இருக்காது கஷ்டம் இருக்காது. அதையெல்லாம் தாண்டி இப்போது நாம் ஜெயித்து சட்டசபைக்கு வந்துதிட்டோம். அதற்குப் பிறகு இருக்கிற கஷ்ட நஷ்டங்களையெல்லாம் திரு குமரி அனந்தன் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். கொஞ்சம் வேகமாகச் சொல்லிவிட்டார். காரணம் அவருக்கு டைம் கொடுக்கவில்லை. அதைப்பற்றி நான் வருத்தப்படுகிறேன். மெதுவாக அவர் பேசி இருக்கலாம். நம் சட்டப் பேரவையில் இருக்கிற எல்லோருக்காகவும் நாம் பேசுகிறோம். இன்றைக்கு அவர் சபாநாயகராக உட்கார்ந்து இருக்கலாம். நாளைக்கே கீழே வந்து உட்கார்ந்து விட்டால் நமக்கும் அந்தச் சலுகைகள் வேண்டாமா என்று அவர்களும் நினைத்துப் பார்க்க வேண்டும். அதையெல்லாம் எண்ணிப் பார்த்து அவருக்கு பேச டைம் கொடுத்திருக்க வேண்டும்.

அடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாநகராட்சி களுக்குத் தேர்தலை அறிவித்திருக்கிறார். ரொம்ப நாட்களாக நடக்காத தேர்தலை இப்போது அறிவித்திருக்கிறார். ரொம்ப சந்தோஷம். மக்கள் விரும்புகிறார்கள். இருந்தாலும், வருங் காலத்தில் வர இருக்கிற நிலைமைகளையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நேற்று பேப்பரில் பார்த்தேன். பார்லிமெண்ட் தேர்தல் நடக்கும் என்றும் அது முன்னாலும் நடக்கலாம்— பின்னாலும் நடக்கலாம் என்றும் எழுதியிருக்கிறார்கள். எனக்கு

1989 மே 4] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

ஒரு பயம் இருக்கிறது. நாம் மாநகராட்சிகளுக்கு தேர்தலை அறிவித்துவிட்ட பிறகு அவர்கள் பார்லிமெண்ட் தேர்தலை அறிவித்துவிட்டால் அப்புறம் நம்முடைய தேர்தல்களின் நிலைமை என்ன ஆவது? நம்மைக் கேட்டுத்தான் அவர்கள் அறிவிக்கப் போகிறார்களா ? என்றால் கிடையாது. கிட்டத் தட்ட அந்தத் தேர்தலும் வந்து கொண்டே இருக்கிறது எனவே மாநகராட்சித் தேர்தல்களை கூடுமானவரை விரைவில் நடத்துவது நல்லது. ஆனால் இப்போது இருக்கிற இக்கட்டான சூழ்நிலை யையும் யோசனை பண்ணி நடத்துவது நல்லது என்பதுதான் என் அபிப்பிராயம்.

அடுத்தபடியாக எக்ஸ். எம். எல். ஏ. இப்போதைய எம்.எல். ஏ. என்று இருக்கிற இரண்டு பேர்களின் நிலையைப் பார்த்தால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எம். எம். ஏ ஆக இருப்ப தாலேயே அவர்கள் பெரிய மனிதர்கள் என்று சொல்லிவிட முடியாது. அவ்வளவு எதற்கு? மந்திரிகளின் நிலையை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தான் இருக்கிறது. நீங்கள் என்ன சம்பளம் வாங்குகிறீர்கள் என்று இப்போதுதான் கேட்டேன். உத்திரப் பிரதேசத்திலே இருக்கிற ஒரு உறுப்பினருக்குக் கிடைக் கிற சம்பளம் கூட இங்கே மந்திரிக்கு இல்லை. நம் மந்திரிகள் சம்பளத்தைக் கேட்டால் எனக்கே வெட்கமாக இருக்கிறது. பீச் ரோடில் ஒரு பேங்கில் போய் பார்த்தால் அங்கே எல்லோருக் குமே ஏ. சி. வசதி. சாதாரணமாக 2 கிளார்க்குகள் உட் கார்ந்திருக்கிறார்கள். என்றாலும் அவர்களுக்கு ஏ. சி. வசதி இருக்கிறது. இங்கே மந்திரி ரூமுக்குப் போனால் பங்கா கூட இல்லை. மின்சார மந்திரியைக் காணோம். ஏ.சி. டி.சி எதுவுமில்லை. நமக்குக் கொள்கை இருக்கலாம். அதனால் கஷ்டம் இருக்கலாம். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. நாட்டு நடப்பை நாம் உணர்ந்து நடக்க வேண்டும். அவர்களின் படியைக் கேட்டால் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. அது -அளக்கிற' படியாகத்தான் இருக்கிறது. ஒரு சாமான்ய ஓட்டலுக்குப் போனால்கூட ஒரு சாப்பாடு ரூ. 25. என்கிறான். இதற்கெல்லாம் பொதுப் பணம் விரையமாக வேண்டுமா என்று கேட்கலாம். விரையமாக்க வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. பொதுப்பணத்தை சரியாகச் செலவு செய்யத்தானே நாம் வந்திருக்கிறோம். எப்படி சுருக்கமாகப் பொதுப் பணத்தைச் செலவழிக்கலாம் எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்று நல்லது சொல்லத்தானே வந்திருக்கிறோம்.

பெரிய பணக்காரன்கூட இன்றைக்கு ஒன்றும் செய்ய முடி யாது. எல்லாவற்றிற்கும் சட்டதிட்டம் போட்டுவிட்டோம். அவர்களுடைய வருமானத்திற்கு ஒரு சீலிங் போட்டுவிட்டோம். ஒழுங்காக இன்கம்டாக்ஸ் கட்டினால் ஒழுங்காக வாழ முடியாது. ஏமாற்றுகிறவர்கள்தான் வாழலாம் என்று இருக்கிறது. நாம் சட்டமன்றத்திற்கு ஏமாற்றிவிட்டு வரவில்லை. எனவே எல்ல

உறுப்பினர்களுக்கும் — எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் — மந்திரிகள் உட்பட — நல்ல வசதி பண்ணி அவர்களுக்குள்ள மாத சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தால்தான் அவர்கள் நேர் வழியில் நடக்க முடியும். எவ்வளவு என்று நான் சொல்லவில்லை. நீங்களே தெரிந்து கொள்ள முடியும். நீங்கள் கொடுக்கிற ரூ. 1,500 சம்பளம் 2 நாளைக்குக்கூட வராது. படி கொடுக்கிறீர்கள். என்ன படி? வாசற்படிதான் அது. 2 நாளில் காரில் போனால் எல்லாம் தீர்ந்து போய்விடும். இங்கே 234 எம்.எல்.ஏ.-க்கள் இருக்கிறோம். இதில் 15 பேருக்குக்கூட கார் இல்லை. 15 கார்தான் நிற்கிறது. பாக்கி எம்.எல்.ஏ.-க்கள் எல்லாம் ஏகாதசி எம்.எல்.ஏ.-க்கள்தான்.

[முற்பகல் 11-30]

நீங்கள் கோபித்துக்கொள்ளாதீர்கள். ஏகாதசி என்றால் வசதி இல்லாத எம்.எல்.ஏக்கள் தான் தமிழ் நாட்டில்அதிகம் இருக்கிறார்கள். நிச்சயமாகத் தெரிகிறது. இங்கு வெளியிலே இருக்கிற காரைப் பார்த்தால் தெரியும். இவர்கள் நிச்சயமாக ஆட்டோவில் ஏறவேண்டும், இல்லாவிட்டால் பஸ்ஸில் போக வேண்டும். பஸ்ஸிலே கூட நம்முடன் வருகிற கெஸ்ட்டுகள் முண்டியடித்து ஏறிக்கொள்கிறார்கள். நாம் நின்று கொண்டு தான் வரவேண்டி இருக்கிறது. அதுவும் நல்லதுதான்; நிற்பதால் பாதகம் இல்லை. அந்த அளவில் நம்முடைய நிர்வாகம் இருக்கிறது. என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து ஹாஸ்ட்டலைப் பற்றி. இன்றைக்கு சரியாக 3 ட்ரிப் அங்கு மேலே போய் வந்து இருக்கிறேன். ‘‘ஊசி முனையிலே வெட்டிய குளம் மூன்று, இரண்டு குளம் பாழ், ஒன்றில் தண்ணீரே இல்லை.’’ என்று ஒருவன் பாடுவான். ஹாஸ்டலில் 6 லிஃப்ட்கள் இருந்தாலும் ஒன்றுதான் வேலை செய்கிறது. அதில் 10 அல்லது 12 பேருக்கு மேல் ஏறினால் அது நடுவில் நின்றுவிடுகிறது. அதிலும் 28 பேர் ஏறுகிறார்கள். நான் மூன்று ட்ரிப் போய் வந்தும் உள்ளே போக முடியவில்லை. அந்த அளவுக்கு அங்கே இருக்கிறது. வேறு ஒன்றும் அதிகமாகக் கேட்கவில்லை. அங்கு 234 பேருக்கு எவ்வளவு செலவாகிறது? அதைப் பங்கு போட்டு 234 பேருக்கு பணமாகக் கொடுத்து விடுங்கள். அவர்கள் எங்கேயாவது தங்கிக் கொள்ளுங்கள்; நேரத்திற்கு வந்து சேர்ந்துவிடுங்கள் என்று சொன்னால் கூட நல்லபடியாக அமையும். அங்கு பண்ணுகிற செலவைக் கணக்குப் பார்த்தால், பதிலுக்கு வேறு எங்கேயாவது இரண்டு ரூம்களில் தங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னால் நல்லபடியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படிக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை; வாய்ப்பு நல்லபடியாக வருமென்று நினைக்கிறேன்.

அடுத்து நாளைக்கு சட்டப் பேரவையில் 5-ம் தேதி பொன் விழாக் கொண்டாட்டம் இருக்கிறது. இது நல்ல சங்கடமான நிலைமை. நம்முடைய சீப் மினிஸ்டர் அங்கு போய் இருந்தால், பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் என்னமோ அதிகாரம் கொடுக்கப்

1989 மே 4] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

போகிறார்களாமே, அந்த அதிகாரம் எப்படி நல்லபடியாக கொடுக்கப் போகிறார்களா, நிலைமை எப்படி இருக்கிறது. அது அரசியலாகப் போகுதா என்று கவனித்து இருக்கலாம். இது கூட வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது முதியவர் களை வாழ்த்தப் போகிறார்கள்; அவர்களுக்கு எல்லாம் சால்வை போர்த்தப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்து இந்த வளாகத்திலே பலர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ராமசாமி இங்கே உட்கார்ந்து இருக்கிறார் பாருங்கள். செக்ரடரி ராமசாமி உட்கார்ந்து இருக்கிறார். இவர் எத்தனை வருடம் ஒர்க் பண்ணுகிறார். எனக்கு தலை கருப்பாக இருந்த போது வந்தார். இப்போது எனக்கு நரைத் துப் போய்விட்டது. அவர் 30 அல்லது 35 வருடமாக இருக் கிறார். அப்புறம் இங்கு டில்லி துரை என்று ஒருவர் இருக் கிறார். அப்படி ஐந்து அல்லது ஆறு பேர் இருக்கிறார்கள். இவர்களும் நம்மோடு தான் இருக்கிறார்கள். எப்படி பழம் பெரும் மக்கள், எம்.எல்.ஏ.-கள் எல்லாம் இத்தனை வருடம் பணியாற்றினார்கள் என்று சொல்ல அவர்களுக்குப் பொன் னாடை போர்த்தி வாழ்த்துகிறோமோ அதேமாதிரி இவர் களுக்கும் செய்ய வேண்டும். எல்லோரும் இவர்களிடம் தான் போவார்கள். சட்டமன்றம் நடக்காத போது கூட இவர்கள் தான் நல்லது, கெட்டதுக்கு பணியாற்றுகிறார்கள். 30 வருட மாக ஆபிசில் வேலை செய்பவர்கள் நான்கு அல்லது மூன்று பேர் இருக்கிறார்கள். இவர்களுடைய பெயரையும் முதலமைச்சர் அவர்கள் எழுதி, அவர்களும் நல்லபடியாக இருக்க வேண்டும்; அவர்கள் நன்கு உழைத்தவர்கள்; அவர்களையும் பாராட்ட ஒரு வாய்ப்பு நாளைக்குக் கூட கொடுங்கள். ஏனென்றால் நாளைக்கு 5 மணிக்கு விழா வந்து விடுகிறது. பொன் விழா என்று அதற்குப் பெயர். வெறும் விழா அல்ல; பொன் விழா.

இன்னொன்று, (மணி அடிக்கப்பெற்றது) எக்ஸ். எம்.எல்.ஏ. பற்றி. இன்றைக்கு நாம் இங்கே உட்கார்ந்து இருப்போம். நாளைக்கு நாம் எக்ஸ். எம்.எல்.ஏ.-வாக ஆக ரொம்ப நாள் ஆகப்போவதில்லை. சட்டமன்றத்திற்கு வந்த உடனே, இந்த எம்.எல்.ஏ. இறந்து போய்விட்டார்; எனவே ஒரு நிமிடம் எழுந்து நில்லுங்கள் என்கிறார். இறந்து போனால் நாம் என்ன சந்தோஷப்படவா போகிறோம்? இறந்து போனால் எப்போதும் அனுதாபம் இருக்கிறது. ஒரு நிமிடம் எழுந்து நில்லுங்கள் என்று சபாநாயகர் சொல்கிறார். அதுமாதிரி நாள் ஆக ஆக நாமும் போய்க் கொண்டு இருப்போம்.

சில பேருக்குக் கொடுக்கப் போகிறோம். 300 ரூபாய் அல்லது 350 ரூபாய் கொடுக்கிறோம் என்றால் சாமானியமாக இந்த 350 சம்பளம் நாட்டிலே கிடையாது. (மணி அடிக்கப்பெற்றது) சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். எக்ஸ். எம்.எல்.ஏ. இப்போது படுகிற கஷ்டம் அதிகம். அவர் அதிக நாள் இருக்கப் போவ தில்லை. எக்ஸ். எம்.எல்.ஏ.-க்கள் எங்களை விட வயதானவர் கள்; தாத்தாவாகப் போய்க்கொண்டிருப்பார்க. அவர்கள்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சதர்] [1989 மே 4

நல்லபடியாக இருக்கட்டும். அவர்களுக்கு இந்த விலைவாசியில் ஒரு கிளார்க்குக்குக் கொடுப்பது கூட இல்லை. சென்ட்ரல் கவர்ன் மென்ட்டில் ஒரு கிளார்க் 2 ஆயிரம் ரூபாய் வாங்குகிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நிமிடம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : ஒரு நிமிடத்தில் என்ன செய்ய முடியும்? ஒன்றுமே செய்ய முடியாது. விஷயம் நிறைய இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை எல்லாம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : என்ன கொடுக்கிறார்கள்? 300 ரூபாய் கொடுக்கிறார்கள். அது எதற்காவது உபயோகப் படுமா? உபயோகப்படாத ஒரு அர்த்தமற்ற பென்ஷன் தான் அவர்களுக்கு கிடைக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. அவர் களுடைய குடும்பம் வாழத்தக்க அளவுக்கு அல்லது அவராவது வாழக்கூடிய அளவில் நீங்கள் அதை நிர்ணயம் செய்யும்படியாகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவர் கள் பஸ்ஸில் போக முடியவில்லை. எனக்கு பஸ் பாஸ் கொடுத்து இருக்கிறார்கள். என்றால், நான் திருச்சிக்கு போய் வருவதற்கு 3 மாதம் ஆகிறது. ஒரு மாதம் தான் போய் இருக்கிறேன். ஒரு தடவை போனால் 3 தரம் படுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. ஆகையினால் எக்ஸ். எம்.எல்.ஏ.-க்கள் எங்கேயாவது பக்கத்தில் போய் வருவதற்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டும். நம்முடைய எம்.எல்.ஏ.-க்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு பஸ் பாஸ், குமரி அனந்தன் சொல்லியிருப்பது போல் வசதி களைச் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கிற எம்.எல்.ஏ.-க்களுக்கு படி வசதி மற்றும் சகலமும் கொஞ்சம் என்ன, நிறைய ஏற்றிக் கொடுக்க வேண்டும். மற்ற மாநிலங்களையும், இங்கேயும் பார்க்கும் போது நமக்கு மனம் கஷ்டமாக இருக்கிறது. அதுபோல் ஏன் நாமும் இங்கு ஏற்றக்கூடாது? மற்ற மாநிலத்தில் மட்டும் யானைக்குப் பிறந்தவன்; நாம் மட்டும் பூனைக்குப் பிறந்தவனா? எல்லோ ருக்கும் $98\frac{1}{2}$ டிகிரிதான். அவனுக்கும் $98\frac{1}{2}$ டிகிரி தான் தெர்மா மீட்டர்; நமக்கும் $98\frac{1}{2}$ டிகிரி தான் தெர்மா மீட்டர். அவனும் அந்த வசூல் தான் பண்ணுகிறான்; நாமும் அந்த வசூல் தான் பண்ணுகிறோம். ஏன் நமக்கு மட்டும் இந்தக் கஷ்டம்? இதை எல்லாம் நினைத்துப் பார்த்து—முதல்வர் இருப்பார் என்று பார்த்தேன், மெதுவாக அங்கே போய் இருக் கிறார். அவருக்கு காதிலே விழும் என்று நினைக்கிறேன். இருந் தாலும் அந்தக் கஷ்டங்களை யெல்லாம் தீர்க்கும்படியாகக் கேட் டுக் கொள்கிறேன். நிறையச் செலவழிக்கிறீர்கள். எட்டு கோடி ரூபாய் தேர்தலுக்கு. மாநகராட்சித் தேர்தலை ஏன் தள்ளி வைக்க வேண்டுமென்று சொன்னால், இந்த மாநகராட்சின் தேர்தல் நடக்கும்போழுது திடுதிப்பென்று பார்லிமெண்ட்

1989 மே 4] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சதர்]

தேர்தலை அறிவித்தால் நாம் செய்யும் செலவு முழுவதும் வேஸ்ட் அல்லவா? இதற்காக என்ன காம்பன்சேஷன் தரப் போகிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்துவிடுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எனவே, இந்தத் தேர்தலை அறிவிப்பதை இன்னும் கொஞ்சம் நிதானப்படுத்தும் படி கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநகராட்சித் தேர்தலை ஒத்தி வைத்தால் கூட நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. எல்லோரையும் நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள். இதோடு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதோடு முடித்து விடுங்கள். எல்லாம் சொல்லி விட்டீர்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கை எண்கள் 7 மற்றும் 8-இன் மீது என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகின்ற நாட்களில், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே கேள்வி கேட்பதோ, துணைக் கேள்விகள் கேட்பதோ, அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், எதிர்க்கட்சியினர் கொடுக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் அல்லது மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற நிகழ்ச்சிகள் போன்றவற்றைத் தொகுதியிலே இருக்கின்ற பொது மக்கள் பத்திரிகைகளிலும், வானொலியிலும் அல்லது டி.வி.-யிலேயும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறார்களா என்று மிக உன்னிப்பாகக் கவனிக்கின்ற ஒரு நேரத்தில் இந்தச் சட்டமன்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் உங்கள் மூலமாக நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆனால் இன்றைய தினம் பத்திரிகைகளிலே, பல்வேறு பத்திரிகைகள், பல்வேறு மாதிரி செய்திகளை வெளியிட்டாலும்கூட, மத்திய அரசாங்கத்தினுடைய சார்பில் நடத்தப்படுகின்ற டி.வி.-ஐ ரேடியோவில் இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சிகளைச் சரிவரச் சொல்வதில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பல நேரங்களில் ஏற்கனவே இருந்த நாங்களெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றிய காலங்களிலேயே இந்த சட்டமன்ற நிகழ்ச்சி என்கின்ற அந்த நேரத்தை அதிகப் படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. அப் பொழுதுகூட நம்முடைய அவை முன்னவரவர்கள் இதை நாங்கள் மத்திய அரசுக்கு எழுதி ஆவன செய்கிறோம் என்ற உறுதியையெல்லாம் அளித்தார்கள். ஆனால், இது ஏதோ பெரிய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதைப்போன்று நினைத்துக்கொண்டு, இந்த வானொலியும், டி.வி.-யும் சரியான முறையில் இந்த நிகழ்ச்சிகளை ஒலி பரப்பவதோ, ஒளி பரப்பு

வதோ இல்லை. அதுபற்றி நம்முடைய அவை முன்னவர்கள் எதிர்காலத்திலே அந்தத் துறைக்கு எழுதியோ அல்லது தொடர்பு கொண்டோ நல்ல முறையில் இந்த நிகழ்ச்சிகளை ஒலி, ஒளி பரப்புவதற்கு உண்டான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அதே போன்று, தமிழ்நாடு அரசு செய்தி யானாலும் சரி, இங்கே கூட மானியக் கோரிக்கையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் பதில் சொல்கிறார்கள். அந்தக் கோரிக்கைகையைப் பற்றிய செய்தியைச் சொல்கின்ற பொழுது டி.வி.-யிலே நம்முடைய அமைச்சர்களுடைய படத்தையே கூடக் காண்பிப்பது இல்லை.

தேர்தலிலே நின்றபொழுதுகூட டி.வி.-யிலே யிருந்து எல்லோருடைய படத்தையும் அனுப்புங்கள் என்று சொல்லி, வெற்றி பெற்றவர்களுடைய படத்தைக் காண்பித்தார்கள். ஆனால் நான் நான்கு முறை தேர்தலிலே நின்றபொழுதும், இதுவரையிலே என்னுடைய படத்தை டி.வி.-க்கு அனுப்பியதில்லை. காரணம், அனுப்பியவர்களை அவர்கள் காண்பிப்பது இல்லை. அதனால் அது ஒரு வீணான தொந்திரவு என்கின்ற விஷயத்திலே அதை நான் அனுப்பவே இல்லை. அனுப்பியவர்களையாவது ஒழுங்காகக் காண்பித்தார்களா என்றால் அதுவும் இல்லை. அதனால் எதிர்காலத்திலே, அது மக்களுடைய ஆட்சியினால் நடத்தப்படுகின்ற ஒரு துறை என்பதை அந்தத் துறையும் நினைவு கூர்ந்து நல்லமுறையிலே அந்தச் செய்திகளை விமர்சனம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இந்த அவை உறுப்பினர்கள் இந்த அவையிலே நாங்கள் மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற பொழுது நம்முடைய பழைய அவை முன்னவர் நாவலர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திற்குக் கூட ஒரு புதிய கூடம் கட்டப் போகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய முன்னாள் பேரவை தலைவரவர்களுக்குக்கூடத் தெரியும் என்று நம்புகிறேன். அவர்களுக்கு முன்பிருந்த சட்டப் பேரவைத் தலைவர், அதை பல வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று, எப்படி நம்முடைய அவைக் கூடம் கட்டப்பட வேண்டும் என்பதையெல்லாம் பார்த்து, தெரிந்து அறிந்து, வந்து, அதற்கான வேலைகள் நடைபெறுவதாகக்கூட இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது. அது என்ன ஆயிற்று என்று நம்முடைய அவை முன்னவரவர்கள் அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். நிச்சயமாக ஒரு புதிய கட்டிடம் — நம்முடைய பேரவைக் கூடம் கட்டப்படுவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று இன்னொன்று. இப்பொழுது, நாடாளுமன்றத் தொகுதியிலே ஆறு சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தொகுதியாக அது இருந்து வருகிறது. ஏற்கனவே இந்த அவை

1989 மே 4] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

யிலே ஒரு முறை அறிவிக்கப்பட்ட பொழுது நம்முடைய தமிழ் நாடு அரசு ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 7 சட்டமன்றத் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. இப்பொழுதுகூட 1,60,000 வாக்காளர்கள், இரண்டு இலட்சம் வாக்காளர்கள் என்று சட்டப் பேரவை தொகுதி மிக அதிக மான வாக்காளர்களைக் கொண்டிருக்கிறதுபொழுது எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் பணியாற்ற முடிய வில்லை. அந்த வகையில் எதிர்காலத்திலே தேர்தல் வருகின்ற பொழுது நம்முடைய நாட்டினுடைய சட்டமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம், அது 6 என்று இருப் பதை, ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 7 என்று ஆக்கினால் இன்னும் அதிகமான பேர்களுக்கு வாய்ப்பு ஏற்படுவதற்கு வசதி உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே கூட ஊராட்சி ஒன்றியத்திலே ஜீப் அளிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு. அது இரண்டு நாட்கள் போத வில்லை என்று நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். போதவில்லை.

[முற்பகல் 11-40]

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, ஏழு என்று நிர்ணயித்தால் நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கை குறையும். ஐந்து என்று நிர்ணயித்தால் தான் அதிகமாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தவறுதலாகச் சொல்லிவிட்டார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவரவர்களே தவறுதலாகச் சொல்லவில்லை. நான் இங்கே சொல்ல விரும்பு வது, இப்போது ஆறு உறுப்பினர்களைக் கொண்ட தொகுதியாக இருக்கின்ற போது 234 சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறோம். அதை ஏழாக ஆக்குகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள் எண் ணிக்கையும் அதிகமாக்க வேண்டுமென்று சொல்கிறேன். 30 தொகுதிகள் என்கிறபோது ஏழால் பெருக்குகிறபோது சட்ட மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அதிகமாகும். அதைத் தான் நான் சொன்னேன். ஏற்கெனவே இந்த அவையில் அப்படி அறிவிக்கப்பட்டு இருந்தது. அது என்ன நிலையில் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல ஜீப் வசதி. இரண்டு நாட்களில் ஒரு தொகுதி முழுவதும் பார்க்க சொல்கிறார்கள். என்னுடைய கலசப்பாக் கம் தொகுதியில் நான் ஒரு முறை போய் வரவேண்டுமென்றால் 20 நாட்கள் வேண்டும். அப்போது தான் ஒரு முறை நான் அதைச் சுற்றிப்பார்க்க முடியும். ஜீப் பஞ்சாயத்து துறையி

லிருந்து தருவதாகச் சொல்லப்படுகிறது. பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் ஜீப் இருக்காது. இங்கே கூட எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். நாங்கள் ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த போது ஒன்றியக் குழு இல்லை. பெருந்தலைவர்கள் இல்லை. இப்போது பெருந் தலைவர்கள் வேறு இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த ஜீப் வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே நம்முடைய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் தான் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே தனியாக 50 லிட்டர் பெட்ரோல் வழங்கப்பட வேண்டுமென்ற உத்தரவை வழங்கினார்கள். பழைய அரசாங்கம் அதை அளித்தது. அதையெல்லாம் நாங்கள் சரி யான முறையில் பயன்படுத்திய காரணத்தால் தான் தொகுதி யில் கூட ஓரளவிற்கு நல்ல பெயரோடு மூன்றாவது முறையாக சட்டமன்றத்திற்கு வர முடிந்தது. உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதைப் போல எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கார் வசதி மற்ற வசதிகள் கிடையாது. வாடகை கார் வைக்க இயலாது. அந்த வகையில் ஜீப் அளிப்பது என்பது ஒன்று. ஜீப் இல்லாத இடங்களில், ஜீப் அளிக்க முடியாத நேரங்களில், நம்மு டைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல மாண்புமிகு உறுப்பினர்கள் வாடகை கார் ஏற்படுத்திக் கொண்டாலும் கூட பெட்ரோல் கூப்பனாக வழங்கு வார்களானால் அந்தத் தொகைக்குப் பயன்படுத்தி நாங்கள் எதிர்காலத்தில் தொகுதியினுடைய பணியை செம்மையாகச் செய்ய முடியுமென்று நான் கருதுகிறேன். அந்த வகையில் நம்முடைய அவை முன்னவர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். இங்கே கூட தொகுதியின் தலைமை இடத்தில் அலுவலகம் கேட்டார்கள். ஏற்கனவே இருந்த அரசு ஒன்றிய அலுவலகங் களில் ஒரு அறை சட்டமன்ற உறுப்பினர்கள் போகிறபோது அமர்ந்து அங்கே இருக்கிற பொதுமக்களோடு தொடர்பு கொள்ள ஒரு வசதி ஏற்படுத்தியது. ஏனென்றால் தனியாக ஒரு கட்டடம் கட்டுவது என்றால் நடைமுறைக்கு வருவது சாத்தியக்கூறாக இல்லையென்று கருதுகிறேன். அந்த வகையில் நம்முடைய அரசு அந்த அறைகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொடர்ந்து ஒதுக்க ஆணையிடலாம். சட்டமன்ற உறுப்பி னர்கள் செல்கிற நேரங்களில் அங்கே அமர்ந்து அந்தப் பகுதி மக்களோடு வாரத்திற்கு இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என்று தொடர்பு கொள்வதற்கு அது வசதியாக இருந்தது. அதைத் தற்சமயம் எடுத்துவிட்டதாக நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் கூட வருத்தப்பட்டார்கள். அதை மீண்டும் ஏற்படுத் திட நம்முடைய அரசு முயல வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதைப்போல அடுத்து நான் சொல்கிற கருத்தை ஏற்று நம் முடைய அவை முன்னவர் அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல் வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களை கீழே அமர்த்தி விட்டார்கள் என்று

சொன்னார்கள். அந்த குறை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் மனதிலும் இருக்கிறது. அதிலே சிலபேர் ஒன்றியக் கூட்டத்திற்கே செல்வதைக் கூட விட்டுவிட்டதாக அறிகிறேன். இதனால் அரசுக்கு தான் நஷ்டமே தவிர, மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அது உதவியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெருந்தலைவரோடு சேர்ந்து அமர்ந்து கூட்டம் நடத்த ஏற்கனவேயிருந்த அரசு விதித்த அந்த உத்தரவை ரத்து செய்து விட்டீர்கள். அதை நான் வரவேற்கிறேன். இப்போது அந்த மேடையில் ஒன்றியத்தினுடைய துணைப் பெருந்தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியத்தினுடைய அதிகாரிகள் எல்லாம் அமர்ந்து ஒன்றியத்தினுடைய காரியங்களைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே கூட நம்முடைய முதலமைச்சர் அவர்களின் பேரவைச் செயலாளர் தெரிவித்தார்கள். முதலமைச்சருக்கு இரண்டு லட்சம் மனுக்கள் குவிந்தன என்று சொன்னார்கள். அது உண்மை தான். சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் போய் வந்தாலே ஒரு முறையில் பல நூற்றுக்கணக்கான மனுக்களை எங்களை நம்பி பொதுமக்கள் அளிக்கிறார்கள். அதைப் பரிசீலித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதி, சட்டமன்ற உறுப்பினர் கையெழுத்திட்டு, சட்டமன்ற உறுப்பினர் சீல் போட்டு அனுப்புவது சிரமமான பணியாக இருக்கிறது. எங்களுக்கு எந்தவிதமான உதவியும் இல்லாத காரணத்தால் இங்கே கூட காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: உறுப்பினர்கள் அனைவருக்கும் சேர்த்து தான் சொல்கிறேன். இன்னும் சில நிமிடங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் பெட்ரோல், படி, சம்பளம் என்று பேசினால் எல்லா கட்சிக்காரர்களும் ஒட்டுமொத்தமாக ஆதரவு கொடுப்பார்கள். (குறுக்கீடு). நம் எல்லோருடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றுகிற வகையில் அவை முன்னவர் அவர்கள் தன்னுடைய பதிலில் சொல்வார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகச் சொல்கிறேன். நம்முடைய போன் கட்டணத்தை எல்லாம் மத்திய அரசாங்கத்தில் உயர்த்தி விட்டார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : பாயின்ட் ஆப் ஆர்டர். இப்போது இந்தச் சம்பள உயர்வு என்பதே எல்லோருக்கும் உற்சாகம் தருகிறது. இந்தச் சம்பள உயர்வைப் பற்றி பொதுக்கூட்ட மேடையிலே நம்முடைய உறுப்பினர்கள் பேசி, பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்கத் தயாராக இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : அந்தவகையிலே போன் கட்டணங்களை எல்லாம் இப்போது உயர்த்தியிருக்கிறார்கள். அதற்கான முறையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரப்படுகிற அந்த போன் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் பழைய உறுப்பினர். நேரம் ஆகிவிட்டது என்று பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். இங்கே நம்முடைய பென்சனிலே ஒரு முறையை, பழைய செயலாளர், இந்தத் துறையில் செய்தார்கள். அது தவறு என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். காரணம் ஒருவர் ஒருமுறை சட்டமன்ற உறுப்பினராக வருகிறார்கள் என்றால், அவர்கள் பென்சன் பெற வேண்டும் என்று சொன்னால், பதவி ஏற்று ஓர் ஆண்டுக்காலம் பணியாற்ற வேண்டும் என்று இப்போது விதி இருக்கிறது. இடையில் இந்த அவை கலைக்கப்படலாம். அல்லது வேறு காரணத்தினால் அவர்கள் போய்விட்டால், அவர்களுக்குப் பென்சன் இல்லை என்ற விதி தற்சமயம் இருப்பதாக நான் அறிகிறேன். ஒருவர் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு, பிறகு 5 ஆண்டுக்காலம் பணியாற்றினாலோ, அல்லது ஒரு மாதத்திலே போனாலோ அந்த குறைந்தபட்ச பென்சனைப் பெறுவதற்கு உண்டான வசதியை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று இரண்டாவது, ஒருவர் ஒருமுறை — நான்கூட 1977-லே சட்டமன்ற உறுப்பினராக வந்தேன். அப்போது எனக்குத் தரப்பட்ட உறுதி 6 ஆண்டுக்காலம் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னார்கள். 2-3/4 ஆண்டிலே எங்களை எல்லாம் அனுப்பினார்கள். பிறகு நான் 1980-லே இரண்டாவது முறை வருகிறபோது 5 ஆண்டுக்காலத்தை ஓர் ஆண்டாக எடுத்து, அந்த 5 ஆண்டுக்காலத்திற்கு நீங்கள் மினிமம் பென்சன் பெறுவதற்குத் தகுதியானவர் என்று அந்தக் கணக்கிலே சேர்க்கிறார்கள். இது ஒரு தவறான முன்னுதாரணம். அது நீக்கப்பட வேண்டும். மினிமம் பென்சன் 300 ரூபாய் என்றால், இரண்டாவது முறை வருகிறபோது, 5 ஆண்டுக்காலம் என்ற அந்தக் கணக்கை எல்லாம் விட்டுவிட்டு, ஒருமுறை அவர் பதவியேற்றால் ஒரு முறை என்று கணக்கிடவேண்டும். இரண்டாவது முறை வந்தால், இரண்டாவது முறை என்று கணக்கிடப்படவேண்டும். அப்படிக் கணக்கிட்டு குறைந்தபட்சம் 300 ரூபாய் என்கிற பென்சனை 500 ரூபாயாகவும், அதிகபட்சம் 600 ரூபாய் என்பதை 1,000 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

1989 மே 4] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அதேபோன்று முன்னாள் உறுப்பினர்களுக்கு இப்போது மருத்துவப்படி மாதம் 400 ரூபாய், 500 ரூபாய் என்று தரப்படுகிறது. அவைகளைப்பெறுவதற்கு சிரமப்படுகிறார்கள். இதை ஆண்டுக்கு இவ்வளவு என்று கணக்கிட்டு அரசாங்கம் மருத்துவப் படியைத் தரவேண்டும்.

அதேபோன்று அவர்களுக்கு நீங்கள் மாநிலம் பூராவும் சுற்றுப் பயணம் செய்கின்ற அளவிற்கு பஸ் பாஸ் வழங்கவில்லை என்றாலும் அந்தந்த மாவட்டங்களிலே இருக்கிற போக்குவரத்துக் கழகங்களில் பயணம் செய்ய அவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று 81, 84, மற்றும் 85-லே எல்லாம் நம்முடைய பேரவை வளாகத்திலே பல்வேறு துறைகளிலே, இளநிலை எழுத்தாளர்களாக அல்லது மற்ற துறைகளிலே பணியாற்றியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அதில் பதவி உயர்வு 1981-லே நியமிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

அதே போன்று தற்காலிகமாக 50-க்கும் மேற்பட்ட காவலர்கள் மற்றத் துறைகளிலே எல்லாம் பணியாற்றுகிறவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில் குடும்பம் நடத்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. 1980-லே வீட்டு வசதி வாரியத்திலே வாடகை அடிப்படையில் வீடு எனக்குத் தரப்பட்டு, நான் பணம் கூட 400 அல்லது 500 ரூபாய் கட்டியிருக்கிறேன். ஆனால், என்ன காரணத்தாலோ எனக்குக் கிடைக்கவில்லை. எனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வாடகை அடிப்படையிலான வீடு கிடைப்பதற்கு உண்டான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எம். எல். ஏ.-க்களுக்கு அட்டெண்டர் அதாவது பியூன் அல்லது கிளார்க் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே அட்டெண்டரையாவது வைத்துக்கொள்வதற்கு, ஒன்று அரசுச் செலவில் அல்லது அந்தத் தொகுதியில் இருக்கிற ஒன்றியச் செலவில், இங்கே மாநகராட்சியிலே இருக்கிற உறுப்பினராக இருந்தால் மாநகராட்சிச் செலவில் வைத்துக்கொள்வதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, இவைகளை நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் நிறைவேற்றவேண்டும், அதற்காக ஆவன செய்யவேண்டும் என்று அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டு, இந்த நேரத்தை ஒதுக்கியதற்காக பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. முதன் முதலாக தேர்தல் குறித்து சில கருத்துக்கள். தேர்தல் என்பது மக்களுடைய அடிப்படையான வாக்குரிமையின் மூலம் பாராளு மன்ற ஜனநாயகத்தை நாட்டிலே நிலைப்படுத்துவதற்கு அமைக் கப்பட்ட ஒன்று. ஆனால் இன்றையதினம் என்னென்ன காரணங் களுக்காகவோ, தேர்தல் புறக்கணிப்புகள் தேர்தலிலே வாக் களிப்பவர்களுக்கு எல்லாம் அச்சுறுத்தல்கள் நடைபெறுகின்றன, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காவண்ணம் தடுப்பதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் ஒரு புதிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. கடந்த தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழக ஆதரவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட எனக்கு வாக்களித்தார்கள், வேலை செய்தார் கள் என்ற காரணத்திற்காக மணக்கரை என்ற ஊரில் ஒரு குறிப் பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த 3 குடும்பத்தினரை பழி வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஊர்க்கூட்டம் போட்டு, 101 ரூபாய் அபராதத்தை ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் விதித்தார்கள். அபராதத்தைக் கட்ட மறுத்த அவர்கள் அசிஸ்டெண்ட் கலெக்டர், தக்கலை அவர்களிடம் மனு கொடுத்தார்கள். இதைக் கேள்விப்பட்டவுடன் மீண்டும் கூட்டத்தைக் கூட்டி, மேலும் 1001 ரூபாய் என்ற அளவில் அபராதம் உயர்த்தப்பட்டது. அப்படி உயர்த்தப்பட்ட தோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய குடும்பம் ஊரிலிருந்து விலக்கி வைக்கப்பட்டது. அவர்கள் தண்ணீர் எடுக்க முடியாது, பொதுப் பாதையில் நடக்க முடியாது. மற்றவர்களோடு பேச முடியாது என்ற நிலை அந்தக் குடும்பத்தினருக்கு ஏற்பட்டது. குறிப்பாகச் சின்னான் பிள்ளைக் குடும்பம், ஐயப்பன் பிள்ளையி னுடைய குடும்பம் இப்படிப்பட்ட பாதிப்பிற்கு உள்ளாகியிருக் கிறார்கள். அவர்கள் கொலை செய்யப்பட்டு விடுவார்கள் என்ற அளவிற்குக் கூட அச்சம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இதற்கு எல்லாம் காரணகர்த்தாவாக இருப்பவர், அந்தச் சமுதாயத்தி னுடைய ஊர்த்தலைவராக இருக்கிற ஒரு தலைமைக் காவலர். இதுசம்பந்தமாக அங்கே அதிகாரிகளிடம் நாங்கள் மனுவைக் கூட கொடுத்திருக்கிறோம்.

(முற்பகல் 11-50)

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகும் கூட, திராவிட முன்னேற்றக் கழக அணிக்கு வேலை செய்தவர் களுடைய குடும்பங்கள் எந்த அளவிற்கு தாக்குதலுக்கு உள்ளாக் கப்படுகின்றன என்பதையும் அதில் ஒரு தலைமைக் காவலர் மிக மிக முக்கியமான பங்கு வகிக்கிறார் என்றால் அது மிகக் கொடுமை யான காரியம் என்பதை நான் சுட்டிக்காட்டி, அந்தப் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கை எடுத்து, அந்தக் குடும்பத் தினருக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

1989 மே 4] [திரு. செ. நூர்முகமது]

அதேபோன்று பல இடங்களில் சிறுபான்மை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. குறிப்பாக தேர்தல் புறக்கணிப்பு என்று வந்துவிட்டால், அதை மீறி வாக்களிக்க முடியாத சூழ்நிலை, பயமுறுத்தல் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு ஏற்ற அளவில் சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். சிறுபான்மை மக்கள் பயமில்லாமல் வாக்களிக்கின்ற அளவிற்கு வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட வேண்டும். வாக்குச் சாவடிகள் நடந்து சென்று ஓட்டு போடுகின்ற அளவிற்கு இருக்க வேண்டும். இன்றைக்கு தேர்தலில் மிகப் பெரிய செலவு என்பது கடைசி நாள், தேர்தல் அன்றைக்கு கார்களில் ஏற்றிச் செல்கின்ற ஒரு செலவு. சாதாரண ஒரு வேட்பாளரால் இதைச் செய்யமுடியவில்லை. கேரளத்தில் எல்லாம் இந்த நிலை இல்லை. அங்கே வாக்காளர்களை கார்களில் அழைத்துச் செல்கின்ற பழக்கம் நிறுத்தப்பட்டிருக்கிறது, அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து, அரசும் சேர்ந்து, ஏன் இங்கே கண்டிப்பாக, கறாராக அதை அமல்படுத்த முடியாதா? அதை அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் கடந்த தேர்தல் காலத்திலே குமரி மாவட்டத்தில் பல இடங்களில் காவல்துறையினர் அத்துமீறி திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்ட்டு கட்சியினுடைய வேட்பாளர்களுக்கு எதிராக சில வேலைகள் செய்ததாக, வாக்காளர்களை பயமுறுத்தியதாக, தொண்டர்களை பயமுறுத்தியதாக எல்லாம் பல நிகழ்ச்சிகள் குறித்து, நான் முதல்வரிடம் ஏற்கனவே மனு கொடுத்திருக்கிறேன். நான் அந்த விவரங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. காரணம் நேரமில்லை. ஆகவே, அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுத்து, காவல்துறை அதிகாரிகள் பாரபட்சமான முறையில் ஒரு குறிப்பிட்ட கட்சியினருக்கு ஆதரவாக நிற்கின்ற நிலை தேர்தலில் ஏற்படாத சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று சில தொகுதிகள் எல்லாம் நீண்ட பெரிய தொகுதியாக இருக்கின்றன. குறிப்பாக எங்களுடைய அருமை நண்பருடைய தொகுதியான வில்லிவாக்கம் மூன்று தொகுதிகளை உள்ளடக்கியிருக்கின்ற ஒரே தொகுதி. அதே நேரம் 90,000 வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளும் இருக்கின்றன. ஆகவே அவைகளை எல்லாம் சீரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்தியாகவேண்டும். இன்றைக்கு வந்திருக்கின்ற சட்டம், கட்சி மாறல் தடைச் சட்டம் ஆளுங் கட்சிக்கு ஆதரவாகப் பயன்படுத்துகிறதே ஒழிய- அதெல்லாம் கர்நாடகத்திலே எந்த அளவிற்கு மீறப்பட்டிருக்கிறது என்பதை நால் எல்லோரும் அறிவோம். நான் இதை விளக்குவதற்கு நேரமில்லை. ஆகவே உண்மையான தேர்தல் சீர்திருத்தம் வருவதற்கு நாம் மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. நூர்முகமது] [1989 மே 4

அடுத்து சட்ட மன்றம். மக்கள் எல்லாம் நம்மை தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள், எதற்காக என்றால் அவர்களுடைய பிரச்சினைகள் எல்லாம் சட்டமன்றத்தில் எதிரொலிக்கப்படும் என்பதற்காகத்தான். ஏராளமான பிரச்சினைகள் மக்களை அழுத்திக் கொண்டிருக்கின்றன. அவைகளை நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறாரா, கேள்விகளை எழுப்புகிறாரா அதுபற்றி ஏதேனும் பிரச்சினை எழுப்புகிறாரா என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் எங்களுக்கு இந்தப் பிரச்சினைகளை எழுப்புவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக என்னைப் போன்ற இளைஞர்கள் புதிதாகச் சட்டமன்றத்திற்கு வந்தவர்கள் எல்லாம், அதிகமான பிரச்சினைகளோடு வந்திருக்கிறோம். மக்கள் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல விட மாட்டேன் என்கிறார்கள். அதைப் பேசினாயா, இதைப் பேசினாயா என்ற அளவில் கேட்கிறார்கள். ஆனால் இங்கே எங்களுடைய பரிதாபகரமான நிலை என்னவென்று சொன்னால், நம்முடைய சபாநாயகர் அவர்கள் மன்னிக்க வேண்டும். சபாநாயகர் அவர்களுடைய கடைக் கண் பார்வை எங்களுக்குக் கிடைக்காதா என்று நாங்கள் தவம் கிடக்கிறோம். ஆனால் கிடைப்பதில்லை. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதற்காக ?

திரு. செ. நூர்முகமது: கேள்விகள் கேட்பதற்கு, பிரச்சினைகளை எடுத்துச்சொல்வதற்கு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு பூரண உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் நிரம்பக் கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள்.

திரு. செ. நூர்முகமது: நான் என்னை மாத்திரம் குறிப்பிடவில்லை. தயவு செய்து சபாநாயகர் அவர்கள் நான் என்னுடைய பிரச்சினையைச் சொல்கிறேன் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. (குறுக்கீடு).

திரு. பெ. சீனிவாசன்: சார், ஏற்கனவே சபாநாயகருடைய பார்வை முழுவதும் இடது பக்கம் தான் இருக்கிறது. நாங்கள் வலது பக்கமாக பாவம் பரிதாபத்திற்கு உரியவர்களாக உட்கார்ந்து, 150 பேர் கையைத் தூக்கி தூக்கி, சில பேருக்கு கைகூட சுளுக்கிக் கொண்டு விட்டது. ஆகவே எங்களுக்கும் தயவு செய்து கொஞ்சம் கருணை காட்டுங்கள். அவர் சொல்வதைப் பார்த்தால், எதிர்காலத்திலே ஒன்றிரண்டு சலுகைகள் கூட எங்களுக்குக் கிடைக்காது போல் தெரிகிறது.

திரு. செ. நூர்முகமது: நான் இடது பக்கம் இருப்பவர்களுக்காக மாத்திரம் வாதாடவில்லை, அருமை நண்பரே, அனைவருக்குமே நான் வாதாடுகிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். குறிப்பாக ஆளுங்கட்சியினருக்குமாகச் சேர்த்துதான் நான் இந்த விஷயத்தைச் சொல்கிறேன்.

1989 மே 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய கை ஓங்கிவிட்டது என்று அவர் சொல்கிறார்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கேள்வி நேரம். கேள்வி நேரத்தில் குறைந்தபட்சம் 20 கேள்விகளையாவது அனுமதிக்க வேண்டும். சில நேரங்களிலே கேள்வி நேரம் ஒத்திவைக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான பிரச்சினைகளைச் சொல்வதற்கு அந்த வாய்ப்பு தான் கிடைக்கிறது. ஆகவே அதை ஒத்திவைக்கக் கூடாது. அதைப்போல உடுக்குறியிட்ட கேள்விகள் அதிகமாக அனுமதிக்கப்பட வேண்டும். விவரம் உள்ள கேள்விகளை உடுக்குறியிடாத கேள்விகளாக அனுமதித்தாலும் மற்றையவைகள் அதிகமாக இடம் பெற வேண்டும். குறுகிய கால வினா என்பது இன்றைக்கு யதார்த்தத்திலே வித்தியாசமாக மாறி விடுகிறது. 7 நாட்களிலே பதில் தரவேண்டுமென்று இருந்தாலும் கூட, 20, 30 நாட்கள் ஆகிற போது அந்த வினாவிற்கான அர்த்தமே மாறிப்போய் விடுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே குறுகிய கால வினா குறிப்பிட்ட காலத்திற்குள் அனுமதிக்கப்பட்டு விடையளிக்கப்படவேண்டும். ஏராளமான வினாக்கள். அனுமதிக்கப்படவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அதிகமாக அனுமதிக்கப் படாமல் இருக்கிறது. நான் சபாநாயகருடைய உரிமையை குறை கூறவில்லை. மாறாக நம்முடைய அவை முன்னவர் அவர்கள் 1985-ம் ஆண்டிலே இதே பேரவையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் முக்கியப் பிரச்சினைகளுக்காக எழுப்பப்படுகின்றன. ஆகவே, அவைகள் அனுமதிக்கப்படவேண்டும். அனுமதிக்கப்படமுடியாத நிலையில் இருந்தால் அவைகளை மாற்றுவதற்கு விதிகளிலே திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று நம்முடைய அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களே இதே அவையிலே வாதிட்டு இருக்கிறார்கள். ஆகவே நான் இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சொன்னதை செய்பவர்கள். கட்டாயமாக இதையும் மாற்றி எங்களுக்கு அதிக வாய்ப்புகளைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இலாக்காக்களில் எம். எல். ஏ.-க்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு சட்டமன்ற கூட்டங்களுக்கு இடையில் ஏற்படுகிற பிரச்சினைகள், விவாதங்கள் சம்பந்தமாக ஆலோசனைக் குழுக் கூட்டி அறிவிக்கப்பட்டால் எம். எல். ஏ.-க்கள் அந்தப் பிரச்சினைகளை அறிவதற்கு, முடிவுகளை

அறிவதற்கு வாய்ப்பாக இருக்கும். இப்போது பத்திரிகைகளின் வாயிலாகத்தான் அறிய இயலுகிறது. பாராளுமன்றத்திலே கூட இப்படிப்பட்ட நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. அதை இங்கே நடைமுறைப்படுத்த வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, மானியக் கோரிக்கைகளின் தஸ்தாவேஜ்களை குறைந்தபட்சம் 2 நாட்களுக்கு முன்னதாக கொடுக்கவேண்டும். அதை உத்திரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதைப்போல நாங்கள் அதிக சம்பளம் கேட்கவில்லை. ஏனென்றால் மக்கள் நினைப்பார்கள். நாம் அவர்களைத் தேர்ந்தெடுத்தது அவர்களுடைய வசதிகளை பெருக்கிக் கொள்வதற்காகவா என்று நினைத்து விடக்கூடாது என்பதற்காக நான் அதைக் கேட்கவில்லை. ஆனால் அதே சமயத்தில் சில வசதிகள் தரப்பட வேண்டும். என்னென்ன வசதிகள் என்று கேட்டால்....

திரு. என். கணபதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேர்ந்துள்ள கட்சி சம்பள உயர்வுக்காக போராட்டங்கள் பல நடத்துகிற கட்சி. அப்படி இருக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களை மட்டும் ஏன் விதிவிலக்காகக் கொண்டு போராட்டத்தை நடத்தவில்லை என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

திரு. செ. நூர்முகமது: சட்டம் இயற்றுகின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்கள் தாங்களாகவே எடுத்துக்கொண்டார்கள் என்ற நிலை ஏற்படும் . .

திரு. உ. ரா. வரதராசன்: துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் சம்பள உயர்விற்காக போராடுகிற கட்சி என்று சொன்னார்கள். எம்.எல்.ஏ.-க்களுடைய சம்பள உயர்விற்காக நாங்கள் போராட விரும்பவில்லை. ஆளும் கட்சி உறுப்பினர்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதிலே எங்களுக்கு மகிழ்ச்சி தான்.

திரு. மு. இராமநாதன்: குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஆளும் கட்சி உறுப்பினர்களே அதற்காக போராட வேண்டுமென்றால் ஏதோ இங்கே இருக்கிற ஆளும் கட்சி சம்பளத்திற்காகவே இங்கே வந்திருப்பது போல பொருள்படும். ரொம்பவும், மிதமிஞ்சி இருப்பதாக கனம் உறுப்பினர் கருதுவதாக இருந்தால் மாதம் இவ்வளவு என்று சர்க்காருக்கே திருப்பி கொடுக்க வேண்டுமென்று அவர் சொல்வார்களேயானால் வரவேற்கலாம்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏராளமான மனுக்கள் வருகின்றன. அந்த மனுக்களை எல்லாம் பைசல் செய்து தபாலில்

1989 மே 4] [திரு. செ. நூர்முகமது]

அனுப்புவது என்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே எங்களுக்கு தபால் செலவு என்பது கட்டாயமாகத் தரப்படவேண்டும். ஒன்று நீங்கள் சர்வீஸ் ஸ்டாம்ப்ஸ் கொடுங்கள், அல்லது சாதாரண ஸ்டாம்ப்ஸ் கொடுங்கள். பணம் கேட்கவில்லை. இப்படி தபால்களை அனுப்புவதற்காக வசதிகளை, வாய்ப்புகளை அதிகப்படுத்த வேண்டும். அதைப்போல தொகுதிகளில் மனுக்கள் வருகிறபோது பைசல் செய்வதற்கு உதவியாளர்கள் தேவைப்படுகிறது. குறைந்த பட்சம் ஒரு ஸ்டெனோவை அரசு செலவில் எங்களுக்கு ஏற்படுத்தி தரவேண்டும். எங்களுக்காக கேட்கவில்லை. மக்களுக்கு தொண்டு செய்வதற்காக அதனால் மக்கள் பயனடைகிறார்கள் என்ற காரணத்திற்காக கேட்கிறேன்.

அதைப்போல சட்டமன்ற விடுதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாத நிலை இருக்கிறது. வராந்தாவில் எல்லாம் மக்கள் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்குக் கூட சந்தேகம். நீண்டகாலமாக இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களை கௌரவம் செய்கிற நிலையிலே பார்க்கிறபோது சில சமயம் அதை விடவும் அதிகமான தொடர்பு இருக்கக்கூடிய. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் ஒரு நிமிடம் தான் இருக்கிறது.

திரு. கே. ரமணி : எங்கள் கட்சியில் அவர் ஒருவர்தான் பேசுகிறார். சற்று நேரம் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு ஒரு மணிக்குள் நிகழ்ச்சிகளை முடித்தாக வேண்டும்.

திரு. செ. நூர்முகமது : சட்டமன்ற விடுதிகளிலே இருக்கக்கூடிய பல நபர்கள் அதை விடவும் அதிகமான காலம் உறுப்பினர்களாக இல்லாமலேயே அங்கே உலாவிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூட கேள்விப்படுகிறோம். அவர்களுக்கு கூட பாராட்டு நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுமோ என்னவோ தெரியவில்லை. ஆகவே அந்த அளவுக்கு மித மிஞ்சிப் போயிருக்கிறது. அதை ஒழுங்குப் படுத்த வேண்டும். இதிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது.

அதைப்போல உணவு விடுதி என்பது மிக மோசமான நிலையில் இருக்கிறது. 3 மணிக்கு நாங்கள் செல்லும்போது எதுவுமே கிடைப்பதில்லை. எனக்கிருக்கிற பயம் எல்லாம் நாங்கள் 5 ஆண்டுகளுக்கு எம். எல். ஏ. ஆக இருந்து ஊருக்குச் செல்கிறபோது புதிய நோய்களை சம்பாதித்துக்கொண்டு சென்று விடுவோமோ என்று பயப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே உணவு விடுதி என்று அரசே ஒரு மெஸ்ஸை ஏற்படுத்தி எம்.எல்ஏ-க்களுக்கு உணவு தரவேண்டும். பணத்தை நாங்கள் செலுத்தி விடுகிறோம்.

எங்களிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால் எங்களுக்கு தரமான உணவைத் தருவதற்கான ஒரு உத்திரவாத மான ஏற்பாடு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பேருந்துகள் கூட ஒழுங்குபடுத்தப்பட வேண் டும். ஈ. என். எச். —க்கு தனி டெலிபோன் வசதி இல்லை. அங்கே எக்சேஞ்சை கேட்டு தொலைபேசியை பயன்படுத்துவது என்பது சாத்தியம் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, தனி தொலைபேசி இணைப்பு வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகிற கடிதங்களுக்கு கட்டாயமாக பதில் தர வேண்டும். என்ன நிலை அல்லது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவேண்டும். அதேபோல ஜஸ் டிஸ் சேதுராமன் கமிஷனுடைய ரிப்போர்ட் இதுவரையிலும் இந்த அவையிலே தாக்கல் செய்யப்படவில்லை. பால் கமிஷன் ரிப்போர்ட்டிற்காக நீண்ட பயணம் நடத்திய முதல்வர் அவர்கள் கட்டாயமாக இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டை இங்கே சமர்ப் பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரே ஒரு விஷயம். ஊழியர்களுடைய நிலை. தினக்கூலி ஊழியர்கள் இருக்கிறார்கள், நிரந்தரம் இல்லாத ஊழியர்கள் இருக்கிறார்கள், சட்டமன்றத் திலே. அதே மாதிரி ஹாஸ்டலில், அவர்களை கட்டாயம் நிரந் தரப்படுத்த வேண்டும். கடைநிலை ஊழியர்களுக்கான சம்பள சலுகைகளாவது அளிக்கப்படவேண்டும். அவர்களுக்கு அதிகமான லீவ் வசதிகளை கொடுக்க வேண்டும். அதே போல விடுதியிலே பணி புரியக்கூடியவர்களுக்கு, அரசு விருந்தினர் மாளிகையிலே பணி புரியக்கூடியவர்களுக்கு கொடுக்கப்படுவது போல சிறப்பு ஊதியம் தரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது). ஒரே ஒரு விஷயம்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று விவாதத்தை ஒரு மணிக்கெல்லாம் முடித்துவிட வேண்டும்.

திரு. செ. நூர்முகமது: இந்த நிரந்தரப்படுத்தப்படாத தட்டச்சர்கள், கிளார்க்குகள் மற்றும் உள்ள பேரவை ஊழியர் களுக்கு அவர்களை நிரந்தரப்படுத்தி, சபை கூடாத நேரத்திலே மற்ற துறைகளிலாவது அவர்களுக்கு பணி கொடுப்பதற்கான ஏற் பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல்கள், சட்டமன்றம் ஆகிய மானியங்களின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தேர்தல்கள் ஜனநாயகத்திற்கு இன்றியமை யாதவைகள் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்தத் தேர்தல்கள் தான் நம்முடைய நாட்டினுடையபொருளாதார சீர்குலைவிற்கும் பண வீக்கத்திற்கும் அடிப்படை காரணங்களில் மிக முக்கிய காரணம் என்று சொன்னால் அதை யாரும் மறுத்துவிட முடியாது.

9ஃ3மே 4 [திரு. எம். அப்துல் லத்தீப்]

ஏனென்றால் ஒரு தேர்தல் நடைபெற்றால் எவ்வளவு பணம், அங்கீகரிக்காத பணம் புழக்கத்திற்கு வருகிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது, அந்தத் தேர்தல்களே நடக்காமல், இருந்துவிட்டால் என்ன என்று கூட இந்த பண புழக்கத்தால் ஏற்படுகிற தீய விளைவுகளை அறியக்கூடிய மக்கள் நினைக்கு கூடிய அளவுக்கு இன்றைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். நம்முடைய குறிப்பிலே கூட கடந்த தேர்தலில் மாநில அரசு 8 கோடி ரூபாய் செலவழித்ததாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 8 கோடி ரூபாய் அரசு செலவழித்த தொகையாகும். ஆனால், நம்முடைய 234 தொகுதிகளையும் எடுத்துக்கொண்டால் தேர்தல் கணக்குகளை இந்த அடிப்படையிலே யாரும் கேட்க கூடாது. ஆனால் யதார்த்த நிலைகளை நாம் கருத்தில் கொண்டு உண்மையைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு தொகுதியிலேயும் குறைந்த பட்சம் 30 இலட்சம் ரூபாய் புழக்கத்திற்கு வருகிறது என்பதை இன்றைக்கு நாம் அறிந்திருக்கிறோம். எல்லா வேட்பாளர்களும் செலவழிக்கின்ற பணத்தை ஒவ்வொரு தொகுதியிலேயும் கணக்கிட்டுப் பார்த்தால் குறைந்த பட்சம் 30 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு தொகுதியிலும் செலவாகின்றது. 234 தொகுதிகளையும் எடுத்துக்கொண்டால் எவ்வளவு செலவாகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனவே இவைகள் எல்லாம் ஒரு உற்பத்தியாகவும் இல்லாமல், உழைப்பாகவும் இல்லாமல் வெறுமனே செலாவணிக்கு வருகின்ற காரணத்தினால் நம்முடைய பொருளாதாரம் சீர்குலைவு அடைவது மட்டுமல்ல. பணப் புழக்கமும் ஏற்பட்டு, பண வீக்கம் ஏற்பட்டு இதுதான் விலையேற்றத்திற்கு முக்கியமான காரணம் என்பதை நாம் நன்றாக உணரவேண்டும். எனவே குறைந்த அளவுக்கு செலவு செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய தேர்தல் முறைகள் மாற்றப்பட வேண்டும். பணம் செலவழிக்கப்படுவதை எப்படி கட்டுப்படுத்த வேண்டும் என்பதைக் குறித்து இந்தத் துறையினர்கள் ஆய்வு செய்யவேண்டும். இதற்கான முனைப்போடு செயல்பட்டு நாட்டினுடைய பொருளாதாரத்தையும், நம்முடைய நல்வாழ்வையும் காப்பாற்ற இந்தத் தேர்தல் முறைகளை பணம் தான் வாக்குகளைப் பெறமுடியும், பணம் செலவழித்தால்தான் வெற்றிபெற முடியும் என்ற இந்த எண்ணத்தை கடுமையான சட்டத்தால் தேர்தல் முறைகளை சுலபமாக்க வேண்டும் என்பதை நம்முடைய துறையினர்கள் ஆய்வு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 234 தொகுதிகளும், தொகுதி நிர்ணயம் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. சட்டப்படி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொகுதியினுடைய வரையறைகள் நிர்ணயிக்கப்படவேண்டும். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக இது நிர்ணயிக்கப்படவில்லை. எனக்கு நன்றாக நினைவுக்கு வருகிறது. 1972-லே என்று நான் நினைக்கிறேன். தொகுதி நிர்ணயக் குழு தன்னுடைய பணியைச் செய்தது. அது முறையாக 1981-82லே தன்னுடைய பணியைச் செய்திருக்கவேண்டும். ஆனால் அது செய்ததாகத் தெரியவில்லை. அப்போது என்ன நிர்ணயிக்கப்

பட்டதோ அதுதான் இன்றைக்கும் இருக்கிறது. அதோடு தொகுதியைப் பிரிக்கும்பொது பெருநோக்கோடு பிரிக்கவேண்டும். குறிப்பாக சிறுபான்மை மக்கள் வாழ்கின்ற ஒன்றையொன்று ஒட்டிய பகுதிகள்--சிறுபான்மை மக்கள் நிறைவாக அங்கே வாழ்ந்தால் ஒரு பகுதியை இன்னொரு பகுதியிலிருந்து பிரித்து விடுகிறார்கள். ஒரே ஊரை இரண்டு பகுதிகளாக இரண்டு தொகுதிகளில் மாற்றுகிறார்கள்.

ஒரே ஊரை மூன்று தொகுதிகளிலே இணைத்திருக்கக்கூடிய கொடுமையும் நடந்திருக்கிறது, உதாரணமாக தஞ்சாவூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அதிலே அத்திக்கடை ஒரு தொகுதி பொதக்குடி ஒரு தொகுதி என்று வைத்திருக்கிறார்கள். பாராளுமன்றத் தொகுதியை எடுத்துக்கொண்டால், வாணியம்பாடி, ஆம்பூர் உள்ளிட்ட வாணியம்பாடித் தொகுதியைப் பிரித்து திருப்பத்தூர் நாடாளுமன்றத் தொகுதியிலே இணைத்திருக்கிறார்கள். வேலூர் தொகுதிக்குத் தொடர்பே இல்லாத ஆரணித் தொகுதியை வேலூர் பாராளுமன்றத் தொகுதியிலே இணைத்திருக்கிறார்கள். இது எல்லாம் எந்த அடிப்படையிலே செய்யப்பட்டது ? எந்தக் காலத்திலே செய்யப்பட்டது ? அதற்கு எந்த உணர்வுகள் அடிப்படையாக அமைந்தன ? யாரால் செய்யப்பட்டது என்பதையெல்லாம் அந்தக் காலத்தில் ஏற்பட்ட சூழ்நிலையை அனுசரித்து, அதனுடைய தன்மையை அறிந்து இப்போது மாறிவிட்ட சூழ்நிலையில் பெருநோக்கோடு, சிறுபான்மை மக்கள், அவர்களும் சட்டமன்றங்களிலும், பாராளுமன்றங்களிலும் தேர்வு செய்யப்பட்டு இடம் பெறவேண்டும், அதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தொகுதிகள் மாற்றியமைக்கப்பட்ட வேண்டும். இப்படி சிறுபான்மை மக்களுடைய குடியிருப்புகள் சின்னாபின்னப்படுத்தப்பட்டு இருப்பதை முறையாக அவைகளை எல்லாம் ஒன்றிணைத்து அவர்களும் தேர்வு செய்யப்படக்கூடிய அளவுக்கு தொகுதியை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் குறித்து இங்கே எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக எடுத்துக் கொண்டால், நம்முடைய சென்னை மாகாணம் இன்றைக்குத் தமிழ் மாநிலமாக மாறியிருக்கிற சூழ்நிலையில். தமிழ் மாநிலமாக மாறியிருக்கிறதே தவிர, அந்தப் பழைய கால சென்னை மாகாணத்தில் கடைப்பிடிக்கப்பட்ட 'ஆர்த்தொடாக்ஸ் என்று சொல்லக் கூடிய பழமை இன்றைக்கும் நீடித்துக் கொண்டிருக்கிறது. சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று சொன்னால், மக்கள் என்ன நினைப்பார்கள் என்று கேட்கிறார்கள். மக்கள் என்ன கேட்பார்கள் என்று சொன்னால், அவர்களுடைய பிரதிநிதிகள் எல்லாம் முறையான வருமானத்தோடு அவர்கள் தங்களுடைய வாழ்க்கைச் செலவினங்களைச் சந்திக்க கூடிய அளவிற்கு சம்பளத்தைப் பெற்றால் தானே, அவர்கள் வேறு வகையில் தங்களுடைய கவனத்தினைச் செலுத்தாமல் இருப்பார்கள், நான் கேட்கிறேன், 1500 ரூபாய் சம்பளம் வாங்குகின்ற ஒரு உறுப்பினர் அதோடு

தன்னுடைய குடும்பத்தை நடத்துகிறார். சென்னைக்கு வருகிறார். உறுப்பினர் விடுதியிலே தங்குகிறார். வருகின்ற தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கெல்லாம் சாப்பாடு போடுகிறார், அவர்களுக்கு காப்பி வாங்கிக் கொடுக்கிறார் என்பதெல்லாம் உண்மை தானா? ஏன் நம்மை ஏமாற்றிக் கொள்ள வேண்டும்?

சம்பளத்தால் ஒரு 10 நாட்கள் கூட தாக்குப் பிடிக்க முடியாது என்ற நிலை இருக்கும்போது, அந்தச் சம்பளம் இல்லாமல் வேறு வருமானம் அவர்களுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டால்தான், சம்பள உயர்வு கூடாது என்று அவர்கள் சொல்ல வேண்டும். தயவு செய்து உண்மையை உணர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் செம்மையாகவும், நியாயமாகவும் பயன்பட வேண்டும், செயல்பட வேண்டும் என்றால், இன்று மாறி விட்டு இருக்கிற சூழ்நிலையில் வாக்காளப் பெருமக்கள், வருகின்றவர்களை எல்லாம் அவர்கள் அணைத்துப் போகவேண்டுமானால் நான் இன்றைக்கு சொல்கிறேன், உத்திரப் பிரதேசத்திலே கொடுக்கப்பட்டு இருப்பதைப் போல, 4,000 ரூபாய்க்கு குறைவு இல்லாமல் சம்பளம் கொடுக்க வேண்டும். அது கூட எனக்குப் போதாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். 4,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுத்தால், வாக்காளப் பெருமக்களுக்கு....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் எனக்குப் போதாது என்கிறார். இந்த அரசாங்கம் தாங்காது என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. நான் தான்....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பணம் இருந்தால் மனம் வரும். (சிரிப்பு)

திரு. எம். அப்துல் லத்தீப்: மனம் இருந்தால் பணத்தைத் தேடிக் கொள்ளலாம். எனவே...

மாண்கமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பணத்தைத் தேடுவதற்கும் காலம் தேவை.

திரு. எம். அப்துல் லத்தீப் : காலம் கனிந்து வந்து இருக்கிற காரணத்தாலேதான் பேராசிரியரிடத்திலே முறையிடுகிறேனே தவிர, வேறு அல்ல. பேராசிரியர் உண்மையை அறிந்தவர். அவர் பேராசிரியர். எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். சம்பளத்தை உயர்த்தித் தாருங்கள் என்று கேட்பதிலே, ஏன் வெட்கப்பட வேண்டும். இருக்கிற நிலைமையைச் சொல்கிறேன். சம்பளம் ஏற்றிக் கொடுக்கக்கூடாது. மக்கள் கேட்பார்கள் என்றால், மக்களுக்காகத் தான் கேட்கிறோம். எங்களுக்கு என்ன வேலை இல்லை என்று

இங்கே வந்து உட்கார்ந்து இருக்கின்றோமா? இன்றைக்கு ஒரு நாளைக்கு, நான் வராதிருந்தால், ஒரு வேளை 5,000 ரூபாய் கூட என்னால் சம்பாதிக்க முடியும். எங்களுடைய தொழிலை விட்டு விட்டு இங்கே வந்திருக்கிறோம். என்ன, வருமானம் இல்லை என்பதற்காக, இங்கே வருமானத்தைப் பெறுவதற்காக, சம்பளம் வாங்குவதற்காகவா வந்திருக்கிறோம்? எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டு வந்திருக்கிறோம். கேட்பதற்கு ஏன் வெட்கப்பட வேண்டும்? ஆகையால் வெட்கம் அடையக் கூடாது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் தியாகம் செய்தவர்கள் இதையும் கொஞ்சம் தியாகம் செய்தால் நாடு காப்பாற்றப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, தொடர்ந்து தியாகம் செய்வதற்காகத் தான் இந்த ஆதரவு தேவை என்று கோருகிறோம். இல்லாவிட்டால், தியாகம் செய்வதற்கான ஆளே இல்லாமல் போய்விடுவான். அதனால்தான் இந்தத் தியாகம் செய்வதற்கு அரசு ஓரளவிற்கு இணக்கம் காட்ட வேண்டும் என்று விரும்புகிறோம். வேறல்ல.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தியாகம் செய்வதற்குத் தான் ஒவ்வொரு தொகுதியிலேயும் கட்சி வேட்பாளர்களைத் தவிர, சுயேச்சை வேட்பாளர்கள் நூற்றுக்கணக்கிலே வருகிற ஒரு காலம் இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : அவர்கள் தியாகம் செய்வதற்காக வரவில்லை என்ற காரணத்தினாலேதான் சுயேட்சை வேட்பாளர்கள் எல்லாம் இன்றைக்கு இல்லாமல் ஆக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒரு சில இடங்களைத் தவிர எனவே தான் நான் தயவு செய்து பேராசிரியர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சம்பளத்தை உயர்த்தித் தாருங்கள். கூச்சம் தேவையில்லை. மக்கள் அதை ஆதரிப்பார்கள்.

(பிற்பகல் 12-10)

அதை நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி மாண்புமிகு திருவேங்கடம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு பாஸ் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சட்டமன்ற உறுப்பினர்களோடு ஒருவர் செல்கிறார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தனியாகச் செல்வதற்காவது அந்த பாஸ வழங்கப்பட வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது நாங்கள் வேண்டுகோள் விடுத்து அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எனவே

இன்றைக்கு அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். டாக்டர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் முன்னாள் எம்.எல்.ஏ. களுக்கு இரக்கம் காட்டி அந்த பாஸ் வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பென்ஷன் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஆதரிக்கிறேன். குறைந்த பட்சம் ஒரு உறுப்பினர் முதல் தடவையாக சட்டமன்ற உறுப்பினர் என்று பொறுப்பு ஏற்றுக் கொண்டு அதற்கு அடுத்த நாள் அந்தச் சட்டமன்றம் கலைக்கப்பட்டாலும் கூட அவர்களுக்கு அந்த உறுப்பினர்களுக்கு கொடுக்க வேண்டிய அடிப்படை பென்ஷன் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) தயவு செய்து நான் எல்லோருடைய சார்பிலும் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு இந்த மானியங்களை ஒரு மணிக்குள் முடித்து ஆக வேண்டும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : இப்போது முடித்து விடுகிறேன். நான் மற்றவர்களுக்காக வேண்டுமானால் அவர்களுடைய நேரத்தை நான் எடுத்துக் கொள்கிறேன், அவர்கள் கொடுத்து விடுவார்கள் (சிரிப்பு) ஆகவே தயவு செய்து.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மற்றவர்கள் நேரத்தைக் கேட்கிற நீங்களா தியாகி.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே ஒரு தடவை வருபவர்களுக்கே பென்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிக பட்சம் 500 ரூபாய் என்று இருப்பதை குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் என்று ஏனைய மாநிலங்களில் கொடுக்கிறார்களே அந்த வகையில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு வருடத்திற்கு 50 ரூபாய் என்று உயர்த்துகிறார்கள் என்ன வென்று எனக்கு புரியவில்லை. 50 ரூபாய் என்று ஏதோ மற்றவர்களுக்கு கொடுப்பதைப் போல இந்த மாதிரி இதிலே மட்டும் அவமானம் இல்லையா என்று மற்றவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அதிகமாகக் கொடுக்க வேண்டும அந்தத் தொகையை ஆயிரம் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1961-ல் 100 பைசா என்று இருந்தது இப்போது அது 11 பைசாவாக இறங்கியிருக்கிறது. நாம் கணக்கு சொல்லும்போது மட்டும் இந்த கணக்கை, புள்ளிவிவரத்தை கொடுக்கிறோமே,

ஸ்டட்டிஸ்டிகல் டாடா ஏன் இதை சொல்ல மாட்டேன் என்கிறீர்கள் தயவு செய்து அப்போது இருந்த பண மதிப்பு என்ன இப்போது இருக்கிற பண மதிப்பு என்ன? அந்தக் கணக்கைப் பார்த்தால், எங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். அதை நீங்கள் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனவே தயவு செய்து நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுவது அதை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது, 400 ரூபாய் அதை யாரும் வாங்குவது இல்லை. அந்த பாரத்தை பில் அப் செய்வதை விட சும்மா இருந்து விடலாம் என்று எல்லோரும் இருந்து விடுகிறார்கள். அதை ஒட்டுமொத்தமாக ஆயிரம் ரூபாய் வருடத்திற்கு பணமாகவே இந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு எதிர் வரிசையில் இருக்கக் கூடியவர்களுக்கு ஒரு கோரிக்கை என்னிடத்தில் வந்திருக்கிறது. ஏன் இவர்களுக்கு வாகனம் வழங்கக்கூடாது. எதிர்க்கட்சி என்று சொன்னால் முதலில் இருக்கிற ஒரு ஆளுக்கு மட்டும் அங்கீகரிக்கப் பட்ட எதிர்க்கட்சி என்று மினிஸ்டர் ரேங்க் என்று சொல்லுகிறோம். ஒத்துக் கொள்கிறேன். மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும் நீங்கள் வாகனம் வழங்க வேண்டும். அவர்கள் செம்மையாக செயல்பட அது பயன் உள்ளதாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒரு அசிஸ்டென்ட் கொடுக்க வேண்டும். இன்றைக்கு எவ்வளவு மனுக்கள் வருகின்றன என்று என்னால் சொல்ல முடியும். நானும் பல நாட்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து இருக்கிறேன். ஆனால் இப்போது இருப்பதைப் போல அவ்வளவு மனுக்கள் அப்போது இல்லை. இப்போது நிறைய மனுக்கள் வருகின்றன. தனிப்பட்ட மனிதன் ஒன்றுமே செய்ய முடியாது. எனவே ஒரு ஸ்டேனோ அல்லது ஒரு அசிஸ்டென்ட் என்ற முறையில் ஒரு கிளரிக்கல் அசிஸ்டென்ட்டாவது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப் பற்றி (மணியடிக்கப் பெற்றது) நமது உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் சொன்னார்கள். தயவு செய்து ஒரு கட்டுப் பாட்டை கொண்டு வாருங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் கனதனவான்கள், கண்ணியவான்கள் என்பது நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றுசொன்னால் மிகக் கடுமையான முறையில் ஏனைய சட்டமன்ற விடுதிகளில் இருப்பது போல வெளி ஆட்களை அங்கே அனுமதிக்கக்கூடாது. தங்க அனுமதிக்க கூடாது; அறையில் தங்க அவர்களை அனுமதிக்க கூடாது. அந்த சட்டமன்ற உறுப்பினர் களுக்கு அது தீமையை விளைவிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி

இன்றைக்கு குற்றங்கள் இழைக்கப்படுகின்ற கூடாரமாக மாறி வருகிறது என்று மக்கள் பேசுகிறார்கள். அங்கே வருபவர்கள் எல்லாம் இந்த மாதிரியான ஒரு எண்ணத்தில் போகிறார்கள். எனவே தயவு செய்து சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில், வெளி ஆட்கள் யாரும் தங்கக் கூடாது, உறுப்பினர்களைத் தவிர வந்து பார்த்து விட்டு போகலாம். ஆனால் உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் தங்கக் கூடாது என்று...(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று 1 மணிக்குள் நிகழ்ச்சிகளை முடித்து ஆக வேண்டும். இன்னும் 3 பேர் பேச வேண்டும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : I am just finishing. I need only two minitues. I will just conclude. அந்த அடிப்படையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கன்க்ளுட் என்று சொல்லிவிட்டு இன்க்ளுட் தானே அதிகமாக இருக்கிறது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : நான் மாண்புமிகு பேராசிரியர் அவர்களை மிக அன்போடு வேண்டிக்கேட்டுக்கொள்வது, சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்; டி. ஏ. கொடுக்கப்பட வேண்டும்; ஸ்டாம்ப் செலவை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களின் அறைகளிலே வசதி போதவில்லை வசதிகளை அதிகமாக்கித் தர வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே வெளியார்கள் தங்குவதை அனுமதிக்கக் கூடாது. தொகுதியில் பெண் உறுப்பினர்கள் வந்தால அவர்கள் (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். 1 மணிக்கு முடித்தாக வேண்டுமே; ஓட்டெடுபபு இருக்கிறது, அதனால் முடித்துக் கொள்ளுங்கள் (குறுக்கீடு) இல்லையில்லை, இன்றைக்கு 1 மணிக்கு ஓட்டெடுப்பு இருக்கிறது; அதனால்தான் முடிக்க வேண்டுமென்று சொல்கிறேன். (குறுக்கீடு) தியாகி அவர்களே, அமருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள்.

எல்லா மானியததிலும் நீங்கள் லோனைப் பற்றிப் பேசுகிறீர்கள். இப்போது எம்.எல்.ஏ-க்களுக்கும் லோன் வேண்டுமென்று கேளுங்கள். (சிரிப்பு).

திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்த எனது அருமை நண்பர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, இந்த சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே எல்லா நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்கும் எங்களுக்கும் நிரம்ப முரண்பாடுகள் உண்டு. ஆனால் இந்த சட்டமன்ற மானியக் கோரிக்கையில் மட்டும் அவர்களுக்கும் எங்களுக்கும் உடன்பாடு உண்டு. ஆனால் ஒரு விஷயத்தில் முரண்பாடு இருக்கிறது. அதாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகின்ற விடுதியிலே வெளியாட்கள் தங்கக் கூடாது என்று சொல்கிறாரே, அவர் அந்த விடுதியிலே தங்கிப் பார்த்தால் அது தெரியும். ஏனென்றால், கிராமங்களிலேயிருந்து வருகின்ற நம்முடைய நண்பர்கள், தோழர்கள் எங்கு தங்குவது என்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றபோது, ஒரு லிமிட்டாக 5 பேர், 6 பேர், வருகின்றபோது. . . . (மணியடிக்கப்பெற்றது).

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர் விடுதியில் நீண்ட நாட்கள் தங்கி அனுபவப்பட்டவன் நான். நான் பேசுவது எனக்காக அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் போன்றவர்களுக்கும், எல்லா உறுப்பினர்களுக்கும், அவர்களுடைய நன்மையைக் கருதியும், நம்முடைய மாண்பைக் கருதியும் தான் இதைச் சொன்னேன் தவிரவும், வெளியார்கள் தங்குவதற்காக சட்ட மன்ற உறுப்பினர் விடுதி ஏற்படுத்தப்படவில்லை. . . . (மணியடிக்கப்பெற்றது).

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமக்கெல்லாம் வாக்களித்து நம்மை சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கியவர்கள்தான் அங்கே நம்மைப் பார்க்க வருகின்றார்கள். அவர்கள் தங்குவதற்கு தடையாக சட்ட விதியை நிர்ணயித்தால் அது தவறாக அமையும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னே பேசிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் நம்முடைய குறைகளையும் கோரிக்கைகளையும் மிக அழகான முறையில் சொல்லிவிட்டார்கள். ஆளுங்கட்சித் தரபபிலிருந்து இந்தக் கோரிக்கை நிரம்ப வந்திருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக இந்தக் கோரிக்கை மரியாதைபெறும் என்று நான் நினைக்கிறேன் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பல்வேறு கோரிக்கைகளைச் சொன்னார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற சாதாரண சிறிய வ்வசாயிகளுக்கெல்லாம் வங்கிகளிலே கடன் வழங்குகிறார்கள். அதே போல வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் (சிரிப்பு) என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறாரா அல்லது மேலே இருக்கிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற உறுப்பினர்தான். நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். என்னுடைய கோரிக்கை என்பது மட்டுமல்ல நம் எல்லோருக்கும்தான். நாம் ஏதோ சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகிவிட்டோம் என்பதற்காக வெள்ளையும் சள்ளையுமாக இருக்கின்றோமே தவிர நம்முடைய சூழ்நிலைகளெல்லாம் மிகவும் மோசமான, கஷ்டமான சூழ்நிலைகள்தான். நாம் யோக்கியமாக, நியாயமாக, நேர்மையாக, தூய்மையாக இருக்க வேண்டும். அப்படித்தான் இருந்துகொண்டிருக்கிறோம். அப்படி தொடர்ந்து இருக்க வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக நிரம்ப நமக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். நிரம்ப சம்பளத்தைத் தர வேண்டும். இந்தச் சம்பளமெல்லாம் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் போதாது. இந்தியாவிலேயே காஸ்ட்லியஸ்ட் சிட்டி என்பது மெட்ராஸ் சிட்டிதான் என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு புள்ளி விவரம் சொல்லுகின்றபோது விலைவாசிகளெல்லாம் மிகக் கடுமையாக உயர்ந்துவிட்டன. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் சென்னையிலே 3 மாதம் தங்கியிருக்கிறோம் என்று சொன்னால் மிகவும் கஷ்டம்தான்.

இங்கே தபால்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் 5 ஆயிரம் பெட்டிஷன்களைப் பெற்றிருக்கிறேன். இந்த 5 ஆயிரம் பெட்டிஷன்களையும் டைப் செய்து, நம்பர் போட்டு, வரிசையாக மினிஸ்டர்களிலிருந்து சம்பந்தப்பட்ட ஆபீசர்கள் அத்தனை பேருக்கும் அனுப்பி, அந்தப் பார்ட்டிக்கும் மற்றவர்களுக்கும் அனுப்புவது என்றால் கிட்டத்தட்ட எனக்கே 7 ஆயிரம் ரூபாய், 8 ஆயிரம் ரூபாய் செலவாகிவிட்டது

[பிற்பகல் 12-20]

இதற்கு எல்லாம் கடன் வாங்கித்தான் செலவு செய்கிறேன். மாண்புமிகு தலைவர் அவர்கள் சொன்னதைப்போல அதிலேயும் கடன்தான். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. டைப் செய்ய வேண்டுமென்றால் அதற்கு காசு கொடுக்க வேண்டும். ஒரு பக்கம் டைப் செய்ய ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும். அதனால் எங்களுக்கு ஒரு டைப் மெஷின் வாங்கித் தர வேண்டும். இல்லை என்றால் ஒரு டைப்பிஸ்ட் நியமிக்க வேண்டும். பி.ஏ. மாதிரி அல்லது பி. சி. மாதிரி அவர்களை நியமிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு அமைச்சர்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. இருந்த போதிலும் மினிஸ்டர்ஸுக்கு இருக்கிற வசதிகள் போதாது. அமைச்சர் என்றால் அந்தஸ்து உயர்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் வருகின்றவர்கள பயப்படுவார்கள். மக்களுக்கு வேண்டிய காரியங்களை செயலாற்றிக் கொண்டிருந்தால் போதாது ; அந்தஸ்து உயர்ந்த மினிஸ்டர்களாகவும் இருக்க வேண்டும். இப்போதும் சிலர் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கும் ஊதியத்தை உயர்த்த வேண்டும். எங்களுக்கும் ஊதியத்தை உயர்த்த வேண்டும். இப்போது கொடுக்கின்ற 1,500 ரூபாய் என்பது மிகவும் குறைவு. ஆகவே, அதை உயர்த்த வேண்டும். உயர்த்த வேண்டும் என்று சொன்னால் ஏதோ 100 ரூபாய், 200 ரூபாய் 300 ரூபாய் அல்லது 500 ரூபாய் உயர்த்துகிறோம் என்று சொன்னால் பிரயோஜனம் இல்லை. 3,000 ரூபாய் உயர்த்த வேண்டும்.

இங்கே சட்டமன்றத்தில் நம்முடைய கடமையை ஆற்றிவிட்டு வீட்டுக்குப் போகிற வரையில் ஆஸ்டலிலே தங்குகிறோம். வெளியிலே சாப்பிட வேண்டுமென்றால் ஒரு சாப்பாட்டிற்கு 30 ரூபாய் ஆகிறது. மூன்று வேளை சாப்பிட வேண்டுமென்றால் ஒரு நாளைக்கு 100 ரூபாய் வந்துவிடுகிறது. கொஞ்சம் வசதியாக சாப்பிட வேண்டுமென்றால் 200 ரூபாய் கூட வருகறது. சில நேரங்களில் கூடவே கெஸ்ட்ஸ் வருகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் சொல்வதைப் போல கெஸ்டுகளோடு போகின்றபோது 400 ரூபாய் 500 ரூபாய் வந்துவிடுகிறது. போகும்போது, சில நேரங்களில் ' டாக்சி ' எடுத்துக்கொண்டு போகிறோம். அதற்கும் நாம்தான் பணம் கொடுக்கவேண்டும். உடன் வருகின்றவர்களிடமிருந்து பணம் வாங்க முடியாது. நாம் செலவு பண்ணினால்தான் அவர்களிடத்தில் நமக்கு ஒரு மரியாதை இருக்கும். சட்டமன்ற உறுப்பினர் எதற்கும் காசு கேட்கவில்லை ; யாரிடமும் காசு கேட்கவில்லை ; சாப்பாட்டிற்குக் கூட கேட்கவில்லை ; எந்தச் செலவுக்கும் நம்மிடம் காசு கேட்கமாட்டார் ; ஆகவே நல்ல சட்டமன்ற உறுப்பினர் ; அவர்களுடைய அந்தஸ்து சமுதாயத்திலே உயர வேண்டும் ; அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தியது நியாயம் என்று ஏற்றுக்கொள்வார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பொது மக்களிடம் காசு வாங்காமல் செயல்பட்டால்தான் நல்ல சட்டமன்ற உறுப்பினர்கள் என்று மக்கள் மத்தியிலே மதிக்கப்படுவார்கள். இதிலே கருத்து வேறுபாடு கிடையாது.

இப்போது ஸ்டாம்புக்கு ஏகப்பட்ட செலவு ஆகிறது, அதனால் எங்களுக்கு ஒரு ' ப்ராங்கிங் மெஷின் ' வாங்கிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஸ்டாம்ப் ஒட்டுவதற்குப் பதிலாக முத்திரை போடும் மிஷினை வாங்கிக் கொடுத்துவிட்டு, இவ்வளவு ஸ்டாம்ப் என்று ஃபிக்ஸ் பண்ணி கொடுத்துவிட்டு, அந்தப் பணத்தை அரசாங்கம் போஸ்டாபீசுக்கு செலுத்திவிடலாம். எங்களுடைய கஷ்டம் குறையும். இதுவரை 7,000 தபால் நான் அனுப்பியிருக்கிறேன். ' ஐ ஆம் நாட் ஜோக்கிங் ' நான் உண்மை

1989 மே 4] [திரு. ஆர். சிங்காரம்]

யைத்தான் சொல்லியிருக்கிறேன். ஸ்டாம்புக்கும் காசு வாங்குவதில்லை, டைப் செலவுக்கும் காசு வாங்குவதில்லை. இப்படிச் செய்தால்தான் எம். எல். ஏ. ரொம்ப நல்லவர், சுறுசுறுப்பானவர், நேர்மை மிக்கவர், நாணயமானவர் என்று சொல்வார்கள். இந்த சட்டமன்ற உறுப்பினருக்கு சோடா பாட்டில் எல்லாம் கிடையாது (பலத்த சிரிப்பு) ; சுத்தமாக இருக்கிறார், யோக்கியமானவர் என்று நினைப்பார்கள். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் கூட ஒரு கூட்டத்திலே யாரும் முன்போல் இருக்கக்கூடாது, நல்லவர்களாக, நாணயமானவர்களாக, யோக்கியமானவர்களாக நடந்துகொள்ள வேண்டும் என்று கண்டிஷன் எல்லாம் வைத்ததாகச் சொன்னார்கள். அவர்கள் இப்போது இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை நிச்சயமாக நம்பலாம். தி. மு. க., அ. தி. மு. க., காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எல்லோரும் ஒழுக்கசீலர்கள்தான் ; பண்பாடு மிக்கவர்கள்தான் ; நாணயமாக நடந்து கொள்பவர்கள்தான். ஆகவே, கலைஞர் அவர்களுக்கு யார்மீதும் சந்தேகம் வேண்டாம். இன்னும் சில வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தால் மேலும் நாங்கள் சிறப்பாகச் செயல்பட உற்சாகமும், ஊக்கமும் அளிப்பதாக இருக்கும் (சிரிப்பு).

பேராவூரணிக்கு ஒரு ட்ரங்கால் போட வேண்டுமென்றால் 40 ரூபாய் ஆகிறது. ஆரணிக்கு 50 ரூபாய் வருகிறது. அமைச்சர்களுக்கு எல்லாம் எஸ்.டி.டி. வசதி இருக்கிறது ; நினைத்த நேரத்தில் நினைத்தவர்களுடன் பேசிக்கொள்ளலாம். எங்களுக்கு அந்த வசதி இல்லை. தொகுதியை விட்டு இங்கே வந்துவிட்டால் தொகுதியை மறந்துவிட முடியாது. இங்கே இருந்து தொகுதியைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். கலெக்டருடன் தொடர்பு கொள்ள வேண்டும் ; அதைப்போன்று ஆர். டி. ஓ., தாசில்தார் அலுவலகங்களோடு தொடர்புகொள்ள வேண்டும். முக்கியமான பிரச்சினைகளுக்கு உடனே தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கு எல்லாம் ட்ரங்கால் போட்டுத்தான் பேச வேண்டும். நாங்கள்தான் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அமைச்சர்கள் எங்கு வேண்டுமானாலும் பேச வசதி இருக்கிறது. எஸ். டி. டி. மூலம் டெல்லிக்கும் பேசலாம் ; தொகுதிக்கும் பேசலாம். ஆகவே, எங்களுக்கு அதைப்போன்ற வசதி செய்ய முடியாவிட்டாலும் பணத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

நாங்கள் ஊரிலிருந்து வந்துவிட்டால் ஏதோ முக்கியமான பிரச்சினைகளுக்காக தொகுதி மக்கள் எங்களைப் பார்க்க வந்துவிடுகிறார்கள். அப்படி வருகிறபோது அவர்களை வெளியிலே போய் தங்கிவிட்டு வாருங்கள் என்று சொல்ல முடியாது ; அப்படிச் சொல்வது தப்பு. இங்கேதான் தங்குவார்கள். ஆனால் அதற்கு ஒரு லிமிட் வைத்துக் கொள்ளலாம் ; லிமிட் வைத்துக்கொள்ளுங்கள், ஏற்றுக்கொள்கிறோம்.

அந்தமாதிரி அவர்கள் வருகின்றபோது, கலெக்டருடன், ஆர். டி. ஓ.-வுடன் அல்லது தாசில்தாருடன் பேச வேண்டியிருக்கிறது. ட்ரங்கால் போடுவதற்கு நாங்கள்தான் பணம் கொடுக்க வேண்டும்; பார்ட்டியிடம் பணம் வாங்க முடியாது; எங்களுடைய சொந்த பாக்கட்டிலிருந்துதான் அதைக் கட்ட வேண்டும்.

எம். எல். ஏ.-க்களுக்கு வீடு கிடையாது. வீடு கட்ட லோன் போடுங்கள் என்று நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். துணைத் தலைவரோ அல்லது பேரவைத் தலைவரோ கோடீஸ்வரர்கள் அல்ல. அமைச்சர்களும் கோடீஸ்வரர்கள் அல்ல. எம். எல். ஏ.-க்களும் கோடீஸ்வரர்கள் அல்ல. சட்டமன்ற உறுப்பினர் வீடு கட்ட வேண்டும்; அதற்கு கடன் கொடுக்க வேண்டும். இதை முதலிலேயே சொல்லிவிட்டார்கள்; நானும் சொல்லுகிறேன். நிச்சயமாக இந்தியாவிலேயே, உலகத்திலேயே வாடகை வீட்டில் குடியிருக்கின்ற எம். எல். ஏ. யார் என்றால் இந்த சிங்காரம் தான் (குறுக்கீடு) என்னைப்போல பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதை நான் ஆதாரத்தோடு சொல்ல முடியும். முதலமைச்சருக்கே தெரியும்; இல்லை என்றால் அவர்களே விசாரித்துப் பார்க்கலாம். அவர்கள் விசாரிக்கவில்லை என்றால் சி. ஐ. டி. மூலமாகக்கூட விசாரித்து, சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். அப்படி கேட்டுக்கொண்டு சொல்லுங்கள் (குறுக்கீடுகள்).. இந்த அளவுக்கு மிகக் கஷ்டமான சூழ்நிலைகள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் மிகவும் நாணயம் மிக்க உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

சட்டமன்றத்தைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை மட்டும் நான் சொல்கிறேன். இந்தச் சட்டமன்றத்தில் சில நிலைய வித்துவான்கள் இருக்கிறார்கள். அவர்களேதான் எப்போது பார்த்தாலும் வாசித்துக்கொண்டு இருக்கிறார்கள். இது நியாயம்தானா? (சிரிப்பு) புதிய வித்துவான்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டாமா? நாங்கள் எல்லாம் புதிய வித்துவான்கள். தொகுதியிலே உள்ள பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் விவாதம் செய்கிறோம். அசெம்பிளியிலே சிங்காரம் பேசினார் என்றும், நன்றாகப் பேசினார் (குறுக்கீடு) ரேடியோவைத் திறந்து வைத்திருக்கிறார்கள், சிங்காரம் வருகிறாரா என்று

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏறத்தாழ 25 ஆண்டுகளாக இருக்கிறேன். நானும் பழைய நிலைய வித்துவான்தானா? நான் வாசிக்கலாமா, கூடாதா? (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் ஆஸ்தான வித்வான். (சிரிப்பு).

1989 மே 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் சொன்னதுபோல் அவர்கள் ஆஸ்தான வித்வான் மட்டுமல்ல ; உலக மகா கவி ஒத்துக் கொள்கிறோம். அவர்களை மிஞ்சுவதற்கு பேசுவதற்கு நாட்டில் யாரும் கிடையாது. ஆகவே, உறுப்பினர்களுக்கான அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இரயில்வே கூப்பன் கொடுக்கிறார்கள். அந்தத் தொகை எல்லாம் போதாது. நாங்கள் அடிக்கடி ஊர்களுக்குப் போய்விட்டு வருகிறோம். திடீர், திடீரென்று போய் வருகிறோம். பஸ்ஸிலே வந்து காலையிலே அசெம்பிளியை அட்டெண்ட் பண்ணிவிட்டு 11 மணிக்கு கிளம்புகிறோம். நானும் உறுப்பினர் திரு. அண்ணாதுரை அவர்களும் திருச்சிக்குப் போய்விட்டு

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு இருக்கின்ற கட்டுப்பாடு பற்றி உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களைக் கண்டால்தான் பயமாக இருக்கிறது. நிச்சயமாக முடித்துவிடுவேன். கட்டுப்பாட்டை மீற மாட்டேன். ஆனால் கட்டுப்பாட்டை மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் தாங்கள் (குறுக்கீடு) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிறைந்த வாய்ப்பு வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களையும், பேரவை முன்னவர் அவர்களையும் கேட்டுக் கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ஆர். அண்ணா நம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் அவர்களுடைய உள்ளத்திலே என்னென்ன இருக்கின்றன என்று இந்தப் பேரவைக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே குறிப்பாக சம்பளம் எங்களுக்கு அதிகம் வேண்டும்; நாங்கள் கடுமையாக உழைக்கிறோம் என்றெல்லாம் இங்கே கோரிக்கைகளை வைத்தார்கள். நானும் அந்தக் கோரிக்கையை வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977ஆம் ஆண்டு வரையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வெறும் 550 ரூபாய்தான் சம்பளமாகக் கொடுக்கப்பட்டு வந்தது என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் அதற்குப் பின்னாலே எங்களுடைய தானைத் தலைவர் முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆயிரம் ரூபாய் என்று அதிகரித்தார்கள் என்ற நல்ல செய்தியை இந்த மன்றத்திற்கு

(திரு. ஆர். அண்ணா நம்பி)]1989 மே 4

நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே மன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோளை ஏற்று முதல்வர் அவர்கள் எங்கள் தலைவர் எம்.ஜி.ஆர். போலவே ஆயிரம் ரூபாயாவது சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களானாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களானாலும் அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். ஆனால் இன்றைக்கு இந்த அரசு மாநில அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கிணையான சம்பளம் கொடுப்போம் என்று தீர்மானம் போட்டு அதற்கான கமிஷனும் அமைத்திருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. அதைப்போல மாநிலத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிணையான மதிப்பு தரப்பட வேண்டும்; அந்த அடிப்படையில் நீங்கள் எங்களையும் மாநில ஊழியர்களாகக் கருதி எங்களையும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக்குங்கள் என்று அனைத்து உறுப்பினர்கள் சார்பாகவும் நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் சம்பளம் அதிகமாக வேண்டும் என்று கேட்டார்கள். வறுமைக் கோடுகள் பற்றி வெளியே பேசினாலும் கூட, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழேதான் இருக்கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12—30)

இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர் தேவை என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள்கூட கேட்டார்கள். நானும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது எனக்கு ஒரு உதவியாளர் மத்திய சர்க்கார் கொடுத்தது. அதற்கும் சம்பளம் கொடுத்தார்கள். அவருக்கும் படி என்று கொடுத்தார்கள். இப்படி ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ரூ. 5,500, படியும், சம்பளமும் பி.ஏ. சம்பளமும் என்று ஒட்டு மொத்தமாக ரூ. 5,500 கொடுக்கப்பட்டது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே மத்திய சர்க்கார் உறுப்பினர்களுக்கு ரூ. 5,500 கிடைக்கிறது என்றால், மாநில சர்க்காரிலே உறுப்பினர்களுக்கும் ஏன் இந்த ரூ. 5,5 0. கொடுக்கக்கூடாது என்பதை என்னுடைய ...வாக இங்கே தொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்,

1989 மே 4] [திரு. ஆர். அண்ணா நம்பி]

அது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, உதவியாளர்களைத் தரவேண்டும். அந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு துன்பங்கள் இருக்கின்றன என்பதை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அறிவார்கள். எனவே பி.ஏ. ஒருவர் துணைக்குத் தேவை என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, அனைவருக்காகவும் சொல்கிறேன். பி.ஏ.வைத் தாருங்கள். அவர்களுக்கும் அந்தச் சம்பளம் தரப்பட வேண்டும். நாங்கள் கொடுக்க முடியாது. நாடாளுமன்றம் கொடுப்பது போல, சட்டமன்றம் தான் கொடுக்க வேண்டும். கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் தான் தர வேண்டும் என்று எல்லோரும் பேசினார்கள். அதை நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் வகிக்கும் சட்டமன்ற உறுப்பினர் பதவி என்பது சாதாரணமான பதவியா? கையிலே காசே இல்லாமல் இருக்கலாம். ஆனால் மிகப் பெரியவர்கள். ஒரு மாநிலத்தினுடைய தலைமைச் செயலருக்கும் முன்னாலே இருப்பவர்கள். ஒரு மாநிலத்தினுடைய தலைமை செயலாளருக்கும் பெரியவர்கள். நாங்கள் மிக உயர்ந்தவர்கள். ஆனால் கையிலே காசு இல்லை. எவ்வளவு வருத்தப்பட்டார்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் இருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப்போலவே எங்களுக்குள்ள அந்தஸ்து சீப்செக்ரட்டரிக்கும் மேல். ஆனால் சீப் செக்ரட்டரிக்கு என்ன சம்பளம் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கள் பையிலே இருப்பது என்ன?

திரு. ஆர். அண்ணா நம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பையிலே எம்.எல்.ஏ. பாஸ் தான் வைத்திருக்கிறேன். காசு இல்லை. ஒரு சீப் செக்ரட்டரிக்கு ரூ. 4,000 சம்பளம். ஆனால் அரசாங்கம் எங்களுக்கு அளிக்கும் மதிப்பு, அரசியல் சட்டத்திலே இருப்பது, சீப் செக்ரட்டரிக்கும் மேல் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு. ஆனால் எங்களுடைய சம்பளம் 1,050 ரூபாய்தான். (குறுக்கீடு) ரூ. 8,000 வரையிருக்கிறது என்று சொல்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் சொல்கின்றார்கள். ரூ. 8,000 என்று சொல்கிறார்கள். எங்களுக்கு ரூ. 8,000 என்று கேட்டால் நிச்சயமாகத் தர மாட்டார்கள். ரூ. 4,000 போதும். அதையே தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தான் உறுப்பினர்கள் எல்லோரும் கேட்டார்கள். ஆக சம்பளம் உயர்த்தித் தரப்பட வேண்டும் என்று எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானும் அதை வலியுறுத்துகிறேன்.

அதேபோல, நூலகத்தைப் பொறுத்தவரையில் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் ஓடோடிச் சென்று அவர்களுடைய எண்ணத்திற்குத் தகுந்தவாறு படிப்பதற்கு புத்தகம் வேண்டுமென்று தேடுகின்றபோது அது உடனடியாகக் கிடைப்பதில்லை. அதுபோலவே

தேடுவதற்கு ஆட்களும் இல்லை. எனவே, நம்முடைய பிரசித்திபெற்ற சட்டமன்றம் நாளைக்கு 50-ஆவது ஆண்டு பொன் விழாவை கொண்டாடுகின்ற இந்த நேரத்திலே இந்த நூலகத்தை யாவது நீங்கள் விரிவுபடுத்த வேண்டும் என்றும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இங்கே எல்லா உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக ஊராட்சி ஒன்றியத் தேர்தலில், ஆதி திராவிடர்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக ஏனைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் வர முடிகிறது. பெண்கள் வர முடியவில்லை, ஆதி திராவிட மக்களும் வரமுடிவதில்லை. எனவே ஆதிதிராவிட மக்களுக்கு இந்த இட ஒதுக்கீட்டை செய்யவேண்டும் என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெண்களுக்கு சம உரிமை, பெண்களுக்கு எல்லாவற்றிலும் உரிமை கொடுக்கிறார்கள். வேலை வாய்ப்பிலே உரிமை கொடுக்கப்படுகிறது. எனவே பெண்களுக்கும் அதிலே இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதனையும் நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த உறுப்பினர் கொண்டு வந்து கொடுப்பது தாளா இல்லை சம்பளமா?

திரு. ஆர். அண்ணா நம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கொண்டு வந்து கொடுப்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்டவேண்டுமென்ற கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசி ஆகிவிட்டதா?

திரு. ஆர். அண்ணா நம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் ஆதிதிராவிட மக்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோலவே தேர்தல் நேரங்களில் ஆதிதிராவிட மக்கள் வாக்குச் சாவடிக்கு செல்வதற்குள்ளேயே 4 பாகமாகப் பிரித்துக் கொள்கிறார்கள். எப்படி இங்கே கொஞ்சம் பேரை லாரியிலே ஏற்றிக்கொண்டு அங்கே கொஞ்சம் பேரை லாரியிலே ஏற்றிக்கொண்டு அவர்களை ஆதிக்க வெறியர்கள் மிரட்டி, தண்ணீர் பிடிக்க வரக்கூடாது என்று மிரட்டி, அப்படி கொஞ்சம் பேரை வண்டியிலே அடைத்து வைத்து, ஆதி திராவிட மக்களை பயமுறுத்தி, பயமுறுத்தி, அவர்கள் உரிமையோடு வாக்குச் சாவடிக்குச் சென்று, வாக்களிக்க முடியவில்லை. இதை ஆண்டாண்டுக் காலமாக தேர்தல் நேரங்களில் நாமெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே வாக்குச் சாவடிகளை ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குப் பக்கத்தில் அமைக்க வேண்டு

மென்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மணியை, தலைவர் அவர்கள் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஒரு விஷயத்தைச் சொல்லி முடிக்கிறேன். ஆக ஆதி திராவிட மக்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாநகராட்சித் தேர்தல்கள் என்று அறிவித்தார்கள். ஆவலோடு மக்கள் எதிர்பார்த்தார்கள். நம்முடைய கட்சித் தோழர்களும் எதிர்பார்த்தார்கள், மாநகராட்சி உறுப்பினராக லாமென்று. ஆனால் இதற்கு முன்னாலே மதுரை கிழக்குத் தேர்தல், மருங்காபுரித் தேர்தல் வந்துவிட்டது. அந்தத் தேர்தலில் எங்கள் தானைத் தலைவி எதிர்க்கட்சித் தலைவி புரட்சித் தலைவி, செல்வி ஜெயலலிதா அவர்கள் அந்தத் தொகுதிகளுக்குச் செல்லாமலேயே அவர்களுடைய புகழ் பாடி நாங்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறோம். சட்டப் பேரவை உறுப்பினர்கள் 27, 28 பேரும் போய், அருமைச் சகோதரர்கள் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்., திரு. திருநாவுக்கரசு போன்றவர்கள் மிகச் சாமானியர்கள் இருந்து, வெற்றி பெற்றோம். இதைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்? மருங்காபுரி, மதுரை கிழக்கு தேர்தல்களைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்? அப்படி பயப்படத் தேவையில்லை, உங்களுக்கு இருக்கின்ற சக்திகளைக் காட்டுங்கள். உடனே மாநகராட்சித் தேர்தல்களை நடத்துங்கள் என்று கேட்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேராசிரியர் க. **அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றம் குறித்தும், தேர்தல்கள் குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக தேர்தல்கள் குறித்து மிக அதிகமாகச் செலவாகிறது, ஏராளமான பொருட் செலவு பல்வேறு வகைகளிலே விளைகிறது. அந்தத் தேர்தல் செலவைக் குறைத்து—அரசாங்கத்தினுடைய செலவை அல்ல—வேட்பாளர்களுடைய செலவைக் குறைத்து, சிக்கனமாக நடத்தப்படக்கூடிய முறை வகுக்கப்பட வேண்டும் என்றகருத்து இங்கே வலியுறுத்தப்பட்டது அனைத்திந்திய அளவில் தேர்தல் ஆணைக் குழுவினுடைய ஆலோசனையின் அடிப்படையில் மத்திய அரசு பல முறை ஆலோசனை செய்தும் ஒரு தீர்மானமான முடிவுக்கு வராத நிலையில், தமிழக அரசு தனியாக அப்படிப்பட்ட தேர்தல் முறைகளில் பெரிய மாற்றத்தைச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதை நான் முதலிலேயே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகள் மிகப் பெரிதாக இருக்கின்றன; கடந்த 15 அல்லது 16 ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்டது "டீலிமிட்டேஷன்" கமிஷன் அதற்குப் பின்னர், மறுபடியும் "டீலிமிட்டேஷன்"— தொகுதிகளினுடைய அளவை முறைப்படுத்துகின்ற அந்தக்காரியம்

மக்கள் தொகை அதிகமான பகுதியை இன்னொரு பக்கத்திலே சேர்க்கிற முடிவு எல்லாம் ஓர் ஆய்வுக் குழு மூலமாக எடுக்கப்படுகிற முடிவு. மத்திய அரசினுடைய கொள்கைப்படி புதிதாக ''டீலிமிட்டேஷன்'' இந்தக் காலகட்டத்தில் செய்வதில்லை. மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக, சில மாநிலங்களில் தொகுதிகள் அதிகமாகுமானால், அது நாட்டினுடைய பொது நிலையில் ஏற்புடையதல்ல என்ற எண்ணம் கொண்டு, மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொண்ட மாநிலங்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற கருத்து கொள்ளப்பட்டதாலும், அதற்குப் பின்னால் இந்தத் தொகுதி அமைப்புப் பணி என்னும் கடமை நிறைவேறாத காரணத்தால் சில தொகுதிகள்—வில்லிவாக்கம் போன்ற தொகுதிகள்—3 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் கொண்ட தொகுதிகளாகவும், மிகப் பெரிய தொகுதிகளாகவும் அமையும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மறுபடியும் ''டீலிமிட்டேஷன்'' வரும்போது இவற்றை முறைப்படுத்த முடியும், சீர்ப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் ஒன்று, ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் 6 சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற அந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, குறைந்தது 7 சட்டமன்ற உறுப்பினர் என்ற எண்ணிக்கை அளவாவது அமைந்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையைச் சிறப்பாகச் செய்ய முடியுமென்ற கருத்து, இதற்கு முன்னாலே இந்த அவையிலே பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

இருந்தாலும் அந்த எண்ணிக்கையைக்கூட மத்திய அரசு ஒத்துக் கொள்ள வேண்டிய நிலைதான் இருக்கிறது என்பதையும் அவர்கள் ஒத்துக் கொண்டால் அப்படிப்பட்ட கடமைகளை நிறைவேற்ற தமிழக அரசு உறுதுணையாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாகவே தேர்தலில் வாக்காளர்களுக்கு அவர்களுடைய அடையாள அட்டைகளோடு நிழற்படத்தையும்—புகைப்படத்தையும் சேர்த்துத் தர வேண்டும் என்ற ஒரு கருத்து இங்கே இடம் பெற்றது. நம்முடைய நாட்டிலே நிழற்படம் எடுத்து வழங்குவது என்றால் அது மிகப் பெரிய செலவாக இருக்கிற காரணத்தால் ஏற்கெனவே இருந்த அரசு அந்த முயற்சியை அறிவித்துங்கூட அந்தக் கடமையில் ஈடுபட்டதாகத் தெரிவித்துங்கூட—அந்தக் கடமை நிறைவேற முடியாது நின்று போய்விட்டது என்பதையும்—புகைப்படத்தை எடுத்து வழங்குவதற்கு ஆகிற செலவு—அதற்காக 'டெண்டர் கேட்டபோது—மிகப் பெரிய தொகையாக இருந்த காரணத்தால் அந்த டெண்டர் ஏற்கப்படாத நிலைமை ஏற்கெனவே ஏற்பட்டது என்பதையும்,

இன்றைக்கும் அந்த நிலைமையே தொடருகின்ற காரணத்தால் உடனடியாக அப்படிப்பட்ட அடையாள அட்டைகளோடு புகைப்படமும் வழங்கக்கூடிய நிலை அண்மைக் காலத்தில் நம்மால் நிறைவேற்ற முடியாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று— மின்னணுக் கருவிகளைப் பயன்படுத்தி தேர்தல் நடத்துகிற முறைகளெல்லாம் நம் நாட்டிலும் விரைந்து வர வேண்டும் என்ற எண்ணமும் இங்கே தெரிவிக்கப்பட்டது. அது தேர்தல் ஆணைக் குழு — அதை முதன் முதலாக சில பகுதிகளில் நடத்திப் பார்த்து அதற்குப் பின்னர் அதையே பொருளாதார அடிப்படையில் நம் நாடு முழுவதுமாக நடக்கிற பொதுத் தேர்தலில் செயல்படுத்த முடியுமா — அதற்கான வசதி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அதற்குப் பிறகு தெரிவிக்க வேண்டிய கட்டத்தில் தேர்தல் ஆணைக் குழுவும், மத்திய அரசும் சேர்ந்து தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய விவாதத்தில் எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. அண்ணா நம்பி அவர்கள் இரண்டு இடைத் தேர்தலில் தங்கள் கட்சி வெற்றிபெற்றுவிட்ட காரணத்தால், மாநகராட்சி மன்றத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படாமல் தள்ளிப் போடப்படுகின்றன — இதில் ஆளும்கட்சி அஞ்சிவிட்டது என்று அவர் குறிப்பிட்டார். அவருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் — மிகப் பெரிய செல்வாக்கோடு மாண்புமிகு எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்தபோதும்கூட நாங்கள் அஞ்சவில்லை. எனவே இப்போது அஞ்சுவதற்குக் காரணமில்லை. தேர்தல் முடிவுகள் எதுவாக இருந்தாலும்கூட, அந்த முடிவுகளைத் தாங்குகிற ஆற்றல் பெற்ற கட்சிதான் இன்றைக்கு ஆளுகிற கட்சியாக இருக்கிறதே தவிர— வெற்றி தோல்விகளாலே எங்களுடைய உள்ளங்கள் மாறிவிடுவதில்லை — மாறாது என்பதற்கு ஆதாரங்கள் ஏராளம். எனவே அதைப்பற்றி 'அச்சம்' என்ற சொல்லோடு சேர்த்துச் சொல்லாமல் இருந்திருந்தால் நான் வரவேற்றிருப்பேன்.

ஆனால், மாநகராட்சி மன்றத் தேர்தல்களைத் தள்ளிப் போடுவதற்கு மிக முக்கியமான காரணமாக அமைந்துவிட்டது— ஏற்கெனவே உள்ள வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி மே திங்களுக்குள் அந்தத் தேர்தல்களை நடத்துவது என்று நினைத்து அதற்கான முழு ஏற்பாடுகளைச் செய்ய இருந்த நேரத்தில், 18 வயதுள்ளவர்களையும் சேர்த்துக் கொள்ளப்படுகிற பட்டியல் ஒன்று தயாராகி வந்தது. அந்தப் பட்டியலும் முழுமையாகத் தயாராகிவிட்டால் 18 வயதானவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும் என்ற வாக்குறுதியையும் ஏற்கெனவே இந்த மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு தலைவர்கள் எடுத்துச் சொன்ன வாதத்திற்குப் பதிலாக தெரிவித்திருந்த காரணத்தால்— ஒரு வகையில்

அது ஒரு உறுதிமொழியாகிவிட்டதால் — 18 வயது ஆகிறவர்களையும் சேர்க்கின்ற பணி சில மாநிலங்களில் மே திங்களில் முடிந்துவிடும் என்ற நிலை இருந்த போது, தமிழகத்தில் ஜூன் திங்களில் முடியுமென்றும், ஏறத்தாழ முடிந்தபின்னர் அதில் ஏதேனும் குறை இருக்குமானால் அதற்குப் பின்னர் 15 நாளில் அதை நிறைவுடையதாக ஆக்கப்படும் என்றும் அறிவித்த காரணத்தால் — அதற்கு மேலும்கூட இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அவர்களுடைய நோன்பு காரணமாக தேர்தல் பணியில் ஈடுபட முடியாத நிலை இருக்கிறது என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தியதன் காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிற காரணத்தால் தேர்தலில் ஈடுபடுகிற கட்சிகள் எவையும் சில நாட்களிலேயோ அல்லது ஓரிரு மாதங்களில் தங்களுடைய நிலைமையில் மாற்றம் கண்டுவிடும் அல்லது தங்களுடைய சூழ்நிலையை இழந்துவிடும் என்று யாரும் கருதத் தேவையில்லை. பொது மக்களுடைய முடிவுதான் தேர்தல் முடிவாக அமைகிறது. எனவே ஒத்தி வைத்தது பெரும்பாலோரின் கருத்தின் அடிப்படையிலும் — சிறுபான்மை சமூகத்தினரின் வேண்டுகோள் அடிப்படையிலும் — தேர்தல் ஆணைக் குழுவினுடைய ஆணையின்படி தமிழகத்தில் உள்ள தேர்தல் அலுவலர் 18 வயது ஆனவர்களையும் சேர்த்துப் பட்டியலைத் தயாரிப்பதற்கான கால கெடுவையும் பொறுத்துத் தானே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக ஒரு கருத்து சட்டமன்றம் திறம்பட நடைபெற வேண்டும். அதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பெறுகிற ஊதியம் இன்றைக்கு வழங்கப்படுவதைவிட அதிகமாக்கப்பட வேண்டும் என்பது பல தரப்பைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது. அப்படி அவர்கள் பேசுவதிலே நான் எந்த ஒரு தவறும் காணவில்லை. ஆனால் ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்களுடைய ஊதியத்தோடு ஒப்பிட்டு ஒரு ஊதியம் கேட்கிறபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்க வேண்டிய வேற்றுமை மறைந்து விடுகிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். 'பெய்டு எம்பிளாயீஸ்' என்ற நிலைக்கு சட்டமன்ற உறுப்பினராகிய நாம் என்றைக்கும் நம்மைத் தாழ்த்திக்கொள்ள முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் ஊதியத்தை வைத்து மதிப்பிடப்படக் கூடியவர்கள் அல்ல, மதிப்பிடவும் கூடாது. சீப் செக்ரடரியோ, ஒரு பல்கலைக் கழகத் துணை வேந்தரோ, ஒரு கல்லூரியினுடைய முதல்வரோ, ஒரு பேராசிரியரோ பெறுகிற ஊதியத்தை விட என்னுடைய ஊதியம் குறைவு என்ற காரணத்தாலே, நான் அமைச்சராக இருந்தாலும் கூட நான் அவர்களை விட பொறுப்பிலே குறைந்தவன் என்று ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. பல்கலைக்கழகத் துணை வேந்தர்களுக்கு மத்திய அரசு உருவாக்கி இருக்கிற பல்கலைக்கழக மானியக்குழு, வழங்குகிற, அந்தக் குழு விதித்த ஊதிய விகிதப்படி 7,500 ரூபாய் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கு ஊதியம். 7,500 ரூபாய் அவர்களுக்கு ஊதியம் நம[illegible] [illegible]00 ரூபாயீ. ஆகவே நாம் மதிப்பை இழந்து

1989 மே 4] [பேராசிரியர் க. அன்பழகன்]

நம்முடைய மதிப்பு போய் விட்டது என்று கருதினால் நாம் ஏற்று இருக்கிற பொறுப்புக்கு மதிப்பு இல்லாமல் போவது மட்டுமல்ல, சட்டமன்றத்திலே தரப்பட்டு இருக்கிற பெரிய மதிப்பை நான் உணராதவன் என்று பொருள். அதே போலத் தான் மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் எவ்வளவு தியாகம் செய்தோம், எவ்வளவு தியாகம் செய்தோம், இப்பொழுதும் தியாகம் செய்கிறோம் என்று நண்பர் அப்துல் லத்தீப் அவர்களும், மற்றவர்களும் சொன்னார்கள். அந்தத் தியாகத்திற்கு மதிப்பு மக்கள் தருகிற வாக்குகள்தான். ஓட்டு தான் நம்முடைய தியாகத்திற்கு மதிப்பே தவிர, அந்த வாக்குகளை வைத்து இவ்வளவு பேருடைய ஆதரவைப் பெற்று இருக்கிறோம் என்பதை வைத்து நாம் மதிக்கப்படவேண்டுமே தவிர, ஒரு வேளை சட்டமன்ற உறுப்பினர்களுடைய வருமானத்தை வைத்துத்தான் மதிக்கப்படுகிறது என்று சொன்னால் என்றைக்குமே நமக்கு மரியாதை கிடைக்காது. தேவைகளுக்காக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை நிறைவேற்றுவதற்கு வசதிகள் கேட்பது என்பது நியாயம் தான். ஆனால் ஊதியத்தினுடைய அளவை வைத்து நாம் எண்ணிப் பார்ப்பதன் மூலம் நாமும் ஊதியம் பெறுகிறவர்கள் என்ற அந்த ஒரு எண்ணத்திற்கு நாம் ஆட்பட்டுவிடக் கூடாது.

அதே போல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பென்ஷன் என்று சொல்வது, அந்தச் சொல்லைக்கொண்டு சொல்வதை நான் விரும்பவில்லை. வழங்கப்படுகிற பென்ஷனை நானும் பெற்றவன் தான். அதிலே அல்ல மாறுபாடு. பென்ஷன் என்று சொல்வது உழைப்புக்குப் பின்னாலே, நீண்ட காலம் பணியாற்றியதற்குப் பின்னால் தரப்படுகிற ஓய்வூதியம். சட்டமன்ற உறுப்பினர்கள் 5 ஆண்டோ, 7 ஆண்டோ, 10 ஆண்டோ, 15 ஆண்டோ உழைத்தாலும் கூட நாம் பெறுவதை பென்ஷன் என்று அந்தக் கேட்டிகரியில், அந்த எண்ணத்தில் நான் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. மரியாதைத் தொகையாகத் தான் கருதப்படவேண்டுமே தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெறுகிற தொகை "As a term" பென்ஷன் என்ற சொல்லுக்கு ஆட்பட்டாலும்கூட இது பென்ஷன் என்ற அந்த எண்ணத்திலேயே நாம் கருதுவது முறையல்ல. அப்படி நான் சொல்கிற காரணத்தால் நான் யாரையும் மதிப்புக் குறைவாகக் கருதிப் பேசவில்லை. எனவே அந்த வகையில் வருகிற அந்த உதவித்தொகை என்பது உதவித் தொகை அல்லது இன்னும் சொல்லப் போனால் மரியாதைத் தொகை என்று பெறப்படுகிறது. அந்தத் தொகையை உயர்த்தத்தான் வேண்டுமென்று சொல்லுகிற போது நிதி நிலையைப் பொறுத்துத்தான் செய்யலாகும். ஏனென்றால், முன்னாள் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை இந்நாள் உறுப்பினரைப் போல மூன்று நான்கு மடங்கு. இன்றைக்கு 234 பேர் சட்டமன்றத்தில் இருக்கிறோம் என்று சொன்னால் ஏறத்தாழ 900 பேர், நான்கு மடங்கு முன்னாள் உறுப்பினர்கள் இருக்

கிறார்கள். அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டும். இருப்பதைக் குறையாக நான் கருதிச் சொல்லவில்லை. எனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் செய்ய வேண்டிய அந்தக் கடமைகளுக்கு நிதி செலவிட்டால்தான், அப்படி செலவிடுகிற போது அதனுடைய பயன் சட்டமன்றப் பணியினுடைய தரத்தை உயர்த்தும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயல் ஆற்றலை உயர்த்தும். சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகப் பொது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன்களை விரைவு படுத்தும். எனவே அது இன்றியமையாத ஒன்று. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது என்பது அவர்களுக்கு இக்கட்டான நிலைமை இல்லாமல் இருப்பதற்காக, ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்பதை நாம் மதிக்கிறோம் என்பதற்காக தவிர, வேறல்ல இன்றைய உறுப்பினர்களுக்கு எப்படி இலவசமாகப் பஸ் பாஸ் வழங்கப்படுகிறதோ அதே முறையிலே தான் முன்னாள் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்றால் இந்நாள் உறுப்பினர்களும் கடமையைச் செய்யவில்லை என்ற எண்ணம் தோன்றும்.

(பிற்பகல் 12-50)

இந்நாள் உறுப்பினர்கள் கடமையைச் செய்வதற்காக பஸ் பாஸோ, இரயில் பாஸோ வழங்குகிறோம். முன்னாள் உறுப்பினர்களுக்கும் அதே வகையான கடமையிருப்பதாகக் கருதி நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களுக்கு, அவர்களுடைய வசதிக்காக நாம்வழங்குகிறோம். அவர்கள் வசதிக்காக ஏதோ அவர்கள் தனிப்பட்ட முறையில் போக்குவரத்திற்காக வழங்குவதாக இருக்கலாம். அது இந்த முறையிலேதான் வழங்க வேண்டுமென்று சொன்னால் நம்முடைய உறுப்பினர்கள் இன்றைக்கு இந்த முறை சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் இப்பொழுது ஆற்றுகிற கடமையை இப்பொழுது ஆற்றத் தவறினால் பின்னர் விளையக் கூடிய நன்மைகள் தவறிப் போய் விடக் கூடும் என்று கருதப்பட வேண்டும். ஏற்கெனவே இருந்த உறுப்பினர்கர்களுடைய வசதிக்காகத் தான் நாம் ஏதாவது செய்ய வேண்டுமே தவிர—முடிந்தால் செய்ய வேண்டுமே தவிர, நம்மைப்போல் அவர்களும் இன்னின்ன மாதிரியான கடமையைச் செய்ய வேண்டும் அல்லது இன்னின்ன மாதிரியான வசதிகளைப் பெற வேண்டுமென்று வாதிடுவது உண்மையாக அவர்களிடத்திலே உள்ள அன்பு காரணமாக வாதிடுவதாக நான் கருதுவேனே தவிர, வேறல்ல இன்றைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய அதே நிலையில் மற்றவர்களை வைத்து நாம் பார்க்க முடியாது என்ற உண்மையை நான் சொல்வதற்காக மன்னித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

அதேபோல மற்றுமொன்று. பாராளுமன்றத்திலே இருக்கின்ற அந்த வசதிகள், அந்த வாய்ப்புக்கள், அவையெல்லாம் இங்கே இல்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. உத்திரப் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற வசதிகள், வாய்ப்புகள் இங்கே இல்லை என்று சுட்டிக்காட்டப்

பட்டது. ஒவ்வொரு மாநிலத்தினுடைய வரவு-செலவி லேயும் சில அடிப்படையான மரபுகள் ஊறிப் போய் விடு கின்றன. அந்த ஊறிப்போன மரபுகளை எளிதிலே மாற்ற முடிவதில்லை.

தமிழ்நாட்டிலே தொடக்கக் கல்விக்காக பல ஆண்டுக்கால மாகத் தொடர்ந்து, அந்தக் கல்வியைப் பரவலாக மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காக, அடித்தட்டு மக்களுக்காக, தாழ்த்தப் பட்ட மக்களுக்காக, இலவசக் கல்வி என்ற அடிப்படையிலே செலவிடப்படுகின்ற தொகையினுடைய விகிதாச்சாரத்தை நீங்கள் பார்த்தால், வேறு பல மாநிலத்திலே அந்த விகிதாச் சாரத்திலே அது வழங்கப்படவில்லை. தொடக்கக் கல்வியிலே நாம் செலுத்திய முக்கியத்துவம் என்பது, ஜனநாகத்திலே உள்ளபடியே மக்கள் முழு அளவில் உரிமையோடு, ஜனநாய கத்திலே பங்கு பெற வேண்டுமானால், படிக்காத பாரம்பரிய மாக இருக்கக் கூடிய, அடித்தட்டு மனிதனாக இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களும் ஓரளவுக்காவது கல்வி பெறுவதற் கான ஊக்கம் தர வேண்டும் என்ற முறையில் நீதிக் கட்சிக் காலத்திலேயே தொடங்கப்பட்டு, காமராஜர் காலத்திலே, வளர்க்கப்பட்டு, அண்ணா அவர்களால், கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்டு, எம்.ஜி.ஆராலும்-- அவரது ஆட்சி குறித்து எனக்கு மாறுபட்ட கருத்து சிலவற்றிலே உண்டு என்றாலும்-- அது தொடர்ந்து காப்பாற்றப்பட்டு இன்றைக்கும் நிலை நாட்டப்பட்டிருக்கின்ற நிலையில், கல்வித் துறையிலேயே மேல் நிலை வளர்ச்சிக்காக நிதி ஒதுக்குவதற்கான வாய்ப்பு வசதி களைக் கூட குறைத்து விடக் கூடிய அளவிற்கு, அடித்தட்டிலே செலவாகிற நிதி, இலவசக் கல்வி என்ற அடிப்படையினால் மிகப் பெரிய அளவாக இருக்கிறது. இதை நான் குறிப்பிடுவது முன்னாள் குறிப்பிட்ட வேறு ஒரு காரணத்திற்காக.

இப்படி ஒவ்வொரு மாநிலத்திலேயும் வளர்ந்து விட்ட மரபுகளை எளிதிலே மாற்றிவிட முடியாது. உத்தரப் பிரதேசத் திலே இல்லாத பல மரபுகள், மெட்ராஸ் ஸ்டேட் என்று இருந்த மதராஸ் மாகாணமாக இருந்த காலத்திலேயிருந்து, இரட்டை ஆட்சிக் காலத்திலேயிருந்து. மூதறிஞர் இராஜாஜி பிரதமராக—மாகாண பிரிமியராக இருந்த காலத்திலேயிருந்து, வளர்க்கப்பட்ட மரபுகள் நம்மைச் சில நிலைமைகளுக்கு ஆட்படுத்தியிருக்கின்றன. எனவேதான், நம் முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு அதிகம் நம் முடைய நியாயங்களை எடுத்துச் சொன்னாலும்கூட, ஊருக்காக உலகத்திற்காக, கட்டுப்படுகிற ஒரு நிலைமைக்கு நம்மை நாமே ஆட்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

பல்வேறு துறைகளிலே அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நாம் அதிகம் எண்ணுகின்ற காரணத்தினால், சட்ட மன்றத்திலே இடம் பெற்றிருக்கின்ற நாமும், நம்முடைய அவை

யைக்கூட மொத்தத்திலே வைத்துப் பார்க்கின்றோமே தவிர தனிப்பட்ட முறையில் அல்ல, அமெரிக்காவிலே இருக்கின்ற செனட் மெம்பரோடு, இந்தியாவிலே இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினரை ஒப்பிட முடியாது.

பாராளுமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கின்ற வசதிகளோடு, நம்முடைய நிலையையும் நாம் ஒப்பிட முடியாது. ஒப்பிடவும் கூடாது. நம்முடைய சூ நிலையில் நாம் என்னென்ன செய்ய முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த வகையிலே இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதற்கு இரண்டு காரணங்கள்.

ஒன்று, நம்முடைய கருத்தும், நோக்கமும் இன்ன வடிவத்திலே இருக்க வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட வசதிகள் எல்லாம், அவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்றோ, அந்த வசதிகள் இருந்தால் அவர்கள் அதிகம் பணியாற்ற மாட்டார்கள் என்றோ நான் கருதவில்லை. வாய்ப்புக்களைப் பொறுத்து அவைகள் தொடர்ந்து இந்த அரசால், அல்லது இன்னும் சொல்லப் போனால், சட்டமன்றத்தால் கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்களின் மூலமாக நம்முடைய வாய்ப்புக்கும் வசதிக்கும் ஏற்ப அந்த வசதிகளைச் செய்து தர முயற்சிப்போம் என்று மட்டும் நான் முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இங்கு கூறப்பட்ட சில கருத்துக்களுக்கு நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குள்ளே மற்றவர்கள் மிக அதிகமாக வருகிறார்கள் என்று சிலர் குறைபட்டாலும் மிகச் சிறந்த முறையிலே இயங்குகிறது என்று திரு. சிங்காரம் அவர்களும் சொன்னார்கள். அப்படியே அவர் தொடர்ந்து சொல்லுகின்ற நிலைமை இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதே நேரத்தில் வெளியார் வருவதைப் பற்றி திரு. லத்தீப் அவர்கள் மிக வேகமாகக் குறிப்பிட்டார்கள். சட்டமன்ற விடுதியில் யார் யார் வரலாம் என்று கட்டுப்படுத்துகிற அதிகாரம் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ள அவைக் குழுவிற்கு இருக்கிறது. அவர்கள் இருந்து தீர்மானிக்கிற குழுவிலே அதைத் தீர்மானித்தால் யார் வருவதையும் கட்டுப்படுத்தலாம். அவர்களே அப்படி ஒரு தடை வேண்டாம் என்று எண்ணினால் அதற்கேற்ப அந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதி தொடர்ந்து செயல்படும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த உரிமை அவர்களுக்கே இருக்கிறது.

அடுத்து விடுதிகளுக்கு எல்லாம் பெயர் வைக்கலாம் என்ற ஒரு கருத்தை நம்முடைய குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். சேரன் விடுதி, சோழன் விடுதி, பாண்டியன் விடுதி என்பதைப் போன்ற பெயர்களை வைக்கலாம் என்று சொன்னார்கள். அவர்களுடைய ஆசையை நான் வரவேற்கிறேன். பழைய விடுதி,

களுக்கெல்லாம் இப்படிப் பெயர் வைக்க ஆரம்பித்தால் சேரனுக்கும், சோழனுக்கும் பெருமையாக இருக்காது என்ற காரணத்தால் புதிய விடுதி கட்டுகிற காலம் வருகிறபோது ஏற்ற பெயரைச் சூட்டலாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசினர் தோட்டத்தைப் பற்றி பல குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அங்கே இருக்கிற நீர்நிலை, மற்ற நிலை எல்லாம் பற்றி சொன்னார்கள்; அது பொதுப்பணித் துறையால் நிர்வகிக்கப்படுகிற ஒன்று. அவர்களுக்கு அதுபற்றித் தெரிவிக்கப்படும்.

லிப்ட்டுகள் இயங்கவில்லை என்று சொன்னார்கள். அதுவும் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் லிப்ட்டில் போக வேண்டிய கட்டாயமான நிலையில் உள்ளவர். அவர் தெரிவித்தார். நான் கேட்டபோது விடுதி அலுவலர் தெரிவிக்கின்ற விவரம், ஆறு மின் தூக்கிகளில் இரண்டு மின் தூக்கிகள் உறுப்பினர்களுக்காகவே இயக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்கள். அது ஒருவேளை செம்மையாக இயங்காவிட்டால் அதைச் சீர் செய்வதற்கு வழி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வளாகத்தில் வெந்நீர், வெப்ப நீர், தட்ப நீர், குளிர் நீர் இவைகள் எல்லாம் கிடைக்கவில்லை என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த அவையின் செயலாளர் மூலமாக நான் அறிகிற செய்திகள் தெரிவிப்பது, இந்த வளாகத்தில் இரு மருங்கிலும் குளிரூட்டப்பட்ட தண்ணீர் தரக்கூடிய குளிர்பான சாதனங்கள் உள்ளன. இந்தச் செயலகத்தில் வெந்நீர் வசதி அளிக்கக்கூடிய சாதனம் உள்ளது என்றும் தெரிவிக்கிறார்கள். தேவையானால் தேவைக்கு ஏற்ப அவற்றை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு விடுதிகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. சைவ உணவு விடுதி ஒன்று, அசைவ உணவு விடுதிகள் இரண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்திலேயே ஒரு சைவ உணவகமும், இரண்டு அசைவ உணவகங்களும் உறுப்பினர் வசதிக்கென காலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையில் இயங்குகின்றன என்று தெரிவித்து இருக்கிறார்கள். அவைகளில் எல்லாம் ஏதேனும் குறைகள் இருக்குமானால் நடைமுறையில் அவைகளைச் சீர்செய்ய முடியும்.

அதைப்போல இங்கே ஏற்கனவே நூலகத்தின் சார்பிலே 'ஜெராக்ஸ் மெஷின்' ஒன்று காபி எடுப்பதற்காக இருக்கிறது. அதுவும் பழுதுபட்டுவிட்டது என்று இப்போது தெரிவிக்கிறார்கள். புதிய 'ஜெராக்ஸ் மெஷின்' ஒன்று விரைவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த குறிப்புகள் அனைத்தையும் உங்களுக்குத் தெரிவிக்க முடியாவிட்டாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த குறிப்புகள் அனைத்தையும் நான் உள்ளத்தில் கொண்டு ஆற்றக் கூடிய பணிகளைத் தொடர்ந்து ஆற்றுவேன் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தை அதிக அளவிற்கு உயர்த்துவதற்கான வாய்ப்பு இல்லையென்ற நிலையில் இப்போது அவர்களுக்கு வழங்கி வருகிற ஈட்டுப்படி 500 ரூபாயாக இருப்பதை 200 ரூபாய் உயர்த்தி 700 ரூபாயாக வழங்குவது என்று தீர்மானிக்கப்படுகிறது. இனி மாததத்தில் மொத்தமாக 1,750 ரூபாய் சட்டமன்ற உறுப்பினர்கள் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதி வளம் பெறுகிறபோது அடுத்த ஆண்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய உறுப்பினர்கள் மெய் மறந்து போய் இருக்கிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: சட்டமன்றத்தில் விவாதம் வருகிற வரை காத்திராமல் மறுபரிசீலனை செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியவர்களுடைய மாத ஊதியம் 1,700 ரூபாயிலிருந்து 1,900 ரூபாயாக உயர்த்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது அமைச்சர்களுடைய நிலையில் ஊதிய உயர்வு அளிக்க இயலாது என்பதை அமைச்சர்களில் ஒருவன் என்ற முறையில் அமைச்சர்களுக்கு எல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கேயுள்ள சட்டமன்றத்திலே பணியாற்றுகிற அலுவலர்கள், அதுவும் குறிப்பாக நாளைய தினம் இந்த மன்றத்திலே பொன் விழா கொண்டாடப்படுகிற காரணத்தால் சட்டமன்ற அலுவலகத்தில் முறைப்படுத்தப்பட்ட ஊழியர்களாகப் பணியாற்றுகிற ஊழியர்கள் அனைவருக்கும் 100 ரூபாய் பரிசாக வழங்கப்படும். அதைப்போல தற்காலிகமாக அவ்வப்போது வந்து பணியாற்றுகிற ஊழியர்களுக்கு 50 ரூபாய் பரிசாக வழங்கப்படும்.

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குழுக்களுக்குச் செல்கிற போது, பலராகச் செல்வதற்கு வசதி இருப்பதற்காக மினி-பஸ் ஒன்று சட்டமன்றத் துறையால் பராமரிக்கப்படுகிற வகையில் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 மே 4] [பேராசிரியர் க. அன்பழகன்]

என்னுடைய உரை மூலமாக சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய குறைகள் எல்லாம் போக்கப்படவில்லை என்பதை நான் உணர்கிறேன். குறைகளைப் போக்குவதற்கான முயற்சியைத் தொடர்ந்து நான் மேற்கொள்வேன் என்ற உறுதியைக் கூறி என்னுடைய உரையை நான் முடிக்கிறேன்.

(பிற்பகல் 1-00).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பிற்பகல் 1.00 மணி. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 7— மாநிலச் சட்டமன்றம்.

திருமதி பாப்பா உமாநாத் மற்றும் திரு. எஸ். எஸ். ராமசுப்பு ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 7— மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,01,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 8 — தேர்தல்கள்.

திருவாளர்கள் கோ. வீரையன் மற்றும் எஸ். எஸ். ராமசுப்பு ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 8 — தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,30,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

வாயார இந்த அரசை வாழ்த்துகிறார்கள். அவர்களுடைய வாழ்த்தோடு என்னுடைய வாழ்த்தையும் இணைத்து என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால் ஒரு பாடல் வரியை நினைவு கூர்ந்து என் உரையை முடிக்கிறேன். ''ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை'' என்பது போல இந்த அரசினுடைய திட்டங்களை, இந்த அரசினுடைய சீரிய சிறப்புகளை யாராலும் மறைக்க முடியாது என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

7. விதி 110-இன் கீழ் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் அறிக்கை

முதலமைச்சர் பிறந்தநாளையொட்டி இலவச கண் சிகிச்சைத் திட்டங்களைத் துவங்குதல் குறித்து

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110இன் கீழ் இந்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்:

''கண் பார்வையற்றவர்களுக்கு இலவச கண் சிகிச்சை அளிக்கும் நோக்கத்தோடு தமிழக முதல்வர் அவர்கள் தனது முந்தைய பதவிக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு முகாம்களை நடத்தியதை நாம் நன்கு அறிவோம். அதை விரிவுபடுத்தும் எண்ணத்தோடு இந்த ஆண்டு கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் தேதி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இடத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்துவது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், இந்த ஆண்டில் சென்னை, செங்கை—அண்ணா, திருச்சி, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களையும் கண் புரையற்ற மாவட்டங்களாக (கேட்டராக்ட் ப்ரீ டிஸ்டிரிக்ட்ஸ்) அறிவித்து, இந்த நோயை அந்த மாவட்டங்களில் இல்லாமல் செய்வதுஎன்றும் படிப்படியாக மற்ற மாவட்டங்களிலும் இதை விரிவு படுத்துவது என்றும் இந்த அரசு முடிவு செய்துள்ளது''

மேலும், கண் சிகிச்சைக்காக நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் தனியார் கண் மருத்துவமனைகளையும் பயன்படுத்திக் கொள்வது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது,

8. அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்.

9. சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5-5-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு **ஒத்திவைக்கப் பெற்றது**.

TRUTH ALONE TRIUMPHS

8. அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

9. சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5-5-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

127. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 14–8–1987 ஆம் நாளிட்ட 923 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

128. சிவிலியன் பிரிவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கடலோரப் பாதுகாப்பு ஊழியர்களுக்கு சிற்றுண்டி கடைத் துறையின் மூலம் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 11–10–1988 ஆம் நாளிட்ட 1325 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

129. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1959) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

130. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

131. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

154. பெருந் தொழில்கள் பற்றிய செயல் திட்ட ஆய்வுரை, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

155. 'சிப்காட்'—தமிழக தொழில் வளர்ச்சியின் அச்சாணி என்ற புத்தகம்.

[1989 மே 4

கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

[69 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

பேரவைத் தலைவர் அவர்களே,

மானியக் கோரிக்கை எண். 8 தேர்தல்கள் என்பதன் கீழ் 1989-90ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ. 8,30,42,000 அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்படும் நிதி பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில் உள்ள அலுவலர் மற்றும் பணி யாளர்களின் சம்பளம், பயணப்படி செலவுகளுக்கும், தேர்தல் நிர்வாகத்தின் சீரான நடைமுறைக்காகவும் வாக்காளர் பட்டியல் கள் சிறப்புத் திருத்தம் மற்றும் இவ்வருடம் எதிர்பார்க்கப்படுகிற நாடாளுமன்றத் தேர்தல்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

2. தமிழக சட்டமன்றப் பேரவைக்கு ஒரே நாளில் 21-1-89 அன்று பொதுத் தேர்தல் செவ்வனே நடத்தப்பட்டது. மொத்தம் 42,878 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. இதில் ஆண் களுக்காக 14,404 வாக்குச் சாவடிகளும், பெண்களுக்காக 14,404 வாக்குச் சாவடிகளும், இருபாலரும் வாக்களிக்க 13,817 வாக்குச் சாவடிகளும், நலிந்த பிரிவினருக்காக 253 வாக்குச் சாவடிகளும் ஆக மொத்தம் 42,878 வாக்குச் சாவடிகள் அமைக் கப்பட்டன. கூடுமானவரையில் எந்தவொரு வாக்காளரும் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் நடந்து வந்து வாக்களிக்க வேண்டிய சிரமம் இல்லாதவாறு வாக்குச் சாவடிகள் அமைக்கப் பட்டன. தேர்தல் முடிந்த அடுத்தநாளே வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. வாக் காளர்களுக்கும், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் விதிகளுக்குட்பட்ட தேவையான வசதிகளும் செய்து தரப்பட்டது.

3. நடப்பு நிதியாண்டில் மக்களவைக்கு தேர்தல் நடைபெற வேண்டும். கடந்த சட்டமன்றப் பேரவை தேர்தலின் போது வாக்காளர்கள் எந்த வாக்குச் சாவடிகளில் வாக்களித்தார்களோ அதே வாக்குச்சாவடிகளில் மக்களவைத் தேர்தலிலும் வாக் களிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். தற்சமயம் மூன்று நாடாளு மன்றத் தொகுதிகள் அதாவது பொள்ளாச்சி (எஸ்.சி.), மதுரை மற்றும் கரூர் ஆகியவை இம்மாநிலத்தில் காலியாக உள்ளன. 1-4-1989 அன்று 18 வயது நிறைவடைந்தவர்களையும் அதற்கு மேல் வயதானவர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற் கான சிறப்புத் திருத்தம் தற்போது நடைபெற்று வருகிறது. வாக்காளர்கள் இறுதிப் பட்டியல் 15-6-1989 அன்று வெளியிடப் படும்.

1989 மே 4]

4. தமிழக மேல்சபையை நிறுவுவதற்கான தீர்மானம் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களின் பதவிக் காலம் 24-7-1989 அன்று முடிவடைவதால், இந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு, மாநிலங்களவைக்கு தேர்தல் ஜூலை மாதம் 24-ந் தேதிக்கு முன்னர் நடைபெறும்.

5. தேர்தல் மானியக் கோரிக்கையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் சுருக்கத்தை தந்துள்ளேன். இதனை ஏற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

டி.2 53-103—19

[1989 மே 4

1989-90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்—கோரிக்கை எண் 8-கொள்கை விளக்கக்குறிப்பு—தேர்தல்கள்.

''மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்'' என்பதன்கீழ் 1989-90 ஆம் ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ. 8,30,42,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

2015. தேர்தல்கள் (திட்டத்தில் சேராதது)

	ரூபாய்
102. தேர்தல் அதிகாரிகள்—	
எஏ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள்	97,96,000
எபி. மேலவைத் தொகுதிகள் ..	11,000
103. வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல்	
எஏ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்	33,74,000
எசி. மேலவைத் தொகுதிகள்	2,000
104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் அவற்றை நடத்துவதற்கான செலவுகள்	11,86,000
105. நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆகும் செலவுகள் :	
எஏ. இடைத் தேர்தல்கள்	13,000
எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்	6,85,88,000
106. மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :	
எஏ. மாநிலச் சட்டமன்றப் பேரவை ..	57,000
எபி. சட்டமன்ற மேலவை	15,000
மொத்தம் ..	8,30,42,000

1989 மே 4]

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது :

102. தேர்தல் அதிகாரிகள் :

எஎ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் :

மதிப்பீடு ரூ. 78,91,000+18,70,000+35,000=97,96,000

தலைமைச் செயலகத்தில், பொதுத் (தேர்தல்கள்) துறைக்குத் தலைமைத் தேர்தல் அதிகாரியும், இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியும் (இணைச் செயலாளர்) சார்புச் செயலாளரும் பொறுப்பு வகிக்கின்றனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு பிரிவு அலுவலர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், இன்னும் மற்ற ஊழியர்களும் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளியூர் பகுதிகளில் எல்லா மாவட்ட (சென்னை நீங்கலாக) ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், தேர்தல் பதிவு அதிகாரிகளாகப் பொறுப்பு வகிக்கும் வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் மற்றும் கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் இருவர், தட்டச்சர் ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், சிற்றெழுத்தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்சமயம் ஓராண்டுக் காலத்துக்கு மட்டும் ஒரு மாவட்ட வருவாய் அலுவலரும் மாநகராட்சி ஆணையருக்கு தேர்தல் பணிகளில் உதவி புரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்களின் சம்பளச் செலவுகள் தவிர, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் பதிவு அதிகாரிகள், உதவித் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆகியோரின் பயணச் செலவுகளும் இத்தலைப்பின் கீழ் அடங்கும். அவர்களின் அலுவலகச் செலவுகள், எதிர்பாராத செலவினங்கள், தபால் தந்தி தொலைபேசிக் கட்டணங்கள், தேர்தல் சார்பாக சிறப்புப்பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின் கீழ் அடங்கும். மேலும் அகவிலைப்படி, கருணைத் தொகை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 18,70,000 இந்த உதவி தலைப்பின் கீழ் அடங்கும். இச் செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்கிறது.

[1989 மே 4

102, தேர்தல் அதிகாரிகள்.
எபி. மேலவைத் தொகுதிகள்
மதிப்பீடு ரூ. 11,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தி அமைக்கும் பணிக்காக அவ்வப்போது நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் போன்றவை இத்தலைப் பின் கீழ் அடங்கும். மேலவை அமைப்பதற்கான தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மாநில அரசே மொத்த செலவினையும் ஏற்றுக்கொள்கிறது.

103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் :
எஎ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் :
மதிப்பீடு : ரூ. 33,74,000.

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லா விதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காகத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் சம்பளம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 18 வயது பூர்த்தியானவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் சிறப்பு திருத்தத்திற்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்திற்கும், சென்னை ஆவணக்காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களை காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு சிற்றெழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காகவும் மேலே குறிப்பிட்ட அளவில் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

தற்போது 1-4-1989-ஐ அடிப்படையாக வைத்து 18 வயது பூர்த்தியான அனைவரையும், வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான சிறப்புத்திருத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

(1) வீடுவீடாகச் சென்று கணக்கு எடுப்பதும் மேற்பார்வை செய்வதும்.	10-2-1989 வெள்ளி முதல் 25-3-1989 சனி வரை.
(2) திருத்தப்பட்டியல்கள் தயாரித்தலும் அச்சிடுதலும்.	26-3-1989 ஞாயிறு முதல் 26-4-1989 புதன் வரை.

1989 மே 4]

(3) வரைவுப்பட்டியல் வெளியிடுதல் (தற்போதுள்ள பட்டியலை திருத்தப் பட்டியலோடு சேர்த்து வெளியிடுதல்). — 27-4-1989 வியாழன்.

(4) பட்டியலில் பெயர்களை சேர்ப்பதற்கான மனுக்கள் செய்வதற்கு கால வரையறை. — 27-4-1989 வியாழன் முதல் 15-5-1989 திங்கள் வரை.

(5) பெயர்களைச் சேர்ப்பதற்கான மனுக்கள் மற்றும் ஆட்சேபணைகள் மீது முடிவுகள் செய்தல் மற்றும் திருத்தப்பட்டியல்கள் அச்சிடுதல். — 16-5-1989 திங்கள் முதல் 14-6-1989 புதன் வரை.

(6) பட்டியல் இறுதி வெளியீடு .. 15-6-1989 வியாழன்.

இச்செலவினங்களை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் :
ஏசி. மேலவைத் தொகுதிகள் :
மதிப்பீடு : ரூ. 2,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை அச்சிடுவதற்கான செலவுகள் மட்டும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். மேலவை அமைப்பதற்கான தீர்மானம், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மாநில அரசே மொத்த செலவினையும் ஏற்றுக்கொள்ளுகிறது.

104. நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் இவற்றை நடத்துவதற்கான செலவுகள் மதிப்பீடு ரூ. 11,86,000.

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் அடங்கும். 1984-ம் ஆண்டில்தான் நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டிடங்களுக்கான வாடகை. அதற்கான காவலர்களின் சம்பளம், வாக்குப்

பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், பொதுத்(தேர்தல்) துறையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு, பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்கள் இதன்கீழ் அடங்கும். மேலும் வருகின்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல்களின் போது வாங்கப்பட இருக்கும் வாக்குப் பெட்டிகளின் செலவினமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்களுக்காக இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்கிறது.

105. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :
ஏஏ. இடைத் தேர்தல்கள் :
மதிப்பீடு : ரூ. 13,000.

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றால், அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். தற்சமயம் மூன்று நாடாளுமன்றத் தொகுதிகள் அதாவது பொள்ளாச்சி (எஸ்.சி), கரூர் மற்றும் மதுரை ஆகியவை இம்மாநிலத்தில் காலியாக உள்ளன. ஆனால் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் இவ்வாண்டு இறுதியில் நடைபெற உள்ளதால் இக்காலியிடங்களை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகள் ஏதும் தென்படவில்லை. இவற்றிற்காக இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுகிறது.

105. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :
எபி. நாடாளுமன்றத் தேர்தல்கள் :
மதிப்பீடு : ரூ. 6,85,88,000.

நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசினரால் திருப்பித் தரப்படும்.

1984 டிசம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. தமிழக சட்டமன்றப் பேரவைக்கு 1989 சனவரியில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. எனவே பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் இவ்வாண்டு இறுதியில் அதாவது டிசம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது. எனவே இதற்காக தற்காலிகமாக அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 4]

ஊதியங்களையும் வாக்குச் சீட்டுகள் அச்சிடவும் மற்றும் இதர பொருட்களை வாங்குவதற்காகவும். மேற்குறிப்பிட்ட ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மத்திய அரசே மேற்கொள்ளுகிறது.

106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எஎ. மாநிலச் சட்டமன்றப் பேரவை :

மதிப்பீடு : ரூ. 57,000.

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தலோ இடைத்தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன் கீழ் அடங்கும்.

1989 சனவரி திங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. 1989-90-ல்பொதுத்தேர்தல்கள்துறையின் தலைமைச் செயலகத் துறைகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ப்ளெயின் பேப்பர் காப்பியர்கள் இரண்டு வாங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இவற்றிற்கான காகிதம் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்காக இத்தலைப் பின்கீழ் மேற்கண்ட நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசே மேற்கொள்ளுகிறது.

106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எபி. சட்டமன்ற மேலவை :

மதிப்பீடு: ரூ. 15,000.

மேலவை தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படுகின்றன.

மேலவை அமைப்பதற்கான தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களின் பதவிக்காலம் 24-7-1989 அன்று முடிவடைகிறது. மாநிலங்களவைக்கு தேர்தல் 24-7-1989 தேதிக்கு முன்னர் நடைபெறும்.

மாநில அரசே இதன் மொத்தச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS